ஜனவரி 30 - பெப்ரவரி 05, 2011 January 30 - February 05, 2011 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## பனிப்பாறையில் இரு காதலர்கள்

உண்மைச் சம்பவம்



# இறுக்கமடையும் பாதுகாப்பு

# கொழும்பில் நடந்தேறிய மாலைகள் இல்லாத மாநாடு

இலங்கைத்தமிழ் எழுத்தாளர்களுக்கிடையே மரபுவழி எழுத்தாளர்கள், முற்போக்கு எழுத்தாளர்கள் என்ற பிரிவுகள் இருந்த காலங்களில் எழுத்தாளர்களிடையே பிரிவினைகள் நிலைகொண்டிருந்தன. அந்த நிலை மாறி, வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர்கள் பிரதேச வாதமின்றி ஒன்றிணைந்து, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர்களையும், ஐரோப்பிய நாடுகள், அவுஸ்ரேலியா, கனடா ஆகிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களையும் ஒன்று சேர்த்து 'சர்வதேச தமிழ்

**ஊர்வலத்தில் கலந்து கொண்ட எவருக்கும் மாலைகள் அணிவிக்கப்படவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. ஒரு நிமிட மௌன அஞ்சலியோடு ஆரம்ப மான மாநாட்டில் தமிழ் வாழ்த்து மாநாட்டுக்கீதம், வரவேற்பு நடனம் ஆகியவை தொடராக இடம் பெற்றன. இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் எழுத்தாளர்கள் என வெவ் வேறு மதங்களைப்பின்பற்றும் தமிழ் எழுத் தாளர்கள் கலந்து கொண்டமையால் இம் மாநாட் டில் கட வுள் வாழ்த்து இடம் பெறவில்லை.**

எழுத்தாளர்கள் மாநாடு'' ஒன்றினை அண்மையில் கொழும்பில் நடத்தியுள்ளமை வரலாற்றில் பதியப்பட வேண்டிய ஒரு சிறப்பு அம்சமாகும்.

இந்த மாநாட்டுக்கு வித்திட்டவர் ஒரு புலம் பெயர் தமிழர் ஆவார். இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர் வரிசையில் புகழ்பூத்த எழுத்தாளராகவும், சிறந்த ஊடகவியலாளராகவும் விளங்கிய லெ.முருகபூபதியே அவராவார். புலம்பெயர்ந்து அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வரும் அவர் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக இலங்கைக்கு அடிக்கடி வருகை தந்து இலங்கையின் சகல தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களை அடிக்கடி சந்தித்து மேற்கொண்ட முயற்சியின் பெறுபேறாக எதுவித அரசியல் கலப்பும் இல்லாத மாநாடாக இந்தச் சர்வதேச மாநாடு நடந்தேறியது. உலக மாநாடுகள் பலவற்றிலுமிருந்து வந்த தமிழ், முஸ்லீம் எழுத்தாளர்களுடன் எம்நாட்டைச் சேர்ந்த தமிழ், முஸ்லீம் எழுத்தாளர்கள் உட்பட ஆயிரம் எழுத்தாளர்கள் வரை கலந்து சிறப்பித்த இம்மாநாடு சென்ற ஜனவரி ஆறாம் திகதி முதல் கொழும்பு உருத்திரா மாவத்தையில் உள்ள கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

அன்று காலை சரியாகப் பத்து மணிக்கு காலி வீதியிலிருந்து உருத்திரா மாவத்தை ஆரம்பிக்கும் இடத்தில் சகல எழுத்தாளர்களையும் ஒன்று கூடுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து தமிழ் எழுத்தாளர்கள், விருந்தினர்கள் மேள, நாதஸ்வர இசையுடன் மாநாடு நடைபெறும் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்துக்கு ஊர்வலமாகச் சென்றடைந்தனர்.

### மாலைகள் இல்லா மாநாடு

ஊர்வலத்தில் கலந்து கொண்ட எவருக்கும் மாலைகள் அணிவிக்கப்படவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. ஒரு நிமிட மௌன அஞ்சலியோடு ஆரம்ப மான மாநாட்டில் தமிழ் வாழ்த்து மாநாட்டுக்கீதம், வரவேற்பு நடனம் ஆகியவை தொடராக இடம் பெற்றன. இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் எழுத்தாளர்கள் என வெவ்வேறு மதங்களைப்பின்பற்றும் தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொண்டமையால் இம் மாநாட்டில் கடவுள் வாழ்த்து இடம்பெறவில்லை.

வைத்தியகலாநிதி தி.ஞானசேகரம், இணைப்பாளர் லெ.முருகபூபதி, பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, வைத்திய கலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோர் முறையே வரவேற்புரை, தொடக்கவுரை, தலைமையுரை, வாழ்த்துரை, அறிமுகவுரை நிகழ்த்தினர். மாநாட்டு மலர், சிறப்பு மலர்கள் பற்றிய மலர் வெளியீட்டுரையை கம்பவாரிதி இ.ஜெயராஜ் நிகழ்த்தினார். இதில் விசேட அம்சம் என்னவென்றால் தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்களின் முதன்மை வெளிப்பாடான மாலைகள் சூடிவிழா விருந்தினர்களை வரவேற்கும் நிகழ்ச்சி எச்சந்தர்ப்பத்திலும் இடம்பெறவில்லை. இந்நிகழ்வானது மாலை மரியாதை இன்றியும் விழாக் களை நடத்த முடியும் என்பதை வெளிப்படையாக எல்லோர் மனதிலும் பதியவைத்தது.




ஆரம்பநாள் நிகழ்வுகள் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது.

அன்றையதினம் மாலை நேர நிகழ்வாக 'கணனியும் வலைப்பதிவுகளும்' என்னும் விடயம் பற்றி ஆய்வரங்கு இடம்பெற்றது. இதற்கு இந்தியாவிலிருந்து வருகை தந்த இணைப் பேராசிரியை முனைவர். மு.க.தங்கம் அவர்களும் இலங்கை யைச் சேர்ந்த எழுத்தாளர் வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தனும் இணைந்து தலைமை தாங்கினார்கள்.



### ஆய்வரங்குகளும், கருத்தரங்குகளும்

அடுத்தடுத்து நான்கு நாட்கள் ஆய் வரங்குகளும், கருத்தரங்கங்களும் நடைபெற்றன. இவ்வரங்குகளிலும் என்றுமில்லாதவாறு விசேட அரங்கு முறை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆய்வரங்கலும் தலைமை ஒருவரென்றில்லாமல் இருவர் தலைமையும், ஆய்வு மதிப்பீட்டாளர்களாக இருவரும் இணைப்பாளராக ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆரம்பத்தில் பேராளர்கள் எழுத்து மூலம் தமது கருத்தை வெளிப்படுத்த மட்டுப்படுத்தப்பட்டார்கள். இதுபேராளர்களுக்கிடையே அசௌகரியத்தை ஏற்படுத்தியது. அதேபோன்று ஆய்வாளர்கள் மதிப்பீட்டாளர்கள் தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்த வழங்கப்பட்ட கால அவகாசம் மட்டுப்படுத்தப்பட்டமையால் அது அவர்களை ஆதங்கப்படவைத்தது. மேலும் நாளொன்றுக்கு நான்கு மண்டபங்களில் ஒரேநேரத்தில் வெவ்வேறு தலையங்கங்களில் ஆய்வரங்குகள் இடம்பெற்றமையால் பேராளர்கள் தாம் விரும்பித் தெரிவுசெய்த ஆய்வரங்குகளிலேயே கலந்து கொண்டனர். இச்செயலானது பேராளர்களிடையே பெரும் சங்கட நிலையைத் தோற்றுவித்தது. கணனியும் வலைப்பகுதிகளும், ஈழுத்துத்தமிழ் இலக்கியம், பெண் எழுத்து, சிறுவர் இலக்கியம், உலகத்தமிழ் இலக்கியம், பல்துறை, அவைக் காற்றுக்கலைகள், சிற்றிதழ், மொழி பெயர்ப்பு, செவ்விதாக்கம், நாட்டாரியல் ஆகிய துறைகள் சார்ந்த ஆய்வரங்குகளும் ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறியில் எதிர்ப்பிலக்கியத்தின் வகிபாகம், நலிவுற்ற மக்கள் தொடர்பான இலக்கியப் பதிவுகள் போதிய கவனத்தைப் பெற்றுள்ளனவா? நவீன தமிழ் இலக்கியம் உலகதரத்தை எட்டியுள்ளதா? ஆகிய விடயங்கள் தொடர்பான கருத்தரங்குகளும் இடம்பெற்றன. கருத்தரங்குகளைப் பொறுத்தவரை பேராளர்களின் கருத்துக் களைக் களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டமையினால் இக்கருத்தரங்குகள் யாவும் களைகட்டியிருந்தன.

### சிங்களவர் ஒருவர்

மொழிபெயர்ப்பு என்ற தலைப்பில் மூன்றாம் நாள் ஆய்வரங்கு இடம்பெற்றது. வேற்றுமொழிகளிலிருந்து தமிழுக்கும் தமிழ்மொழியிலிருந்து வேற்றுமொழிகளுக்கும் மொழி பெயர்க்கப்பட்ட நாவல்கள் சிறுகதைகள், கவிதைகள் சம்பந்தமான ஆய்வு பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், விமர்சகரும் பிரபல எழுத்தளருமான கே.எஸ்.சிவகுமாரன் ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெற்றது. வேற்றுமொழி பேசும் சிங்களவரான முனைவர் மடுளுகிரியே விஜயரத்தினா சுத்தமாக தமிழில் உணர்வுபூர்வமாகப் பேசியமை பேராளர்கள் மற்றும் சபையோரைப் பிரமிக்க வைத்தது. இதற்கான காரணம் ஆகும். அரசியல் இலாபங் களுக்காகத் தமிழைக் கொச்சைப்படுத்திப் பேசும், அரசியல் இலாபங்களுக்காகத் தமிழரைக் கொச்சைப் படுத்திப் பேசும், அரசியல்வாதிகள் போலல்லாமல் சொற்சுவை, பொருட்சுவையோடு முனைவர் மடுளுக்கிரியேயின் பேச்சு அமைந்திருந்தது. அவரது பேச்சு அவையினர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இந்தச் சர்வதேச எழுத்தாளர் மாநாடு இன்னும் பல சாதனை எழுச்சிகளைக் கொண்டிருந்தமையை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**அரியகலையூரான்**

இந்த மாநாட்டில் நமது இலங்கை நாட்டைச் சேர்ந்த தமிழ்ப் பேசும் பெண் முஸ்லீம் எழுத் தாளர்கள் பலர் தமது கலாசார, பண்பாடுகளை ஓரளவு தளர்த்திக் கலந்து கொண்டு தமிழுக்கு அணி சேர்ந்தமையானது சிறப்பம்சமாகவே தென்பட்டது. முதுபெரும் எழுத்தாளர்களினதும், பேராசிரியர்களினதும் பேச்சுக்களில் தளர்வு நிலை காணப் பட்டாலும் தங்களின் பங்களிப்பை நிறைவுறச் செய்து மாநாட்டுக்கு உரம் சேர்ந்தார்கள். இளம் ஆய்வாளர்கள் தமது பங்களிப்பை கனகச்சிதமாகச் செய்து சபையோரின் பாராட்டுதல்களையும் பெற்றார்கள். இனிவரும் காலங்களில் தமது பலமான ஆய்வுகளின் மூலம் இலக்கிய விழாக்களை இவர்கள் சிறப்பிப்பார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை. ★★★

# தெற்கு சூடான்: இருண்ட கண்டத்தின் ஐம்பத்தி ஐந்தாவது புதுத்தேசம்

கடந்த வாரங்களில் சர்வதேச அரசியலில் மிகவும் சூடுபிடித்திருந்த விஷயங்களில் ஒன்று, தெற்கு சூடானின் விடுதலைக்கான பொது வாக்



கெடுப்பு. வடக்கு சூடானின் அரபு இஸ்லாமிய அடிப்படைவாத அல்லது பேரினவாத அரசுக்கு தென்பகுதியின் பழங்குடி மக்களின் விடுதலைக்காகப் போராடி வரும் சூடானிய மக்கள்விடுதலை அமைப்புக்குமிடையில் (SPLM) இரு தசாப்தங்களாக (இருபத்திரண்டு வருடங்கள்) நிலவிய உள்நாட்டுப் போர், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன், 2005 இல் கென்யாவில் நடத்தப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்வுக்கு வந்தது. இருபகுதியினராலும் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கை மிகவும் உறுதியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டமையால் இம்மாதம் உடன்படிக்கைச்சரத்துப்படி பொது சனவாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் 97.5 சதவீதத்தினரின் வாக்குகள் பதிவாகியிருப்பதாக தேர்தல் கமிட்டி துணை தலைவர் டியோனி வாணி அறிவித்துள்ளார். வடக்கு சூடானில் நடத்தப்பட்ட ஆதரவு வாக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த 1, 16,857 வாக்காளர்களில் 67, 597 பேர் வாக்களித்திருந்தனர். இவர்களில் 41சதவீதத்தினர் ஒருங்கிணைப்புக்கும், 55சதவீதத்தினர் தனிநாட்டுக்கும் ஆதரவாக வாக்களித்தனர். இதன் உத்தியோக பூர்வதேர்தல் முடிவுகள் பெப்ரவரி முதல் பகுதியில் வெளியிடப்படும் அம்முடிவுகளின்படி எதிர்வரும் ஜூலையின் முதற்பகுதியில் தனிநாட்டுப் பிரகடனம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

ஆபிரிக்காவின் பெரும்பங்கு நிலத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் சூடானானது ஆங்கிலேயரது காலனித்துவ காலத்துடனேயே உருவாக்கப்பட்ட ஒரு நாடாகும். ஆனால் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தற்போதைய சூடான் இருக்குமிடத்தில் 'நூபியா' என்ற ஆபிரிக்கப் பேரரசு நிறுவப்பட்டிருந்தது. தொடர்ந்து நிகழ்ந்த எகிப்திய படையெடுப்பும், 1500 ஆண்டுகளுக்கு முன் வந்த இஸ்லாமியப் படையெடுப்பும் நூபியாவை அழித்துவிடவே படையெடுப்பாளர்களுடன் கலந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தினுள் வடக்கு சூடானிய மக்கள் தள்ளப்பட்டனர். படையெடுத்து வந்த முஸ்லீம்கள் நூபிய பெண்களை மணம் முடித்து "சூடானிய அரேபியர்கள்" என்ற புதிய இனத்தை உருவாக்கினார். சர்வதேசரீதியான தொடர்புகளை இவர்கள் ஆரம்பத்திலிருந்தே நல்ல முறையில் பேணியதனால் எப்போதும் பலம் பெற்றபிராந்தியமாகவும், சூடானுக்கு தலைமைவகிக்கும் பகுதியாகவும் இஸ்லாமிய வடக்குசூடான் வளர்ந்தது. ஆனால் தென்சூடானது நிலமை வேறானதாக இருந்தது. தென் பகுதியில் வாழ்ந்த ஆபிரிக்க பழங்குடியினர் இன்று வரை தமது பண்டைய மரபுசார் விழுமியங்களையும், கலாசாரங்களையும் பேணி வருவதோடு, அபிவிருத்தி மட்டங்களிலும் மிகக் குறைவான நிலையிலேயே உள்ளனர். இப்பிரதான வேறுபாடு சூடா

**அட்சயன்**

னிய அரசியலில் காலனித்துவ காலத்தில் கூட பெரும்பிரிகோடாகவே விளங்கியது. 'வடக்கு-தெற்கு' முரண்பாடு ஆங்கிலேயரின் 'நாகரீகப்படுத்தும்' செயற்றிட்டத்திலும் பாரிய வேற்றுமைகளைத் தோற்றுவித்தது. புதிய வகை ஆட்சிமுறை, நிர்வாகமுறை அபிவிருத்தி முறை போன்றவற்றை வடக்கு அரேபியச் சூடானியருக்கு மட்டுமே பயிற்றுவித்து, இறுதியில் அதிகாரங்களையும் இவர்களிடமே கையளித்தனர். பிரித்தானியர் கீழைத்தேயங்களில் கடைப்பிடித்த 'பிரித்தாளும் தந்திரங்கள்' இங்கும் பலித்தது. சூடானின் தென்பகுதி கிறிஸ்தவ மதச் சபைகளிடம் விடப்பட்டு 'நாகரீகப்படுத்தும்' பணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இப் பகுதியில் வாழ்பவர்கள் வடக்கே வந்து குடியேறுவதற்கு அனுமதிமறுக்கப்பட்டது. இதனால் வடக்கு- தெற்கு என்ற முரண்பாடு மேலும் கூர்மையடைந்தது.

காலனிய ஆதிக்கம் சூடானை விட்டுவிலகிக் கொண்டதும் ஆட்சியதிகாரங்களை ஏற்றுக் கொண்ட அரேபிய- இஸ்லாமிய அரசு தனது அடிப்படைவாத, பேரினவாத செயல்களைக்கட்டவிழ்த்த து. தென்சூடானிய மக்கள் மீது பல்வேறு அடக்குமுறைகளைக் மேற்கொண்டது. தென் பகுதியில் வாழும் பல்வின மொழி கொண்டவர்களையும் அரபு மொழி பயிலவேண்டுமெனக் கட்டாயப்படுத்தியது. கிறிஸ்தவ சபைகள் ஓரங்கட்டப்பட்டன.

1969 இல் திடீர் சதிப்புரட்சியின் மூலம் ஆட்சிக்கு வந்த கேர்ணல் நிமேரி, ஆரம்பத்தில் இடது சாரித்தன முடையவராக காணப்பட்டபோதிலும் குறுகிய காலப்பகுதிக்குள் வலது சாரி அடிப்படைவாதியாக மாறவே, கம்யூனிஸ் கட்சி சதிப் புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்ற எத்தனித்தது. கம்யூனிட்டுகள் மிகப் பயங்கரமான முறையில் அழிக்கப்பட்டனர். இவ்வரசு 1983 இல் மத அடிப்படை வாதத்தின் உச்சமாக, நாடு முழுவதும் 'ஷரியா' சட்டத்தை அமுல் ப்படு த்தியது. இது தென்சூடானியர் மத்தியில் எதிர்ப்பைத் தோற்றுவிக்கவே 'பொர்' என்ற இடத்திலிருந்த இராணுவத்தினர் அரசுக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதனை அடக்குவதற்கு வட சூடானிலிருந்து அனுப்பப்பட்ட இராணுவத் தளபதி ஜோன்காராங் (சமாதான உடன்படிக்கை நிலவிய காலத்தில் விமான விபத்துச் சதியில் கொல்லப்பட்டார்) தனது சொந்த இடத்து படையான "பொர்" கலகப் படையுடன் சேர்ந்து அதற்குத் தலைமை தாங்கினார். விளைவாக இவர் தலைமையில் 'சூடான் மக்கள் விடுதலை இயக்கம்' அமைக்கப்பட்டது. இது அரசியல், இராணுவம், வெளியுறவு என்ற பிரதான அடிப்படையில் வகுக்கப்பட்டு நேர்த்தியான முறையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தது. சூடான் மக்கள் விடுதலை இராணுவம் அரசுக் கெதிரான தீவிர ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தமது ஆளுகைக்குக் கீழ்




கொண்டு வந்து நிர்வா கப்படுத்தினர். இவ்வாறு 2005 வரை நீடித்த இவர்களது ஆயுதப் போராட்டம் லட்சக் கணக்கான மக்களைப் பலி கொடுத்து ஓய்வுக்கு வந்தது.

சமாதான உடன்படிக்கை காலத்திலிருந்து இற்றை வரை தெ ன் சூடானில் நிலவுகின்ற அரசியல் நிலைமைகள் கிடைத்திருக்கின்ற நல்ல வாய்ப்புக்களைக் கேள்வியாக்கிவிடலாம். SPLM இனரின் வெளியுறவுக் கொள்கை அமெரிக்கா சார்ந்ததாகவே மாறிவருகிறது. இயக்கத்தினுள் பிரதேசரீதியான பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இரு தேசங்களும் ரகசியமான முறையில் மேற்கொண்ட ஆயுதக்கொள்வனவு கள் அச்சம் தருவனவாய் உள்ளன. வடக்கு சூடான அரசு அதிகளவான துணை ஆயுதக்குழுக்களைக் தன்வசம் வைத்துள்ளது. உடன்படிக்கையின் படி அவர்களின் ஆயுதங்கள் களையப்படவில்லை. சூடானிய பகுதியில் எழுந்துள்ள சீன, பிரான்ஸ் எண்ணெய்க் கம்பனிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. வடக்கும் தெற்கும், எண்ணெய் வளத்தை பங்கிடுவதில் எழுப்போகும் சிக்கல் அபாயகரமானதாகும். இரண்டு தேசங்களுக்கும் இடைப்பட்ட அபெய் மாகாணத்தை எதனுடன் இணைப்பது என்பதில் நடக்கும் இழுபறி நிலை தொடர்கிறது. ஐ.நா., ஆபிரிக்க ஒன்றியம், உலகநாணயநிதியம், உலகவங்கி, போன்ற அனைத்துலக அமைப்புக்களது அங்கீகாரம் சரியான முறையில் வெளிப்படுத்தப்படவில்லை. போராளிக் கட்டமைப்புடைய அமைப்பொன்றினால் கட்டமைக்கப்படும் [illegible] எழும் அதிகாரப் போட்டி நிலை புதிய தேசத்தையே விழுங்கிவிடலாம். இவ்வாறு பல சிக்கலான பிரச்சனைகளுக்கு தென்சூடான் தீர்வுகளை முன்வைக்க முடியாத நிலையிலேயே உள்ளது.

> **இருபகுதியினராலும் செய்து கொள்ள ப்பட்ட சமாதான உடன்படிக்கை மிகவும் உறுதியான முறையில் கடைப் பிடிக்கப் பட்டமையால் இம்மாதம் உடன்படிக்கை ச்சரத்துப்படி பொதுசன வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் 97.5 சதவீத த்தினரின் வாக்குகள் பதிவாகி யிருப்பதாக தேர்தல் கமிட்டி துணை தலைவர் டியோனி வாணி அறிவித்துள்ளார். வடக்கு சூடா னில் நடத்தப்பட்ட ஆதரவு வாக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த 1,16,857 வாக்காளர்களில் 67, 597 பேர் வாக்களித்திருந்தனர். இவர்களில் 41சதவீதத்தினர் ஒருங்கிணைப்புக்கும், 55சதவீத த்தினர் தனிநாட்டுக்கும் ஆதரவாக வாக்களித்தனர்.**

வாக்களிப்பின் போது ஆபிரகாம் பர்ணியாங்கு என்பவர் BBCக்கு, "எனது தாய்,தந்தை, சகோதரர்கள் போரில் இறந்தனர். அவர்களுக்காக இன்று நான் வாக்களிக்கின்றேன்" என்று தெரிவித்திருந்தார். அம்மக்கள் தாங்கிய இறப்புகளுக்கு உலகம் சாதகமானதொரு அரசியல் சூழமைவை வழங்கியிருக்கிறது. இதனை அவர்கள் சரியான முறையில் பயன்படுத் திப் பலனடைவார்களா என்பதற்குக் காலம் தான் பதில் கூறவேண்டும். ★★★

# “நிலமெல்லாம் ரத்தம்”

## கண்ணீரைப் பறித்திழுக்கும் வாசிப்பு



அறிவுபூர்வமான சமூகங்களே எப்போதும் நிகழ்காலத்தையும், எஞ்சியிருக்கும் வரலாற்றையும் விஞ்சி விடும் சக்திகளாக முனைப்பு பெறுகின்றன. அதைவிடுத்து வெற்று உணர்வுகளும், கொந்தளிப்புக்களும், கோஷங்களும், விடுப்புக்களும், அதீத கற்பனைகளும் போன்ற இயக்க வெளி கொண்ட சமூகங்கள் வரலாற்றில் கண்ணீர் வடிக்கும் பகுதிகளாகவே இடம் பிடித்துக் கொள்ளுகின்றன. உலகில் தோன்றிய எல்லா இனங்களது வரலாறும் அவையவை ஆற்றிய செயற்றிறன் மாதிரிகளின் புலத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

**கடந்தகால நம்மை பற்றி நினைத்து, மனசுக்குள் வெதும்பிக் கிடக்கும் ஒவ்வொரு தமிழுணர் வாளனும் கட்டாயம் இந்நூலினை ஒரு முறை யாவது வாசித்திருக்க வேண்டும். நிகழ்கணங் களைப் படைப்பாக்கும் ஒவ்வொரு படைப் பாள னும், வரலாற்ற றிதலை ஆவலாகக் கொள்ளும் ஒவ்வொரு சாதாரண னும் வாசித் துணர வேண்டும். குறிப்பாக தமிழர்கள் கற்றுணர வேண்டிய, வாசித்துணர வேண்டிய பாடங்களில் (Text) இதுவும் ஒன்று.**

கடந்த காலத்தினதும், நிகழ்காலத்தினதும் உலகில் எரியும் பிரச்சினைகளின் ஒன்று இஸ்ரேல்- பாலஸ்தீனச் சிக்கல். விடுதலைப் போராட்டம் இழுபறிப் போராட்டமாக மாறி, தமக்குள்ளேயே சண்டையிட்டு விடுதலையைத் தற்கொலை செய்து கொண்டமை பாலஸ்தீனர்களது கதை. உலகில் எவ்வறெல்லாம் வன்முறைகளுக்காளாகக் கூடாதோ அவ்வாறெல்லாம் துன்பங்களை அனுபவித்து, லட்சக்கணக்கான குழந்தைகளை, பெண்களை, இளைஞர், யுவதிகளை விடுதலை வேள்விக்குப் பலி கொடுத்து, நூற்றாண்டுகள் கால அனுபவங்களில் இருந்து பெற்ற பட்டறிவினால், உந்தப்பட்ட அறிவியல் மலர்ச்சியால் உருவான இஸ்ரேலின் கதை. ஒரே தாயின் கருவில் கருவாகிப் பிறந்து தன் உறவுக் குருதிக்காரனையேதின்னும் இவ்விரு நிலத்தார் நிலமைகளையும் தமக்குச் சாதகமாக்கி கொண்டு தம்மை வளர்த்த வல்லரசுகளின் கதை. இது பா.ராகவனால் (2005) எழுதி, கிழக்கு பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட இஸ்ரேல்- பாலஸ்தீன பிரச்சினையை நூலுருவில் தரும் ‘‘நிலமெல்லாம் ரத்தம்’’ ஆகும். ராக வன் - மிகச்சிறந்த எழுத்து வியாபாரிதான். ஆனாலும் அவரின் எழுத்து ஐந்தாம் வகுப்பு மாணவனுக்கு கிடைக்கும் ராணி காமிக்ஸின் ‘‘மாயாவி’’ கதைப்புத்தகங்கள் போல், வாசிப்பின் பசியை கட்டுக்கடங்காமல் செய்யும் வல்லமை கொண்டவை. ‘‘பாலஸ்தீனம் என்றால், இஸ்ரேலுக்குப் பக்கத்தில் இருக்கிற சுதந்திரதேசம் என்று இதுவரை தவறாகவே நினைத்துக் கொண்டிருப்போருக்கும், இஸ்ரேல், பாலஸ்தீன விவகாரங்கள் எதுவென்று தெரியாமல், தினசரி அங்கிருந்து வரும் குண்டு வெடிப்புச் செய்திகளை மட்டும் வாசித்து கொண்டிருப்போருக்கும், பிரிட்டனின் காலனிகளாக இருந்து, இரண்டாம் உலகப் போருக்குப் பின் வரிசையாக ஒவ்வொரு நாடாகச் சுதந்திரமடைந்து விட்ட நிலையில், இந்த நூற்றாண்டிலும் தொடரும் பாலஸ்தீன பிரச்சினை என்னதான் என்று அறிய விரும்புவோர்க்கும் இது ஒரு சந்தர்ப்பம்...’’

கடந்தகால நம்மை பற்றி நினைத்து, மனசுக்குள் வெதும்பிக் கிடக்கும் ஒவ்வொரு தமிழுணர்வாளனும் கட்டாயம் இந்நூலினை ஒரு முறையாவது வாசித்திருக்க வேண்டும். நிகழ்காலத்தைப் படைப்பாக்கும் ஒவ்வொரு படைப்பாளனும், வரலாற்றறிதலை ஆவலாகக் கொள்ளும் ஒவ்வொரு சாதாரணனும் வாசித்துணர வேண்டும். குறிப்பாகத் தமிழர்கள் கற்றுணர வேண்டிய, வாசித்துணர வேண்டிய பாடங்களில் (Text) இதுவும் ஒன்று.

எப்படியெல்லாம் விடுதலை போராட்டம் நடத்தக்கூடாது, எப்படி நடத்த வேண்டும் என்ற விதமான அனுபவப் படிப்பினைகளையே இஸ்ரேல் பாலஸ்தீனப் பதிவூடாக இந்நூல் உணர்த்துகின்றது. நமக்குச் சாதகமான நல்லதொரு உதாரணத்தை அதிலிருந்து பெறமுடியும். நூற்றாண்டு காலமாக போராடித் தோற்ற இஸ்ரேலியர்கள், ஓரிடத்தில் தமது இருப்பினைத் தக்க வைத்து கொள்வதற்காக உலகிடம் கேட்ட ஒரே ஒரு விடயம், தாம் நிம்மதியாக வாழ ஒரு குடிசையும், அவர்களது முன்னோரின் இலக்கியங்களும் மட்டுமே. கிடைத்த அந்த அமைதிக்காலப்பரப்பில் உலகில் இருந்த அனைத்து அறிவுக் கருவூலங்களையும் தம் சந்ததியினருக்குக் கற்பித்தனர். விளைவாக விஞ்ஞானிகளும், தத்துவவாதிகளும், கல்வியலாளர்களும் உருவாகினர். அக்காலப்பரப்பில் எழுச்சியடைந்து வந்த ஒற்றைமைய அரசியலின் அத்திவாரத்துக்கு இஸ்ரேலியர்கள் உருவாக்கிக்கொண்டிருந்த நிர்மாணதாரர்களின் பணி அவசியமாகியது. இஸ்ரேல் குடிசைகள் உலகிற்கு அறிவியலாளர்களை வழங்கியது. உலகம் அவர்களுக்கு இஸ்ரேல் என்ற தனித்தேசத்தைப் பரிசளித்தது. வாசிப்பின் ஊடாக உருவான அறிவியல் சமூகத்தின் உழைப்பினாலேயே இஸ்ரேல் இன்றும் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக வளர்கின்றது.

**இன்றைய நிலையில் ஈழத்தமிழர்களாகிய நாமும் போராடித்தோற்ற மனோநிலைக்குள்ளேயே தள்ளப்பட்டுள்ளோம். நமது துயரக்காலம் இஸ்ரேலியர்களுடையதை போன்றதன்று. மிகக்குறுகியது. கிடைத்திருக்கும் இச்சிறு துன்பியல் ஓய்வுக்காலத்தை சரிவரப் புரிந்து கொண்டு, நேர்த்தியான, அறிவுபூர்வமிக்க வழியில் நகர்தல் வேண்டும்.**

இன்றைய நிலையில் ஈழத்தமிழர்களாகிய நாமும் போராடித்தோற்ற மனோநிலைக்குள்ளேயே தள்ளப்பட்டுள்ளோம். நமது துயரக்காலம் இஸ்ரேலியர்களுடையதை போன்றதன்று. மிகக் குறுகியது. கிடைத்திருக்கும் இச்சிறு துன்பியல் ஓய்வுக்காலத்தை சரிவர புரிந்து கொண்டு, நேர்த்தியான, அறிவுபூர்வமிக்க வழியில் நகர்தல் வேண்டும்.

வாசிப்புக்கள் அருகிவரும் நம் சமூகத்தில் புதிய வாசிப்புக்கள் முளைகட்ட வேண்டிய சூழலுக்குள் நம்மை நாமே தள்ளிக் கொள்ளவேண்டும். தவறினால், தோல்விக்குப் பின்னரான சமூகமொன்றை சிதைக்க ஒடுக்குமுறையாளர்களினால் பல்வேறு வழிகளிலும் கட்டவிழ்த்து விடப்படும் முகமூடிச்சூனியம் நம்மையும் அழித்து விடும்.



உலகில் தோன்றிய பல்வேறு தொன்மைக்குடிகளும், சிறுபான்மையாக்கப்பட்டு எவ்வாறு தம் அடையாளம் மறைந்து, பெரும்பான் மையினருக்குக் கீழ் கரைந்து போனார்களோ, அப்படியொரு நிலை நமக்கும் உருவாகலாம். இது போன்ற நூல்கள் சலித்துப்போன மனநிலையில் எண்ணங்களோடு மட்டும் புலம்பித்திரிபவர்களுக்கு நல்லதொரு ஆற்றுப்படுத்துனன் ஆகும்.

**தம்பி**

★★★

# இறுக்கமடையும் பாதுகாப்பு

**2009** ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த கையோடு காணாமற்போன காவலரண்கள், சோதனை நிலையங்கள், சிறுமுகாம்கள் எல்லாம் மீண்டும் முளைக்கத் தொடங்கியுள்ளன.

கடந்த வருட இறுதியில் டிசெம்பர் மாதத்தில்- கொலை, கொள்ளை, ஆள்கடத்தல், திருட்டு போன்றவை திடீரென ஆரம்பித்தன் எதிரொலியே இராணுவத்தின் பிரசன்னம் அதிகரிக்கக் காரணமாயிற்று.

யுத்தம் முடிந்து குடாநாடு அமைதிப் பூங்காவாக இருந்தது. துப்பாக்கி வேட்டுச்சத்தம் இல்லாத சூழல். மக்கள் அச்சமின்றி நடமாடும் புது நிலை. மக்கள் தமது இயல்பு வாழ்வை ஆரம்பிக்கும் சூழல் உருவானது.

என்னத்துக்காகப் போராடினோமோ அந்த விவகாரத்துக்குத் தீர்வு கிட்டாத போதும், மக்கள் அமைதியான வாழ்க்கையை ஆரம்பித்தனர்.

கடந்த மாதம் 11 ஆம் திகதி சங்கானையில் குருக்கள் வீட்டில் ஒலித்த வேட்டுச்சத்தம் மக்களின் இயல்பு வாழ்வுக்கு வேட்டு வைத்துவிட்டது. தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களில் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதால், குடாநாடு அச்சத்தில் உறைந்து போனது.

அந்த அச்ச நிலையில் இருந்து இன்னமும் மக்கள் மீளவில்லை. அமைதி நிலை தோன்றுமா என்ற ஏக்கத்துடன் காலத்தைக் கழிக்கிறார்கள் மக்கள்.

மக்களின் ஏக்கத்துக்கு முடிவு காணும் நோக்கில் பொதுமக்கள் பிரதிநிதிகள், சமயப்பெரியார்கள், அரச அதிகாரிகள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் கொண்ட கூட்டம் ஒன்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

**விடுதலைப்புலிகள் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி தமிழ்க்குழுக்கள் பல்வேறு கொலைகளைச் செய்துவிட்டு 'இனந்தெரியாதவர்' என்ற பட்டியலில் தம்மைச் சேர்த்துக் கொண்டு விடுவார்கள். ஆயுதங்களுடன் தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்கள் நடமாடுவதை நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.**

'குழம்பிய தண்ணீரில் சில குழுக்கள் மீன் பிடிக்க முயல்கின்றன. யாழ். பாதுகாப்பு படையினர் அந்த முயற்சியைத் துடைத்தெறிந்து விடுவார்கள்' என்று யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அந்தக் கூட்டத்தில் காட்டமாகக் கூறினார்.

குடாநாட்டில் குற்றச் செயல்களை முற்றுமுழுதாகத் தடுத்து நிறுத்துவதற்காகப் படையினரின் பிரசன்னம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சோதனை நடவடிக்கைகள், திடீர் வீதித்தடைகள், இரவு ரோந்து ஆகிய நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகப் படைகளின் தளபதி அங்கு கூறினார்.

மக்களைத் துன்புறுத்துவதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. சட்டத்துக்கு முரணான நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தவே இத்தகைய நடவடிக்கை என்றும் கூறினார் தளபதி.

சமீப நாள்களுக்கு முன் யாழ்ப்

**யாழவன்**

பாணம் வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத்தகைய குற்றச் செயல்களை முடிவுக்குக் கொண்டுவருமாறு எமக்கு உத்தரவிட்டதாகவும் கூறுகிறார் தளபதி. இந்தக் கூட்டத்தில் மற்றுமொரு விடயத்தையும் தளபதி முன்வைத்தார்.

இராணுவம் மற்றும் பொலிஸார் தவிர்ந்த வேறு எவரும் ஆயுதங்களை வைத்திருப்பதைத் தடுப்பதற்கான சாத்தியமான வழிகள் அனைத்தும் எடுக்கப்படும் என்றும் தளபதி ஹத்துருசிங்க கூட்டத்தில் அறிவித்தார்.

ஜனநாயக வழிக்கு வந்துள்ளதாக அறிவித்த தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களைக் கொண்டு தமக்கு எதிரான கருத்துக்கள் கொண்டவர்களைப் பழி தீர்த்த சம்பவங்கள்தான் கடந்த காலங்களில் அரங்கேறின.

விடுதலைப்புலிகள் அச்சுறுத்தல் இருப்பதாக கூறி, ஆயுதங்களுடன் திரிந்த அந்தத் தமிழ்க்குழுக்கள் பல்வேறு கொலைகளைச் செய்துவிட்டு 'இனந் தெரியாதவர்' என்ற பட்டியலில் தம்மைச் சேர்த்துக் கொண்டு விடுவார்கள்.

ஆயுதங்களுடன் தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்கள் நடமாடுவதை நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ்.படைகளின் தளபதி ஹத்துருசிங்க அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படுமானால் குடாநாட்டில் இராணுவமும் பொலிஸாரும் மட்டும் ஆயுதங்களுடன் நடமாடினால் குற்றச்செயல்கள் குறைய வாய்ப்பு உண்டு எனக்கருதலாம்.

பொலிஸாரிடமும் இராணுவத்தினரிடமும் மட்டுமே ஆயுதம் இருந்தால் 'இனந்தெரியாதவர்' என்ற சொல் இல்லாமற் போய்விடும்.


செயலகத்தில் கூட்டம்

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட வடபிராந்திய பதில் பொலிஸ்மா அதிபர் சுசில் பெரேரா ஒரு கருத்தை முன்வைத்தார்.

நாட்டில் தெற்கில் இடம்பெறும் சம்பவங்களுடன் ஒப்பிடுகையில் சிறிய குற்றச்செயல்களே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

கடந்த டிசெம்பர் முதல் இடம்பெற்ற சம்பவங்கள் பொலிஸாரைப் பொறுத்த வரையில் சிறுகுற்றச் செயலாக இருக்கலாம். ஆனால் குடாநாட்டு மக்கள் கடந்த காலங்களில் கண்ட சம்பவங்களை மீட்டுப் பார்க்கும் போது, இவற்றை பெரிய சம்பவங்களாகவே கருதுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்கு பின்னர் ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் தினம் நான்கு கொலைகள் என ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்கள் இன்னமும் மக்கள் மனதில் இருந்து அகலவில்லை.

துப்பாக்கி வேட்டுக்கள் மீண்டும் கேட்கத் தொடங்க மக்கள் மனங்களிலும் பழைய சம்பவங்களே மீள நினைவுக்கு வருகின்றன.

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற பாதுகாப்புக் கூட்டத்தில தெரிவிக்கப்பட்ட நடைமுறைகள் அமுலுக்குவரும் போது மக்களின் பீதியும் அகன்று விடும் என்று கருதலாம்.

# ஓரணியில் தமிழ்க் கட்சிகள்; பேரம் பேசும் சக்தியாகுமா?

மக்களின் பீதி அகல சகல தரப்புக்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். இதுவே குடாநாட்டு மக்களின் வேண்டுகோள்.

அது நிற்க -

நடக்கப்போகும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு குடாநாடு தயாராகின்றது. வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணிகள் தீவிரமாகின்றன.

அரசுக்கு எதிராக தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் நின்று தேர்தலை சந்திக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்கான பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்று ஏட்டிக்குப் போட்டியாகத் தேர்தலைச் சந்திக்காமல் ஓரணியாக நிற்க பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னத்தில் சகலரும் ஓரணியாகப் போட்டியிட எடுக்கப்பட்ட முயற்சியில், தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகியன தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் தொடர்ந்து பேச்சு இடம்பெறும் என்று அறவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி., தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகிய இணைந்த அரசுக்கூட்டணியும் தமிழ்க்கட்சிகள் இணைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நேருக்கு நேர்களம் இறங்கப் போகின்றன.

இந்தப் பலப்பரீட்சையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து, கூட்டமைப்பு வெற்றிபெறச் செய்வதன் மூலமே தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும் என்று தமிழ்த் தலைவர்கள் கூறுகின்றனர்.

ஒன்றுபட்ட தமிழ்க் கட்சிகளின் வெற்றியே மக்களின் அபிலாஷைகளை எட்டக்கூடிய தீர்வைப் பெற பேரம் பேசும் சக்தியாகத் தமிழர் தரப்பு வர உதவும். இதை மனதில் நிறுத்தி மக்கள் செயற்பட வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் கேட்கிறார்கள்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நின்று பேரம் பேசும் சக்தியை உருவாக்குவார்களா? இதுவே இன்று எழும் கேள்வியாகும். ★★★

# சமாதானத்தைப் போட்டுடைக்கும் இலங்கை


சமாதானத்தை நாட்டில் கட்டி எழுப்புவதற்கான வாய்ப்புக்களை இலங்கை அரசு வீணாக்கிக் கொண்டு இருக்கின்றது என கனேடிய தேசிய நாளேடுகளில் ஒன்றான 'த குளோபல் அன்ட் மெய்ல்' (Tha Global and Mails) ஆங்கில பத்திரிகை தெரிவித்து உள்ளது.

'சிறிலங்கா இஸ் வேஸ்ரிங் த பீஸ் டிவைடென்ட்' என்கிற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் ஒன்றை இப்பத்திரிகை கடந்த 16 ஆம் திகதி தீட்டி உள்ளது. தமிழ் மக்களை அடக்கி ஆளும் சில பல நடவடிக்கைகளில் மஹிந்த அரசு தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது எனவும் இவ்வாசிரியர் தலையங்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது.

**இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை அரசு தவற விட்டு வருகின்றது. அங்கு 18 மாதங்களுக்கு முன் உள்நாட்டு யுத்தம் முடிந்ததைத் தொடர்ந்து தமிழர்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்திருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. ஆனால் தமிழர்களை தொடர்ந்து அடக்கி ஆளும் சில கொள்கைகளை மஹிந்த அரசு கைவசம் வைத்திருந்து நடைமுறைப் படுத்தத்தான் செய்கின்றது.**

ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டு இருப்பவை வருமாறு:-

'இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை அரசு தவற விட்டு வருகின்றது. அங்கு 18 மாதங்களுக்கு முன் உள்நாட்டு யுத்தம் முடிந்ததைத் தொடர்ந்து தமிழர்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்திருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. ஆனால் தமிழர்களைத் தொடர்ந்து அடக்கி ஆளும் சில கொள்கைகளை மஹிந்த அரசு கைவசம் வைத்திருந்து நடைமுறைப் படுத்தத்தான் செய்கின்றது.



முப்பது வருட கால யுத்தம் முடிந்து விட்ட போதிலும் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பது இலகுவான காரியம் அல்ல. கடந்த வருடம் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இலட்சக் கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து விசாரிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டிருக்கும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு, அதிகாரங்கள் அற்ற வெறும் சடமாகவே இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தமைக்கான முழுப் புகழுக்கும் சொந்தம் கொண்டாடுகின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ. அவர் இதன் மூலம் கிடைத்த பிரபல்யத்தைப் பயன்படுத்தி அரசமைப்பில் திருத்தத்தை ஏற்படுத்தி அவருடைய ஜனாதிபதிப் பதவிக் காலத்தை இரு தடவைகளுக்கு மேல் நீடிக்க வழி கண்டு பிடித்து உள்ளார். அத்துடன் சிவில் சேவைகள், நீதிச் சேவைகள், பொலிஸ் சேவைகள் ஆகியன சம்பந்தப்பட்ட நியமனங்களில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உயர் அதிகாரத்தையும் உரித்தாக்கிக் கொண்டுள்ளார்.

ஆனால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்கிற வாக்குறுதியை இவர் காற்றில் பறக்க விட்டு விட்டார் என்றும் இவரது அரசு அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையிலான தீர்வுக்கு எந்த நடவடிக்கையையும் உருப்படியாக எடுப்பதாக இல்லை என்றும் நெருக்கடிகளுக்கான சர்வதேச குழு அறிவித்து உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் என்கிற சந்தேகத்தில் அடைத்து வைக்கப்பட்டு இருந்தோ 12 ஆயிரம் பேரை அரசு விடுவித்து உள்ளது. அத்துடன் 03 இலட்சம் அகதிகளையும் நலன்புரி முகாம்களில் இருந்து விடுவித்து உள்ளது.

ஆனால் 70 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் சொந்தக் காணிகளுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படாமல் உள்ளனர். திரும்பி வந்திருப்பவர்களோ பாரிய மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக தங்குமிடப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். நிலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயத்தில் அரசு வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். இத்தீர்வு நடவடிக்கைகளில் தமிழர்களும் உள்வாங்கப்பட வேண்டும்.

வட மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்படக் கூடாது. சிங்களவர்கள் வடக்கில் குடியேற்றப்படக் கூடாது. இதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். மஹிந்த முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைக்கு கொண்டு வர வேண்டிய விடயமாக தேசிய நல்லிணக்கம் உள்ளது. தனிப்பட்ட அதிகாரங்களை அதிகரிக்கின்றமையை முக்கிய இலட்சியமாக கொண்டு செயற்படுகின்றமை உகந்தது அல்ல. ★

# பெரியதலைச் சங்கதி



மூளையின் அளவுக்கும் ஒருவரின் திறமைக்கும் தொடர்பு உண்டா? பல வருடங்காளாக விவாதிக்கப்படும் ஒரு கேள்வி தான் இது.

சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவில் நடைபெற்ற ஓர் ஆராய்ச்சியில் அதிக எடையோடு பிறந்த குழந்தைகள் பாடங்களைக் கற்கும் திறமை, நினைவாற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. (அதிக எடை கொண்ட குழந்தைகளுக்கு தலையும் நிச்சயம் பெரிதாக இருக்கும்)

மூளை வளர்ச்சியின் பெரும் பகுதி கருவிலேயே உருவாகிறதா? இந்தக் கோணத்தில் ஆராய்ச்சியைத் தொடரத் தீர்மானித்தார்கள் டாக்டர் கிறிஸ்டோபர் மாட்ர்டினும் அவரது சகாக்களும். இவர்கள் சவுத்ஹம்ப்டன் நகரில் உள்ள சுற்றுப்புற அறிவியல் மையத்தில் வேலை செய்பவர்கள்.

இதற்காகவே அவர்கள் பிறந்த குழந்தைகளின் தலைச்சுற்றளவு, உயரம் போன்றவற்றை அளந்தார்கள். நாளடைவில் அவர்களுக்கு பல்வேறு அறிவுக்கூர்மை சோதனைகளும் நடத்தப்பட்டன. குழந்தைகளுக்கு மூன்றரை வயதான போது இதே போன்ற சோதனைகள் மீண்டும் நடத்தப்பட்டன. குழந்தை வளர்ந்து பெரிய ஆளாக வந்த பின்பும் இதேபோன்ற சோதனைகள் நடத்தப்பட்டது.

பெரிய தலை கொண்டவர்களுக்கு நினைவாற்றல் மெதுவாகவே மங்குகிறது என்பதை இந்த ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடித்துள்ளார்கள். அதேபோல் மூளையின் பிற பாகங்களில் இயல்பாக சிறிதுசிறிதாக அழியும் செல்களின் எண்ணிக்கை கூட பெரிய தலைகொண்டவர்களுக்கு அதிக அளவில் இருந்ததாம்.

கருவில் இருக்கும் கடைசி மூன்று மாதங்கள் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு மிக முக்கியம். பிறந்த ஒரு வருடத்திலேயே மூளை இருமடங்காகிறது.

இந்த ஆராய்சிகளின் மூலம் கருவிலே ஏற்படும் மூளை வளர்ச்சியும் இளம் குழந்தையாக இருக்கும் போது ஏற்படும் மூளை வளர்ச்சியும் தான் நடுத்தர வயதைத் தாண்டும் போது ஒருவரது உடல் நலத்தை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன என்று கண்டறிந்திருக்கிறார்கள். இது தொடர்பான வேறுசில சுவையான தகவல்கள்.

இரண்டு வயது முடிவடையும் போது மூளையின் எடையில் 90% வளர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. குழந்தைப்பருவத்தில் மண்டையோடும் தலையை சுற்றியுள்ள தோல் பகுதியும் மிகவும் மெல்லியவை. எனவே தலையின் சுற்றளவை வைத்துக்கொண்டே மூளையின் அளவை எடுகோளாக கருதுவது சுலபம். ஆனால் பெரியவரான பிறகு ஒருவருக்கு தலை பெரிதாக இருக்கிறது என்றால் மூளையும் பெரிது என்று உடனடியாக முடிவெடுத்து விடமுடியாது. இரத்தம் உள்ளிட்ட வேறு சில திரவங்கள் மண்டையில் சேர்ந்து இருப்பதாலும் மண்டையோடு மிகவும் தடிப்பாக இருப்பதன் காரணமாககூட தலைபெரிதாக இருக்கலாம்.

சிறு குழந்தைகளுக்கு தலையின் ஒரு பக்கம் தட்டையாகவும் மறுபக்கம் புடைத்து பெரிதாகவும் இருப்பது சகஜம். இதற்கு காரணம் குழந்தை பெரும்பாலும் ஒரே பக்கமாக தலையை வைத்து படுத்துக்கொள்வது தான். ஆனால் இதற்காக குழந்தை வலப்பக்கமும் இடப்பக்கமுமாக மாறிமாறித் தான் படுக்க வேண்டும் என்று வற்புறுத்தாதீர்கள். ஒரு வயதாகும் போது இது சரியாகி விடும். பெரிய தலை என்பது பரம்பரையையும் பொறுத்த சங்கதி. ★

# காதலெனும் பேரெழுதி...



எனது நண்பன் ஒருவனின் முதல் காதல் ஒரு ஆஸ்பத்திரியில் முளைத்தது. அந்த நேரம் எங்கள் ஊர் கிராம ஆஸ்பத்திரியில்தான் அந்தக் காதல் வளர்ந்தது. அவன் காய்ச்சலுக்கு மருந் தெடுக்க ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறான். இது இற்றைக்கு 25 வருடங்களுக்கு முந்தின கதை.

மருந்தெடுக்க வரிசையில் நிற்கும் பொழுதுதான் அவள் வந்து தனக்கு முன்னால் நிற்பதைக் கண்டிருக்கிறான் அவன். இத்தனைக்கும் அவள் ஒரே பள்ளிக்கூடம். ஒரே வகுப்பு. ஆனால், அன்றுதான் அவளின் பார்வை அவனுக்குள் பல்ப் எரித்திருந்தது. இவ்வளவு நாளும் அந்த பல்ப் எரியாமலேயே கிடந்திருக்கிறது. காதலாகக் கசிந்து இப்பொழுது ஊருக்கெல்லாம் தெரிந்துவிட்டது. அவளின் பெயர் பாடசாலையில் அவனுக்குப் பட்டப்பெயரானது. அவளின் பெயரை பட்டப் பெயராகச் சொன்னாலே அவன் மகிழ்ந்துபோகின்ற வயது.

வயல்வெளிகள், பத்தைகள் மூடிய ஆஸ்பத்திரி என்று அவர்கள் சுற்றித் திரிந்தார்கள். மாரிகாலத்தில் ஒருநாள் மழை பெருமழையாய் பெய்துகொண்டிருந்தது.

அவனும் அவளும் பின்னேரம் யாரும் இல்லாத ஆஸ்பத்திரியில் ஒன்றாக இருந்து காதல்செய்த நேரம். ஆனந்தன் கண்டுவிட்டு பிரின்ஸிப்பலிடம் சொல்லிவிட்டான். பிரின்ஸிப்பல் எனது நண்பனைக் கூப்பிட்டு அடிக்கவெல்லாம் இல்லை. புத்திமதி சொன்னார். நீங்கள் காதலியுங்கள்; படித்து முடித்துவிட்டு. இதுதான் அந்தநேரத்தில் எல்லா அதிபர்களின் புத்திமதியாக இருக்கும். சில அதிபர்மார் அடித்து நொருக்கி விடுவார்கள். அடித்துநொருக்கும் அதிபர்மாருக்குக் காதல் காமத்தைப் போன்றது. அதற்குப் பிறகும் அவர்கள் காதலித்தார்கள். கலியாணம் செய்வோம் என்று ஒற்றைக்காலில் நின்றார்கள். விதி அவர்களைப் பிரித்துவிட்டது. இப்பொழுது அவன் லண்டனில் இருக்கிறான். அவனின் காதலி ஊரில் பிள்ளைகுட்டிகளோடு இருக்கிறாள் என்று நினைக்கிறேன்.

பாடசாலைக் காதலை ஒரு இன்பக்கு வேசன் என்றுவிட்டு பெரியவர்கள் ஒவ்வொருவரும் ஒதுக்கிவைத்து விடுவார்கள். ஆனால், அதற்கும்மீறி என்னவொன்றோ இருந்துகொண்டு தான் இருக்கிறது.

எனது மனைவிக்குத் தெரிந்த ஒரு பெண்மணியின் பிள்ளை இப்பொழுது 13 வயது பெண்பிள்ளை. வடிவான பிள்ளை. ஊரில் யாரோ ஒரு பொடியனுக்குக் காதல் கடிதம் கொடுத்துவிட்டது என்று இங்கு இருந்துகொண்டு மனிசி பதறிக்கொண்டிருக்கிறது. யாரோ ஒருவரின் பிள்ளைக்குக் காதல். என் மனைவி பதறுகிறது. அது ஊரில் நடந்தது. இதுக்கு பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்துகொண்டு ஏன் பதறிக்கொண்டிருக்கிறாய் என்றால் "சும்மா இருங்கோ, அது உங்களுக்குத் தெரியாது'' என்று என்னை அதட்டுகிறது. காதல் என்றவுடன் பல்லாயிரம் மைல்களைக் கடந்தும் ஒரு பதற்றம் ஏற்படத்தான் செய்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு எனது முதல் காதலிக்குத் தெரிந்த ஒருவர் எனக்கு மேல் வகுப்பு படித்த பொடியன். இப்ப பொடியன் இல்லை மனிசன். 50 வயது மட்டில் இருக்கும். ஊரில் உள்ள எனது முதல் காதலியின் போன் நம்பரை வீட்டு ரெலிபோனின் வொய்ஸ் மெயில் பொக்ஸில் பதிந்து வைத்திருந்தார். அதைக் கேட்டு என்ர மனிசி சன்னதம் ஆடத் தொடங்கிவிட்டது.

உண்மையில் கலியாணம் முடித்த பிறகு மனைவிமாருக்குப் பிடிக்காத வார்த்தை என்றால் கணவன்மாரின் காதலிகளின் பெயர்தான். அதில் ஒன்றுமே இருக்காது. உண்மையில் அதனை நானே மறந்துவிட்டேன். ''என்னத்துக்கு இப்ப அவளின்ர போன்நம்பர். என்ன தொடர்பை ஏற்படுத்தவோ?'' என்று மனிசி வேப்பமிலையைக் கையிலெடுக்காத குறை. நான் அமைதியாக இருந்தேன். நானும் பேசினால் விஷயம் பெரிசாகிவிடும். அமைதி தானே புருஷன்மாரின் ஆயுதம்.

நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது ஒருநாள் என்னத்துக்கோ போட்டோகிராபர் பள்ளிக்கூடத்துக்கு வந்தார். ஏதாவது ஒன்றுக்கு இடைக்கிடை புகைப்படம் எடுக்கிறவர். வருவார்தானே. அப்பிடி வந்தார். அப்போ அவரின் வேலைகள் முடிந்த பிறகு யாராவது போட்டோ எடுக்கப் போகிறீர்களா? என்று வழமைபோல அவர் கேட்க, நாங்கள் வகுப்பில் உள்ள நண்பர்கள் கூட்டமாக நின்று போட்டோ எடுத்தோம். அதே போல எங்கள் வகுப்பு பொம்பிளைப் பிள்ளைகளும் போட்டோ எடுத்தார்கள்.

இரண்டு கிழமைக்குப் பிறகு போட்டோவை எடுத்தவர் பள்ளிக்கூடத்தில் வந்து தந்தார். போட்டோக்களை பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது தான் எனக்குப் போட்டோவில் இருக்கிற ஒரு பிள்ளை மீது காதல் வந்தது. ஒரு "கிளிக்'' பார்த்தனான். அது காதல்தான்.

அந்தக் காதலுக்காக பிறகு பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல. இப்ப இருந்தது ஒரு போட்டோதான். கூட்டமாய் நின்ற ஐந்தாறு பொம்பிளைப் பிள்ளைகளில் இவள் ஒருத்தியை எனக்குப் பிடித்துப்போக அவளிடம் இருந்த போட்டோவை "தா'' என்று ஒற்றைக்காலில் நிற்கிறேன். ஏன் என்று சொன்னால்தான் தனது போட்டோவைத் தருவேன் என்று அடம் பிடிக்கிறாள். ''உன்னைக் காதலிக்கிறேன்'' அதுதான் தா என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அவள் வெட்கப்பட்டு தந்திருப்பாள்.

அப்பிடி சொல்லத் தெரியவில்லை. ''போட்டோவை தா'' என்று வாங்கிக் கொண்டுபோய் மற்ற பெட்டைகளை விட்டுவிட்டு அவளை மட்டும் தனியாக அதில் இருந்து வேறொரு போட்டோ எடுக்க நான் பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல.

''வீட்டில் உள்ள நீ தனியா இருக்கும் போட்டோ ஒன்றைத் தா'' என்று கேட்டிருந்தால் கொண்டுவந்து தந்திருப்பாள். இப்ப என்றால் ''தா'' என்று ஸ்கான் பண்ணிப்போட்டுக் கொடுத்திருக்கலாம். அந்தப் போட்டோவை முல்லைத்தீவுக்குக் கொண்டு போய் ஸ்ருடியோ ஒன்றிலை கொடுத்து அவளை மட்டும் தனியா வேறொரு போட்டோவாக எடுத்து யாருக்கும் தெரியாமல் புத்தகத்துக்குள் வைத்துக்கொண்டேன். இது பெரும்பாடு அந்தக்காலத்தில். நான் சொல்வது 88 இல்.

அதற்குப் பிறகு கடிதங்கள் போக்குவரத்துகள் என்று இரண்டு வருடக் காதல். அவள் அழகாக இருந்ததால் இடையில் இன்னும் பலர் காதலித்திருக்கிறார்கள். வில்லத்தனத்துடன் என்னிடம் ஒருவன் வந்தான். நான் அடிபாட்டுக்குப் போகாத ஒரு மனிசன்.

பிறகு அவள் வேறு பாடசாலை. நாங்கள் ஊரைவிட்டே போகவேண்டிய நிலைமை. நாங்கள் என்றால் எனது வகுப்பு நண்பர்கள். இயக்கத்துக்கு ஆட்கள் சேர்க்க அதில் விருப்பமில்லாமல் திக்கொன்றாய் திரிந்து அலைந்த போது காதலும் கலைந்து விட்டது.

சின்ன வயதில் ஒவ்வொருவருக்குள்ளும் வருகின்ற முதல் காதல் மனதில் பதிந்துபோய்த்தானே இருக்கும்.

அண்மையில் எனது தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக ஒரு முதியவர் வந்திருந்தார். எழுபது வயது. முந்தைய காலத்தில் ஒறேற்றர் சுப்ரமணியம் போன்றவர்களுடன் கட்சிவேலை செய்தவர். அந்தக் காலத்தில் கலப்புக் காதல் கொண்டவர். யாழ்ப்பாண சாதித்தடிப்புக்குமத்தியில் கலப்புத் திருமணம் என்பது எவ்வளவு கடுமையான விஷயம் என்பது அவர் சொல்லும் போது தெரிந்தது.

சாதி குறைந்த வர்கள் எனப்படுகின்ற சமூகத்தில் இருந்து பெண்ணெடுத்த குற்றத்துக்காக ஊரைவிட்டு விலத்தி வைத்திருந்ததைச் சொன்னார். ஆனால், எல்லாவற்றையும் எதிர்த்துப் போரிட்ட அவரது தைரியத்தையும், முதல் காதலையும் சொன்னார்.

எல்லா முதல் காதலும் கலியாணம் வரை போவதில்லை, ஒன்றிரண்டைத் தவிர. எனக்குத் தெரிந்த ஆமிக்காரர் ஒருவர் றாகமவில் இருக்கிறார். ஆறாம் வகுப்பில் இருந்து காதலித்தவர். அந்தப் பெட்டையையே கலியாணம் முடித்து இப்ப பிள்ளைகுட்டிகளோடு வாழுகிறார்.

இப்போதெல்லாம் இங்கு புலம்பெயர் நாடுகளில் காதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. மனம் ஒத்து என்பது வெறும் பேசாப்பொருளாக மாறிவிட்டது. இளம் பிள்ளைகள் காதலை ஒரு வேடிக்கையாகவே நினைக்கிறார்கள். இதை சும்மா சொல்லவில்லை. நடைமுறையைப் பார்த்துத்தான் சொல்கிறேன்.

இறுக்கமான காதலர்கள் என்று நினைத்தவர்கள் கூட அடுத்த நாளே பிரிந்துபோய் தனிய நிற்கிறார்கள். நகர்ப்புறங்களில் காதலிப்பது என்பது செலவுக்கான பணம் கையிலிருக் கும் வரைதான். இங்கு பாடசாலை கள், கொலேஜுகளில் காதல் அவரவர் பொக்கட் மணியிலேதான் தங்கியிருக்கிறது.

காதல் என்பதும் பிரிவு என்பதும் எங்கள் கிராமங்களில் எவ்வளவு சீரியசான விஷயம். ஆனால், இங்கு புலம்பெயர் நாடுகளில் ஒரு பொருட்டே இல்லை. காதலுக்கு எந்த சீரியஸ் னெஸும் இல்லாமல் போய்விட்டது.

ஒரு விஷயம் தெரியுமா? அரபு நாடுகளில் ஆம்பிளைகளை பொம்பிளைகள் நம்புவதே இல்லை. அங்கு திருமணம் முடித்த ஆண்கள் மீது அவரவர் மனைவிமார்கள் தொடர்ந்து கண்ணோட்டம் விட்டபடியே இருப்பார்கள். ஏனெனில் அரபிகள் விளையாட்டில் விண்ணார்கள். எப்படி யாவது வேறு பெண்களுடன் தொடர்புகளை வைத்திருப்பார்கள் என்ற சமுசியம் எப்பொழுதும் அரபி பெண்களுக்கு இருந்துகொண்டே இருக்கும்.

பேரீச்சம்பழம், பாதாம்பருப்பு, சீஸ், பால், பிஸ்தா, ரொட்டி இவை தானே அவர்களின் உணவு. இவை சும்மா வைத்திருக்காது. எனவே, அங்கு மனைவிமார்கள் நம்புவதே இல்லை ஆண்களை.

அதற்கு என்ன செய்கிறார்கள் என்றால், கணவனுக்கு உயர் ரக பேனா, மூக்குக்கண்ணாடி போன்ற




வற்றை பரிசாகக் கொடுப்பார்களாம். அவற்றில்தான் இருக்கிறது வில்லங்கம். அவற்றில் சிறிய ரக மைக்ரோ கமரா பொருத்தியிருக்குமாம். அவற்றில் இருந்து வருகிற படங்களை றைக்கோட் செய்யும் கருவிகளையும் சேர்த்தே கடையில் விற்கிறார்கள்.

புருஷன் எங்கே போகிறார்- வருகிறார் என்பதனைத் துல்லியமாகக் கண்டுபிடித்து வருகிறார்கள் அரபு பெண்மணிகள். அரபு நாடுகளில் கலியாணம் முடிப்பதும் அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. அங்கு இஸ்லாமிய முறைப்படி மஹர் கொடுக்க வேண்டும் பெண்ணுக்கு. 10 ஒட்டகம், பெரிய வீடு, பேரீச்சம்பழத் தோட்டம் என்றுதான் மஹர் கேட்பார்கள் பெண்கள். அதனால் ஆண்கள் அரபு

**இளைய அப்துல்லாஹ்**

நாடுகளில் திருமணம் முடிக்கவும் யோசிக்கிறார்கள்.

உலகம் முழுவதும் காதலோ-கலியாணமோ சிக்கலானதுதான். ஏன் உங்கள் மனைவியின் எக்ஸ்ரா ஒரு கண் உங்கள் மீது எப்பொழுதும் விழுந்துகொண்டுதான் இருக்கும்.

புருஷன்மார் என்ன செய்தாலும் அவர்களின் தடுமாற்றத்தில் அச்சொட்டாகக் கண்டுபிடிக்கும் கலை உலகில் உள்ள எல்லா மனைவிகளிடத்திலும் இருக்கிறது. அது எல்லா புருஷன்மாருக்கும் தெரியும்.

வாழ்வு மீதான சுவை காதலில் தானே இருக்கிறது. உண்மைக்காதல் இன்றும் உலகத்தின் கிராமங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் இல்லையா?

★★★

# குருவிக் கூடு

சிறுகதை

அந்தக் காலைப் பொழுதில்... வீதிகளின் இரு மருங்கிலும் பஸ்கள் நிறைந்த அந்த ஏ-9 வீதியோரத்தில் கையில் கச்சான் பைகள் ஏந்தியவனாக ஒவ்வொரு பஸ்ஸாக ஏறி இறங்கிக் கச்சான் விற்றுக்கொண்டிருந்தான் கமல்.

உச்சி வெய்யிலில் சூடேற... சாலையில் ஆங்காங்கே தார் உருகி வழிந்த தால் வெறுங்காலால் தொடர்ந்தும் அவனால் நடக்கவும் முடியவில்லை.

மரநிழலில் கச்சான் பையையும் தட்டையும் இறக்கி வைத்து இளைப்பாறியவாறு தன் பாதங்களில் ஒட்டிக்கிடந்த 'தாரைக்' குச்சியால் வழித்தெடுத்தான்.

என்ன வாசனை அது?...

பக்கத்தில் முறிகண்டி, கணேசன் கடை உழுந்து வடையின் வாசம் மூக்கைத் துளைத்தது. அதை மூச்சை இழுத்து அனுபவித்தான் அவனால் சும்மா இருக்க முடியவில்லை. கடையின் அருகில் போய் நின்றான். அவனுக்கு முன்னதாகவே ஒரு நான்குகால் ஜீவன் அங்கே வாலை ஆட்டிக் கொண்டு நின்றிருப்பதைப் பார்த்து, சற்றுப் பயந்தவாறு பின்னால் நகர்ந்து நின்று கொண்டான்.

கடைக்காரன் சுடச்சுடப் போட்டுக் கொண்டிருக்கும் உழுந்து, கடலை வடைகளைப் பார்த்ததும் அவன் மனசுக்குள் அப்பா வந்து நின்றார்.

தலையில் துவாய், தலைப் பாகை... அழுக்கேறிய பனியன்... கிழிந்த சாரம்... தள்ளாடி நடக்கும் நடை....! குடித்து விட்டு வீட்டிற்கு வரும் போதெல்லாம் உழுந்துவடை பார்சலுடன் வருகிற அவனுடைய அப்பாவின் வருகையை முன்னதாகவே வடையின் வாசனையால் அறிந்து கொள்வான்.

எதற்கெடுத்தாலும் எரிந்து விழுகிற அவனுடைய அப்பா... அப்போது மட்டுந்தான் பிரியமாக இருப்பார். வடையைப் பிட்டு அவன் வாயில் திணித்து....! அவருக்கே உரிய முரட்டுக்குரலில்...

"மனுசனை மனுசன்
சாப்பிடுகின்றாண்டா தம்பிப் பயலே!''

என முதல் வரியை மட்டுமே திரும்பத் திரும்ப... சதா பாடிக் கொண்டே தூங்கிப் போய்விடுவார்.

நாக்கு வறண்டு போன நிலையில்... குடிக்கத் தண்ணீர் கேட்ட அவனை போடா பயலே கடைக்கு ஆட்கள் வருகிறார்கள் என்று விரட்டியடித்தான் கடைக்காரன்.

ஆத்திரத்துடன் வீதியோரமாகக் கிடந்த பம்பை வேகமாக அசைத்தான் கமல், அந்த வீதி திறந்து வருசமும் இரண்டு ஆகுது, ஆனால் தண்ணியைத் திறப்பார் யாருமில்லை என்று நினைத்தவாறு மீண்டும் பலத்துடன் ஆட்டி அசைத்தான். தண்ணீர் சொட்டியது. தாகம் தீர நாக்கை நனைத்தான். அம்மா ஞாபகம் வந்தது. அதைத் தொடர்ந்து தன் வீட்டின் முன் பக்கமாக நட்டு வைத்திருந்த மாங் கொட்டை முளைத்து தளிர் இலைகள் விட்டிருந் ததும் அவன் நினைவுக்கு வந்தது.



வாய்க்கால் ஓரமாக அந்தப் புறம் போக்கு நிலத்தில் பத்துக்குக் குறையாத ஓலைக் குடிசைகள் அங்கே..

அவனுடைய அம்மாவும் அப்பாவும் குடிசை போட்டுக் கொண்டு குடியேறியபோது... அவனுக்கு இரண்டு வயதிருக்கும் கூலி வேலை செய்து தினம் கிடைக்கும் பணத்தில் பாதியைக் குடித்தே தீர்த்து... தன் வாழ்க்கையையும் பாதியில் முடித்துக் கொண்டார்.

பஸ் மாறிப் பஸ் ஏறி இறங்கி கச்சான் விற்று அதனைத் தன் எஜமானிடம் கொடுத்து அவர் கொடுக்கிற கூலிப் பணத்தைத் தன் தாயிடம் கொடுப்பான். போரினால் ஊன முற்ற காலுடன் வாழ்க்கையில் போராடும் அம்மாவை இந்தச் சிறுவயதில் காப்பாற்றிவரும் பொறுப்புணர் வைக் கண்டு அப்பகுதி மக்கள் அவன் மீது தனி அன்பு கொண்டிருந் தனர்.

அதோ... கணேசன் கடை, அங்கே வியர்வை வழிய வழிய... மூச்சிறைத்தவாறு கச்சான் மூடையை இறக்கி வைத்து விட்டு... கமல், கணேசன் முதலாளியின் முகத்தைப் பார்க்கிறான். ஓட்டு மொத்தமான கஞ்சத் தனத்திற்குப் பெயர் பெற்ற அந்தக் கடைக்காரன் வெற்றிலை பாக்கை வாயில் போட்டு குதப்பிக் கொண்டிருந்தான்.

வழக்கம் போலவே கச்சான் விற்ற கணக்குகளை மதிநுட்பமாக கணக்கிட்டு ஐம்பது ரூபாய் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டு... ஏக்கத்தோடு அவரைப் பார்த்தான் கமல்.

நடக்க முயன்ற அவனை நிறுத்தி அவன் கையில் ஒரு மிட்டாயைக் கொடுத்தார். அதனை அவசர அவசரமாக வாங்கி வாயில் இட்டு மென்று நாக்கை அசைத்த வேகமும்... முகமும்.. அவனின் வறுமைக் கோலமும்... அவன் அங்கிருந்து சென்று விட்ட பின்னரும்... கணேசன் மனசுக்குள் என்னமோ செய்தது.

வேப்பமரக்கிளையில் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் குருவிக் கூட்டைக் கூட, இரண்டு மூன்று நாட்களாகவே மறந்து விட்டிருந் தான். காலை எழுந்தவுடன் முதல் வேலையாக அந்தக் குருவிக் கூட்டைப் பார்த்திருந்த அவன் கவனம் இப்போதெல்லாம் வீட்டின் முன்னே துளிர் இலைகள் விட்டுக் காலை வெயிலில் மின்னும் அந்த மாஞ்செடி மீதுதான் நிலைத்து நின்றது.

அன்று மரத்தடியில் நின்று கந்தையா தாத்தாவும் சின்னச்சாமியும் காரசாரமாக ஏதேதோ பேசிக் கொண்டிருப்பதை நோட்டமிட்டான் கமல்.

"என்ன நெனச்சுக்கிட்டிருங்கானுங்க அந்த ஆளுங்க இப்படித்தான் போனதரம் வந்தானுங்க. கோர்ட் ஓடர் அது இதுன்னு சொன்னானுங்க, காலி பண்ணேலேன்னா எல்லாரையும் பிடிச்சு உள்ளே தள்ளிடுவோமென்னு மிரட்டிப் போனாங்கள்... நேற்று வந்தவனுங்கள் நம்ம கிட்ட பலிக்குமா?...

ஆத்திரத்துடன் பீடியை ஒரு தம் வேகமாக இழுத்து... புகையை வெளியே விட்டார் கந்தையா தாத்தா. அந்தப் புகை மண்டலத்தில் அவர் முகம் மறைந்து போனதைக் காண சிரிப்பு வந்தது கமலுக்கு. எதைப் பற்றி பேசுகிறார்கள் என்று ஏதும் புரியாமல் மாஞ் செடிக்குத் தண்ணீர் ஊற்றினான் அவன்.

பச்சைக்கிளியின் வண்ணச் சிறகுகளாய்ப் பளபளக்கும் துளிர் இலைகளைச் சின்ன விரல்களால் தடவிப் பார்த்த போது அவன் மனசும் உடம்பும் சிலிர்த்துக் கொண்டன.

"இது என்ன ரகம் தெரியுமா?... கறுத்தக் கொழும்பான்.. என்னமா ருசிக்கும் பாரன்...., இது மளமள வெண்டு காய்காய்ச்சு.... பிடுங்கி ... பழுக்கப் போட்டு.. நான் தெருத் தெருவாய்ப் போய்விற்றுப் பெரிய பணக்காரனாகப் போறன். அப்போ இந்தக் குடிசையெல்லாம் மாடி வீடாய் மாத்திடுவேன். அப்புறம் பாரன் பக்கத்து வீட்டுச் சிறுமி சர்மியிடம், இப்படிப் பெரிய மனுசன் மாதிரி பெருமையாகச் சொல்லி சிரித்திருக்கிறான்.

அடுத்த நாள்... பூக்கடை வீதியில் கச்சான் விற்கும் போது.... தரையில் கொட்டிக்கிடந்த உதிரிப்பூக்களைப் பார்த்தான்

பலவர்ணத் துண்டுத் துணிகளால் ஒட்டுப் போட்டு அணிந்திருக்கும் தன் அம்மாவின் சேலை அந்த நேரத்தில் ஞாபகம் வர... அவன் மனசுக்குள் ஒரு சோகம் கனத்தது. அங்காங்கே கிழிந்து தொங்கும் தன் சட்டையைத் தூக்கி தன் முகத்தில் வழிகின்ற வியர்வையை துடைத்துக் கொண்டு... கச்சான் பையைத் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டான். அவன் நடையில் ஒரு வேகம் இருந்தது.

பொழுது சாயும் அந்தப் பொழுதில்... பம்பில் தண்ணீர் அடித்துக் கொண்டிருந்த பெண்கள் சத்தத்துடன் ஓடி வருவதையும், ஆண்கள் கூச்சலிடுவதையும் பொலிஸ் வானில் இருந்து இறங்கி திபுதிபுவென்று ஓடி வருகிற பொலிஸ்காரர்களையும் கண்டு ஒன்றும் புரியாமல் பயந்து நடுங்கியவாறு குடிசையை நோக்கி ஓடி வந்தான் கமல்.

குடிசைகள் எல்லாம் பிய்த்துப் போட்டு, பானை சட்டிகளை எல்லாம் தள்ளி மிதித்து, எதிர்த்தவர்களையெல்லாம் பொல்லால் அடித்து... விரட்டிக் கொண்டிருந்தது பொலிஸ் பட்டாளம். ஆர்ப்பாட்டம், அல்லோலகல்லோலம் கொஞ்ச நேரத்தில் அடங்

ஆத்திரத்துடன் வீதியோரமாக கிடந்த பம்பை வேகமாக அசைத்தான், கமல் அந்த வீதி திறந்து வருசமும் இரண்டு ஆகுது, ஆனால் தண்ணியைத் திறப்பார் யாருமில்லை என்று நினைத்தவாறு மீண்டும் பலத்துடன் ஆட்டி அசைத்தான். தண்ணீர் சொட்டியது. தாகம் தீர நாக்கை நனைத்தான். அம்மா ஞாபகம் வந்தது. அதைத்தொடர்ந்து தன் வீட்டின் முன் பக்கமாக நட்டு வைத்திருந்த மாங்கொட்டை முளைத்து தளிர் இலைகள் விட்டிருந்ததும் அவன் நினைவுக்கு வந்தது.

கிப் போய்விட்டது.

தட்டுமுட்டுச் சாமான்களுடன் அவரவர்கள் ஓடிக் கொண்டிருந்த அந்த நேரத்தில்.. தன் மகனை ஒரு கையால் ஆதரவாய் அணைத்துக் கொண்டு சிறிய மூடையொன்றைத் தலையில் சுமந்தவாறு ஊனமான தன் காலை இழுத்து இழுத்து வைத் துக் தட்டுத் தடுமாறி நடந்தாள், பொன்னம்மா.

சிவந்திருந்த அந்தச் சூரிய ஒளி

மனோகரன் கிங்ஸ்ரன் சுமன்ராஜ்

யில் தரை மட்டமாகிவிட்ட தன் வீட்டை ஒருமுறை திரும்பிப் பார்த்தான் கமல், அவன் மனசிற்குள் சுரீர் என்று ஒரு வலி. இலைவிட்டுச் சிரித்துக் கொண்டிருந்த அவனுடைய கனவுக் காவியம் பொலிஸ்காரர்களின் பூட்ஸ் கால்களால் மிதிபட்டுச் சிதைந்து போனதைக் கண்டு தேம்பித் தேம்பி அழுதான்.

"இப்ப எங்கேம்மா போறோம்? ..." அம்மாவைக் கேட்க நினைத்து, அவள் முகத்தைப் பார்த்தான் அதுவும்... சிதைந்துபோன தன் கனவுக் காவியமாகவே தோன்றியதால் ஒன்றும் கேட்காமல் அவளுடன் சென்று கொண்டே, மீண்டும் ஒருமுறை ஆவல் மீறிட துயரம் கொப்பளிக்க அந்தப் பகுதியைத் திரும்பிப் பார்த்தான் கமல்.

அங்கே....

அந்த வேப்பமரக்கிளையில்.... கூட்டில் இருந்தவாறு அந்தக் குருவி மட்டுமே எப்போதும் போல் இன்பமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

★★★

# இனப்பிரச்சினைத் தீர்வு – அபிவிருத்தி

# தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வை தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அது அவர்களுடைய விருப்பமாகவும் தேவையாகவும் உள்ளது.

இந்த நியாயமான அரசியல் தீர்வுக்காகவே அவர்கள் கடந்த அறுபது ஆண்டுகளாகப் போராடியும் குரலெழுப்பியும் வருகிறார்கள். இதற்காகவே இந்தச் சமூகத்தினர் கடந்த காலங்களில் பெரும் உயிரிழப்புக்களையும், சொத்திழப்புக்களையும் பிரதேசங்களின் அழிவுகளையும் சந்தித்திருக்கின்றனர்.

ஆனால், இத்தனைக்குப் பின்னும் நிலைமை இன்னும் மோசமானதாகவே உள்ளது. அதாவது ஆரம்பத்தில் இருந்ததையும் விடப் பின்னடைவாகவும் தீர்வைப் பற்றிப் பேசுவது என்பதே கடினமான ஒன்றாகவும் மாறியிருக்கிறது.

இதற்கு எங்கே தவறு? யாரெல்லாம் இந்தத்தவறுகளோடு சம்மந்தப்பட்டிருக்கிறார்கள்? எவ்வாறான தவறுகள் நடந்திருக்கின்றன? போன்ற முக்கிய விடயங்களைக் குறித்து எத்தகைய ஆய்வு, மறுபார்வை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

தனியே வாராந்தப் பத்திரிகைகளில் நிலைமைகளை அனுசரித்தும் அந்த நிலைமைகளை மதிப்பீடு செய்தும் எழுதப்படும் கட்டுரைகளுக்கு அப்பால், கணிப்பிடத்தக்க, கவனிக்கத்தக்க வேறு எத்தகைய ஆய்வுகளோ மறுபார்வைகளோ செய்யப்படவில்லை.

இதேவேளை கடந்த கால அனுபவங்களை வைத்தும் தற்போதைய நிலைமை, எதிர்கால நடவடிக்கை போன்றவற்றை உள்நாட்டுச் சூழலில் வைத்தும் பிராந்திய, சர்வதேச அரசியற் பொருளாதார நிலைமைகளில் வைத்தும் பார்க்கப்பட்டதாகவும் இல்லை.

ஆகவே உரிமைக்காகப் போராடும் தமிழ் பேசும் சமூகமானது இன்று அடைந்திருக்கும் பின்னடைவைச் சீர் செய்வதைப் பற்றி எத்தகைய கரிசனையோடு இருக்கிறது என்பதற்கு இந்த நிலைமை, அக்கறையற்ற நிலை போதுமானது.

ஆனால், இன்னும் 'அடைந்தால் மகாதேவி இல்லையென்றால் மரணதேவி' என்ற மாதிரியான ஒரு பிடிவாத நிலைப்பாட்டில்தான் இந்தச் சமூகத்தினர் இருக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டுவதாயின் அது எந்த அடிப்படையில் எட்டப்பட வேண்டும் என்பதில் இன்று பல வகையான நிலைப்பாடுகள் உள்ளன. விடுதலைப் புலிகளின் காலத்தைய நிலைப்பாடு வேறு. இப்போதைய நிலைப்பாடு வேறு.

புலிகளின் காலத்தில், அவர்கள் வடக்கு கிழக்கை முழுமைப்படுத்தும் அடிப்படையில் தமது கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். ஆயினும் அதை முஸ்லிம் மக்கள் முழுத் திருப்தியோடும் உடன்பாட்டோடும் அங்கீகரிக்கத் தயாராக இருக்கவில்லை.

இதனால், புலிகளின் கோரிக்கைகள் ஒருவகையான பலவீனத்தையும், பின்னடைவையும் உள்ளே கொண்டிருந்தன. இதனைச் சீர் செய்வதற்காக அவர்கள் மேற்கொண்ட பிரபாகரன் - ஹக்கீம் உடன்படிக்கை வெற்றியளிக்கவில்லை. அதனால், அவர்களுடைய அரசியல் கோரிக்கை என்பது முழுமைப்படுத்தப்பட்டதாக அமையாது போயிற்று. எனினும் புலிகள் ஒரு பலமான அமைப்பாகவும், தீர்மானகரமான சக்தியாகவும் இருந்த காரணத்தினால், அவர்களுடைய கோரிக்கை பற்றிய எதிர்பார்ப்பும் அந்தக் கோரிக்கையை எட்டுவதற்கு அவர்கள் எந்த வழியிலும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற அவதானிப்பும் மக்களிடம் இருந்தது.

இது தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை சோர்வடையாமல் ஏதோ ஒரு வகையில் வைத்திருந்தது.

ஆனால், இன்று புலிகள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால், அவர்களால் முன்வைக்கப்பட்ட அரசியல் கோரிக்கை என்பது பின்னடைவைச் சந்தித்திருக்கிறது.

புலிகள் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம். அல்லது போர் முடிந்திருக்கலாம். ஆனால், புலிகள் உருவாகுவதற்குக் காரணமான போர் நடப்பதற்குக் காரணமான அடிப்படை விடயங்கள் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இதில் உண்மையுண்டு.

ஆனாலும் இந்த உண்மையைப் போல அதே அளவுக்கு வலுவுள்ள பிற விடயங்களும் உண்டு. அவையும் இனப்பிரச்சினை விடயத்திலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் தாக்கம் செலுத்துகின்றன.

அவற்றையும் நாம் கவனித்துக் கொள்ளவேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் நியாயமான அரசியற் கோரிக்கைகள் இனவாதக் கண்ணோட்டத்திலேயே கடந்த காலத்தில் அணுகப்பட்டிருக்கின்றன. இதில் தமிழ் - சிங்களம் என்ற இரண்டு தரப்புக்கும் சமபங்குண்டு.

இனவாதக் கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினை அணுகப்பட்டதன் விளைவாகவே இந்தப் பிரச்சினை தீர்வை எட்ட முடியாமலும், தீர்வை நோக்கி நகர முடியாமலும் இன்னும் இருக்கின்றது.

ஒரு தரப்புக்கு எதிராக இன்னொரு தரப்புப் போரிட்டதும் ஒரு தரப்பை இன்னொரு தரப்புத் தோற்கடித்திருப்பதும் இந்த இனவாத அடிப்படையில்தான்.

ஆனால், இவ்வளவுக்கும் இந்தப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை; நியாயமான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினை.

என்றபோதும் இதை அணுகுவதில் ஏற்பட்ட குறைபாடுகளும் தவறுகளும் நாட்டைச் சீரழித்ததுடன் பல்லாயிரக் கணக்கான உயிர்களையும் பலியிட்டிருக்கிறது.

மேலும் தீர்வுக்கான வழிகளையும் அடைத்திருக்கிறது.

ஆகவே இப்பொழுது இந்தப் பிரச்சினையை முற்றிலும் வேறு மாதிரியாகவே கையாளவேண்டியுள்ளது.

**அருள் மனோகரன்**

அவ்வாறு கையாளும்போதுதான் இந்தப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை எட்ட முடியும்.

ஆனால் அது அவ்வளவு எளிய காரியமல்ல. ஏனெனில் இன்று அரசியல் அரங்கில் செல்வாக்குச் செலுத்தி வரும் சக்திகள் தமிழ்த் தரப்பிலும் சரி, சிங்களத்தரப்பிலும் சரி இனவாதச் செல்வாக்குக்குட்பட்டவை என்பதுடன், இனவாதத்தையே அடிப்படை மூலதனமாகக் கொண்டவையும் கூட.

இங்கேதான் அரசியற் சிந்தனையாளர்களினதும், சமூக இயக்கங்களினதும், புத்திஜீவிகளினதும் பங்களிப்பு தேவைப்படுகிறது.

கடந்த காலத்தை மறுபார்வைக்குட்படுத்துவது என்பது, தவறுகளையும் பின்னடைவுகளையும் தவிர்ப்பதற்காகவே என்ற நியாயமான புரிதல்களுடன், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், அபிமானங்கள், சம்பிரதாயங்கள் என்பதற்கு அப்பால் பிரச்சினைகளை அவற்றின் உயிர்த்துடிப்போடு - இரத்தமும் தசையுமான நிலைமையோடு அணுகவேண்டும்.

அப்படிப் பார்த்தால், இலங்கை இனப்பிரச்சினையை அணுகுவதற்கு ஏற்கனவே கையாண்ட முறைமைகளையும், அப்போது பயன்படுத்திய சொல்லாடல்களையும் நிச்சயம் தவிர்க்க வேண்டும்.

உதாரணமாக சமஷ்டி என்ற சொல் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு அபாய வெடிகுண்டைப் போலவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அது தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தீர்வுக்கான அடிப்படையாக உணரப்படுகிறது.





இதைப்போல 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் பேசலாம். அல்லது வடக்குக் கிழக்கு இணைப்பு என்ற பேச்சுகள் என்று வந்தால் சிங்களத்தரப்பின் உணர்முறைமை பதற்றத்துக்குள்ளாகிறது.

தமிழ்த்தரப்பு இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசுவாசப்படுகிறது. இது மாதிரியான விடயங்களில் பலத்த முரண்பாடுகளும் இடைவெளிகளும் இருப்பதால், நிச்சயமாக இந்தச் சொல்லாடல்களை நாம் முற்றாகவே விலக்க வேண்டும்.

ஆனால், இந்தச் சொல்லாடல்களை விலக்கிப் புதிய சொற்களுக்கு செல்லும்போது அது தமிழ்த்தரப்பினால் அங்கீகரிக்கப்படுவதில்லை. அதை தமிழ்த் தரப்புச் சந்தேகத்தோடுதான் அணுகுகிறது. அப்படியானதொரு அனுபவம் தமிழர்களிடம் ஏற்பட்டும் உள்ளது.

எனவேதான் இந்த இடத்தில் அரசியற் சிந்தனையாளர்களின் பணியும் பங்களிப்பும் முக்கியமானது என்று மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது.

இப்போது அரசியல் தீர்வு என்பதை அரசாங்கம் அபிவிருத்தி என்ற அடிப்படையில் நகர்த்தப் பார்க்கிறது. இதில் சில சாத்தியங்கள் இருக்கலாம். ஆனால், முழுமை என்பது எட்டப்படுவதற்கு பல நிலைப்பாட்டாளர் பங்களிப்புகள் தேவை. அந்தப் பங்களிப்புகளை வழங்கும்போதுதான் தீர்வு என்பது சாத்தியப்படும்.

இதற்கு முற்றிலும் விஞ்ஞான மயப்பட்ட ஓர் அறிவுமுறையும் அணுகுமுறையும் அவசியம். இல்லையெனில் தமிழர்கள் அபிவிருத்தியிலும், அரசியற்தீர்விலும் பின்னடைந்தே தீருவர்.

***

## சொற்சிலம்பம் - போட்டி இல: 454

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | | 8 | | |
| | | 9 | | 10 | | | |
| 11 | 12 | | | 13 | | 14 | |
| 15 | | | 16 | | 17 | | |
| | | 18 | | 19 | | | 20 |
| | 21 | | | | | 22 | |
| 23 | | | | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:.................................................

விலாசம்:.................................................

.................................................

கையொப்பம்:.................................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 454

*சொற்சிலம்பம் 454 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன பெப்ரவரி 20ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*

**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### இடமிருந்து வலம்

1. பழக்கதோஷம்
5. கூட்டல் குறி
7. அருகில்
8. ஒரு வகை ஆட்டம்
9. பழுத்தல்.
11. சேலை
13. முகவரி
15. நோவு/ பலம்
17. இது வந்தாலும் கூதலும் வரும்
18. நாயன்மார் பாடியது. பத்துப் பாடல்கள் கொண்டது
21. நண்பகல் வேளை.
22. நிணம்/ இறைச்சி
23.சுவர்
24.சேனாதிபதி

### மேலிருந்து கீழ்

1. எல்லோருக்கும் எல்லாமும் ஒரே மாதிரியாகக் கிடைக் கும் நிலை.
2. உயிர்ப்பின் ஆரம்பம்.
3. கொள்வனவு செய்தல்
4. இராமாயணத்தில் கூனிபோன்று மகாபார தத்தில் இவர்.
5. மறைவில் தீட்டுவது
6. அகம்பாவம்
8. கூடிக்களித்தல்
10.அந்தரி
12.பீதி/அச்சம்/பயம்.
14. ஒரு கிரகம்/ ஒரு கிழமை
16. பழையது அல்ல.
18. விடை.
19. உலோகத்தை மெல்லிய நீளமாய் வார்த்தால் வருவது
20.திருமணம் செய்யாத இளம்பெண்
21.சந்திரன்/ அறிவு
22.ஒரு நிறம்

### போட்டி இல. 452 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **எ.நிரோஜினி,** சாளம்பைக்குளம், வவுனியா.

**2 ஆம் பரிசு** — **வி.கே.உதயசங்கர்,** குச்சவெளி, திருகோணமலை.

**3 ஆம் பரிசு** — **ரி.வசந்தா,** புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 452

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ண் | டு | க் | 2 க | ல் | 3 ப | 4 க |
| 5 ரௌ | த் | தி | ர | ம் | | க் | ன் |
| 9 ப | ணி | 7 வி | டை | 8 ப | த் | தி | னி |
| 11 தை | | த் | 10 பா | ரா | ட் | டு | |
| ரி | ஷி | தி | 12 தா | 13 மா | ரீ | ச | ன் |
| ய | | யா | ள | 19 ய | 14 வ | 15 து | 16 வ |
| ம் | 17 நா | ச | ம் | ண | 18 ம் | 19 க | ன் |
| 20 சா | ப | ம் | 21 அ | ம் | 22 பு | ள் | னி |

### பாராட்டுப் பெறுவோர்

(1) **ப.கமலராணி,**
மத்திய வீதி, திருகோணமலை.

(2) **ஸ்.நடராசா,**
ஆரையம்பதி - 02.

(3) **வ.தேவமனோகரி,**
சங்குவேலி, மானிப்பாய்.

(4) **செ.அருணன்,**
கோணாவில், கிளிநொச்சி.

(5) **ரி.குமாரசாமி,**
தர்மலோக மாவத்தை, கண்டி.

(6) **செல்வன் ப.அரவிந்தன்,**
பிரதிவிம்பராம றோட், களுபோவில.

(7) **சி.சிவலிங்கம்,**
விடுதி ஒழுங்கை, கல்முனை.

(8) **அ.துரைராஜா,**
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம்.

(9) **எ.ராஜ்குமார்,**
அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15.

(10) **ப.சரஸ்வதி,**
கொம்மாந்துறை, செங்கலடி.




**ப.ரகுநாதன்**
**வவுனியா**

கேள்வி: படித்ததும் வாய்விட்டுச்சிரிக்கத் தக்க ஒரு ஜோக் சொல்லுங்களேன் பித்தரே.

*பதில்:* நீதிமன்றத்தில் வழக்கொன்று விவாதிக்க ப்பட்டுக் கொண்டிருந்தது. குற்றவாளிக் கூண்டில் கையில் குழந்தையுடன் நின்று கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் நீதிபதி கேட்டார். நீர் உமது கணவரை விட்டுவிட்டுக் கைக்குழந்தையுடன் அடுத்த வீட்டுக்காரனுடன் ஓடிப்போனது குற்றம் தானே?

அந்தப் பெண் அப்பாவித்தமாகப் பதில் கூறி னாள். ஐயா, கொஞ்சக் காலத்துக்காவது என் குழந் தையின் அப்பாவோடு வாழலாமே என்று தான் ஓடிப்போனேன்.

**பி.கண்ணன்**
**தெமட்டகொட**

**கேள்வி:** டியர் பித்தா, சுத்துமாத்துப் பண்ணாமல் நேரடியாகப் பதில் சொல்லும். இன் றைக்கு உலகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது?

**பதில்:** நேரடியாகச் சொன்னால் அழிவை நோக்கி. இன்னொரு விதத்தில் சொன்னால் நாசமாகிப் போய்க்கொண்டிருக்கிறது.

**எஸ்.வைதேகி**
**ஹட்டன்**

**கேள்வி:** ஏதோ ஒரு நாட்டில் ஒரு பசு மாடு இரண்டு குரங்குக் குட்டிகளைப் போட்டிருக் கிறதாமே- அப்படியும் நடக்குமா?

**பதில்:** ஏன் ஆச்சரியப்படுகிறீர்? எங்கள் வீட்டில் அதுதானே நடந்திருக்கிறது.

**சே.அண்ணாமலை**
**வவுனியா**

கேள்வி:பித்தரே, கனவுகளுக்குப் பலன் சொல்ல உமக்குத் தெரியும் எனக் கேள்விப்பட்டேன். அடிக்கடி எனது தூக்கத்தில் என்னை யாரோ துரத்தித்துரத்தி அடிப்பது போலவும் அதைத் தாங்க இயலாது நான் வீதியால் ஓடுவது போலவும் கனவு காண்கிறேன். அதற்கு என்ன பலன் என்று சொல்வீரா?

**பதில்:**உமக்கு விரைவில் திருமணம் ஆகப் போகிறது என்று நினைக்கிறேன். ஏனென்றால் எனக்குத் திருமணம் நடப்பதற்கு முன்பு தூக்கத்தில் எனக்கும் இப்படி யான கனவு தொடர்ச்சியாக வந்ததுண்டு. இப்போது அது நிஜ வாழ்க்கையிலும் பிரதிபலிக்கிறது.

**க.தர்மிகா**
**யாழ்ப்பாணம்**


**கேள்வி:**இன்று டிப்ரொப்பாக உடையணிந்து கொண்டு கையில் செல்போனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று சந்திகளில் கூடி நின்று பாதையில் போகும் இளம் பெண்களைப் பரிகசிக்கும் இளைஞர்களுக்கு என்ன அறிவுரை கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:**இக்கால இளைஞர்களுக்கு அறிவுரை சொல்ல வைப்பித்து என்னை வம்பில் மாட்டிவிடத் தீர்மானித்து விட்டீர். இருந்தாலும் சொல்கிறேன். அடுத்த சந்தியில் நிற்கும் ரோட்டோர ரோமியோக்கள் அவர்களைக் கடந்து செல்லும் உங்கள் அக்காவுக்கோ தங்கைக்கோ இதைத் தான் செய்வார்கள் என்பதை மறந்து விடாதீர்கள் இளைஞர்களே!

**ச.ராதிகா. கொழும்பு.**

கேள்வி:பித்துமாமா, நான் உமது மகனைக் காதலித்தால் எங்களது காதலை நீர் அங்கீகரிப்பீரா?

**பதில்:**நீர் தவறாக என்னை அடையாளம் காண்பதாக நம்புகிறேன். இருந்தாலும் சொல்கிறேன். நான் சாதி, மத,இன, மொழி அந்தஸ்து பற்றியெல் லாம் அலட்டிக் கொள்ளாதே பேர் வழி. இருந்தாலும் கட் டாயம் வயது வித்தியாசம் குறித்து அக்கறை செலுத்து வேன். உமது கேள்வியைப் பார்த்தால் நீர் 15 வயதைத் தாண்டியவர் போலப்படு கிறது. எனது மகனுக்கு இப் போது தான் மூன்று வயதா கிறது. எப்படி உங்களை நான் சேர்த்து வைப்பது?



# எட்டுப்போல் முட்டையிடும் அபூர்வ கோழி



சீனாவின் ஹெபி பிரதேசத்தில் வசிக்கும் டொங் என்ற பெண்மணியினால் வளர்க்கப்படும் இக்கோழியின் கொக்கரிப்பு புதுமையான ஒரு ஒலியில் வெளிப்படுவதாகவும், அத்தகைய கொக்கரிப்புக்குப் பின்னரே இக்கோழி எட்டு வடிவத்திலான முட்டையை இடுவதாகவும் அப்பெண்மணி தெரிவிக்கிறார்.

ஆரம்பத்திலிருந்தே இக்கோழியின் நடைமுறைப்போக்கு, அசாதாரணமான ஒன்றாகவே தமக்குத் தென்பட்டதாகவும் இத்தகைய புதுமையொன்றை

இக்கோழியிடமிருந்து தாம் எதிர்பார்க்க வில்லை என்றும் டொங் என்ற மேற்படி பெண்மணி ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.


## சுடர் ஒளி வாசகர்களுக்கு...

சுடர் ஒளி வாரமலருக்கு தமது ஆக்கங்களை அனுப்பிவைக்க விரும்புவோர் கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகுதியான ஆக்கங்கள் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்படும்.



## புல்டோசர் விற்பனைக்கு

Caterpillar D4E bulldoger Angle Blade, original ripper original Cap, Clutch Model

வாடகைக்கு விடப்படும்

தொடர்பு கொள்ளவும்:
யூசுப் - 0773203934


## பல்சுவை


## காணி விற்பனைக்கு

யாழ். ஸ்டான்லி வீதி, ஸ்ரீதர் தியேட்டர் பின்புறம் பிரதான வீதியில் 2 பரப்பு, 2000 சதுர அடி கொண்ட வீடு, சுற்று மதில், தொலைபேசி, தண்ணீர் மோட்டர் மற்றும் சகல வசதிகளும் உடைய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0758116732, 0776312155


# தேன் நிலவு



அந்தக் காலத்தில் வடக்கு ஜேர்மனியில் உள்ள ஒரு பழங்குடியினர் திருமணமான புதுத் தம்பதிகளுக்கு திருமண நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்கு தேனில் இருந்து தயாரிக்கப்பட்ட ஒரு பானத்தை தினமும் அருந்தக் கொடுத்து வந்தனர். அவர்கள் அந்த ஒரு மாத காலத்தை கணக்கு வைப்பதற்காக சந்திரன் வளர்ந்து, தேய்ந்து மீண்டும் வளர ஆரம்பிக்கும் கால இடைவெளியை அதாவது இரு பௌர்ணமிகளுக்கு இடைப்பட்ட காலத்தைக் கணக்கிட்டு வந்தனர்.

தேனையும் நிலவையும் சம்பந்தப்படுத்தி அவர்கள் ஆரம்பித்து வைத்த வழக்கம் தான், பின்னாளில் பிரபல்யம் பெற்று தற்காலத்தில் நாகரீக நடைமுறையாக ஹனிமூன் என்றாகியுள்ளது.


## மணமகன் தேவை

இலங்கையில் பிறந்து இந்தியாவில் படித்து, டாக்டராக மதுரையில் பணிபுரியும் விவகாரத்தான இந்து அனுச நட்சத்திரம் 35 வயதுடைய பெண்ணிற்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர், இஞ்சினியர், எக்கவுட்டன் மற்றும் நல்ல படிப்புள்ள, நிரந்தர வேலையுள்ள வரனைப் பெற்றோர்கள் தேடுகிறார்கள்.
தொடர்பிற்கு: 0758116732, 0776312155, 0991452 - 2586254

இந்தியாவில் B.C.A கொம்பியூட்டர் படித்து மதுரையில் டாக்டரிடம் அஸிஸ்ட்டன்ட் ஆகப் பணிபுரியும் 25 வயதுடைய அழகிய பெண்ணுக்கு நிரந்தர தொழில் உடைய, மீன ராசி - பூரட்டாதி நட்சத்திரத்தில் மணமகனைத் பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புக்கு: 0758116732 0776312155, 0091452 2586254


# நாய்களுக்கு நிற வேறுபாடு தெரியுமா?



நீங்கள் நாய் ஒன்றை வளப்பீர்களானால் உங்கள் நடவடிக்கைகளில் சிலவற்றை அதனுடன் செல்லப் பிராணி என்ற முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். அது உங்கள் வீட்டில் வாழும். உங்கள் தனிமையைப் போக்கவும் உதவும். நீங்கள் விரும்பினால் உங்களுடன் உலவுவதற்கு வரும். ஆனால் நீங்கள் பார்க்கும் உலகத்திற்கும் உங்கள் நாய் பார்க்கும் உலகத்திற்கும் வேறுபாடு உண்டு என்பதை நம்புவது கடினம் தான். ஏனென்றால் நாய்களுக்கு நிறங்கள் தெரிவதில்லை.

நாய்கள் நிறங்களின் வித்தியாசத்தை புரிந்துகொள்கின்றனவா என்பதைக் கண்டறிய சோதனைக்கு மேல் சோதனை நடத்தப்பட்ட போதிலும் அது நிரூபிக்கப்படவில்லை.

நாய் தனது மோப்பத்தின் மூலமே தனக்குரிய உணவைக் கண்டு பிடிக்கின்றது. மணத்தைக் கொண்டே பொருட்களின் வேறுபாட்டை உணர்ந்துகொள்கின்றது.

பூனைகள் மத்தியிலும் இதேபோல் பல்வேறு சோதனைகள் நடத்தப் பட்டன. நிறங்களை வைத்து அவற்றால் தமது உணவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எல்லா நிறங்களுமே பூனைகளுக்குச் சாம்பல் நிறமாகத் தெரிவதாகக் கருதப்படுகிறது.

வேறெந்த மிருகமாவது தனது உணவை நிறத்தைக் கொண்டு கண்டு பிடிக்கின்றதா என்று பார்த்தால், மனிதனுக்கு அடுத்த படியாக குரங்குகள் மட்டுமே நிறங்களின் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்கின்றன.


## வடபகுதிக்கான விசேட கூப்பன் சீட்டிழுப்பு முடிவுகள்

2011.01.22 - யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கு

| பரிசு | பெயர் | முகவரி | தே.அ.அ.இல | பார்கோட்.இல |
|---|---|---|---|---|
| முதல் பரிசு முச்சக்கர வண்டி | திரு.T.கபிலன் (எம்.கணேசன் - விற்பனை முகவர் / வவுனியா) | குருமன்காடு, மன்னார் வீதி, வவுனியா | 900293054 V | 08510272917 |
| இரண்டாவது பரிசு மோட்டார் சைக்கிள் | திரு.P.கருணாரத்ன (எம்.கணேசன் - விற்பனை முகவர் / வவுனியா) | 152 உடுமுள்ள, பாதுக்க | 560551940 V | 23430561971 |
| மூன்றாவது பரிசு | திரு.அ.பெருமாள் (T.A.S. வினிதா - மாவட்ட விற்பனை முகவர் / வவுனியா) | 4, மரக்கறிகடை ஸ்ரோஸ் வீதி, வவுனியா | 690914760 V | 23420663405 |
| | 10 சைக்கிள்கள் | | | |
| | திரு.க.இரத்தினம் | அளவெட்டி வடக்கு | 452930862 V | 23470058438 |
| | திரு.ர.ரவீந்திரன் | கியு.ஆர்.எஸ். இல.1, தேசிய கல்விக் கல்லூரி, பூந்தோட்டம், வவுனியா | 633440310 V | 05831357925 |
| | திரு.ம.மதன் (T.A.S.வினிதா - மாவட்ட விற்பனை முகவர்/ வவுனியா) | 123, பசார் வீதி, வவுனியா | 823441401 V | 08511091872 |
| | திரு.கே.பி.இராஜேந்திரபதி சொர்ணவயல் | உயிர்தராசன்குளம், முருங்கன் | 453491854 V | 05830034296 |
| | திரு.பொனன் இரத்தினசிங்கம் (க.திருச்செல்வம் - விற்பனை முகவர்/ நல்லூர், யாழ்ப்பாணம்) | செல்வபுரம், உரும்பிராய், தெற்கு | 493092731 V | 05450281284 |
| | திரு.ஜீவா புஷ்பகுமார் | 6, உதயகம, இம்புல்கோட | 811023868 V | 23411133673 |
| | திரு.தமியன் ஜுலிதயன் | 4ஆவது மைல் போஸ்ட் ஆனைக்கோட்டை | 753491058 V | 00910103520 |
| | திரு.தி.தங்கவேலு | நாவற்குழி, கைதடி | 692180215 V | 23470058746 |
| | திரு.யு.ஜுபிற்றல் கூங்க | செபஸ்தியன் வீதி, மன்னார் | 832073024 V | 23410098568 |
| | திரு.த.தவராஜா (R.திருச்செல்வம்- விற்பனை முகவர்/நல்லூர், யாழ்ப்பாணம்) | பாரதி வீதி, நாயன்மார் தெரு, யாழ்ப்பாணம் | 0903024566 | 05840343663 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

234/2 காலி வீதி,கொழும்பு 03.
Tel: 2470662,2470663
web: www.nlb.lk

# தேர்தல் கூட்டணிகள்

'பாவம் மக்கள்' என்றொரு கவிதைத் தொகுதி ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்தது. அன்றைய நாட்களில் நாடு காண முயன்றவர்களையும் விடுதலைக்கென முயன்று திசைமாறியவர்களால் ஏற்பட்ட நிலைமையையும் அந்தத் தொகுதிக் கவிதைகள் எடுத்தியம்பியிருந்தன. குறிப்பாக மக்களின் நிலைமையை எண்ணிய கவலைகளே அந்தத் தொகுதியின் வெளிப்பாடாகும்.

அந்தக் கவிதைகள் வந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் மக்களின் நிலைமைகள் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன. மக்களின் நிலைமை என்பது பரிதாபமாகவே உள்ளது.

இப்போது வந்திருப்பது உள்ளூராட்சித் தேர்தல். தேர்தல் என்று வந்து விட்டாலே மக்களின் நிலைமை இன்னும் பரிதாபமாகவே இருக்கும். மக்களை விடுவிப்பது, விமோசனப்படுத்துவது என்பதற்குப் பதிலாக மக்களைச் சீரழிப்பது, அவர்களை ஏமாற்றுவது என்ற மாதிரி தேர்தல் விளையாட்டுகளும் தேர்தலுக்கான கூட்டணிகளும் திடீரென முளைத்து விடும்.

இப்போது தேர்தற் கூட்டணிகள் முளைத்திருக்கின்றன. இந்தத் தேர்தற் கூட்டணிகளும் களத்தில் மக்களைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தத்தான் போகின்றன.

இந்தக் கூட்டணிகளில் பகைவர்கள் நண்பர்களாகுவர். நண்பர்கள் பகைவர்கள் ஆவர். பிரிந்தவர் ஒன்று சேர்வர். இதெல்லாம் புதிதல்ல.

யார் சேர்ந்தாலென்ன யார் பிரிந்தாலென்ன எங்களுக்கு என்ன லாபம் கிடைக்கப்போகிறது என்றுதான் பெரும்பாலான மக்கள் சிந்திக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தேர்தற் காலக் கூட்டணிகள் சிரிப்பூட்டும் அல்லது எரிச்சலூட்டும் சங்கதியாகவே இருக்கிறது.

இதற்குக் காரணம் கடந்த காலக் கூட்டணிகள் எல்லாம் நடந்து கொண்ட முறைகளும் கூட்டத் தவறிய வெற்றிகளுமே.

தேர்தலில் இந்தக் கூட்டணிகள் வென்றாலும் சரி தோற்றாலும் சரி ஒரு போதுமே மக்களைக் குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. தேர்தலின் பின்னர் அவை மெல்லக் கலைந்து விடுவன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் வெற்றியைப் பெறுவதற்கான உபாயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணையாத ஒரு கூட்டணியை வைத்துக் கொண்டன.

ஆனால், தேர்தல் முடிந்தவுடன் அந்தக் கூட்டணி பற்றிய கதையே இல்லை. இவை இரண்டும் அறிவித்தபடி எதிர்கால நடவடிக்கைகளும் அமையவில்லை. பதிலாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்குத் தயாராகியிருக்கிறது.

பல கூட்டங்களில் அது அழையாவிருந்தாளியாகவும் (யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வந்திருந்தபோது கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. ஆனால் அந்த நிகழ்வில் அப்பாத்துரை விநாயகமூர்த்தி என்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டார். இதைவிட எம் பொதுவாகவே பல நிகழ்ச்சிகளிலும் நாம் புறக்கணிக்கப்படுகிறோம் என்று கூட்டமைப்பினர் பகிரங்கமாகவே கருத்துரைத்து வருகின்றனர்). கலந்து கொள்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. போன்ற பல கட்சிகள் கூடி அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற மாதிரி நின்றன. ஆனால், ஜெனரல் உள்ளே சிறைக்குள் தள்ளப்பட்டவுடன் கூட்டு உடைந்து சிதறி விட்டது.

அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் வேறு கூட்டுகள். வேறு அணிகள். வேறு ஆமளிகள்.

அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என் சொல்லிவிட்டு அப்பால் போவதற்கு இதொன்றும் கண்ணாடணியின் கொமடியும் இல்லை. சினிமாச் சங்கதியுமல்ல. அரச அதிகாரத்தை, நிர்வாக இயந்திரத்தை, மக்கள் அமைப்புகளை, சனங்களின் வாழ்க்கையை, அவர்களுடைய எதிர்காலத்தை, நாட்டை



இயக்குகின்ற ஒழுங்கமைக்கின்ற அரசியல் விவகாரம் இது.

எனவேதான் அரசியல் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் விமர்சிக்கப்படுகின்றன. அவை உற்று நோக்கப்படுகின்றன. அவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

தேர்தல் என்பதைத் தங்களுடன் நேரடியாகவே சம்மந்தப்பட்ட ஒரு விசயமாக மக்கள் பார்க்கும்போது இந்தக் கூட்டுகள் மற்றும் அணிகளைப் பற்றி அவர்கள் அச்சமடையவும் எச்சரிக்கையடையவும் கூடிய நிலைமையே உண்டு. உண்மையில் தேர்தற் கூட்டு என்பது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு ஏற்பாடுதான்.

தோல்வியை இந்தத் தரப்புகளோ அல்லது கட்சிகளோ தனித்து நின்று தவிர்த்து வெற்றி பெற முடியாதா? ஏனெனில் ஒவ்வொரு கட்சியும் தனக்கென்ற தனிச் சின்னம், தனிக் கொடி, தனித்துவமான கொள்கை அல்லது அடையாளம் போன்றவற்றைக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு தனித்துவ அடையாளங்களைக் கொண்டிருக்கும் கட்சிகள் ஏன் தோற்கும்படி ஆகின்றன? அல்லது, இவற்றால் ஏன் தனித்து வெற்றி பெற முடியாமற் போகிறது? இதுதான் பிரச்சினையே!

இந்தக் கட்சிகளின் கொள்கை எத்தகையதாக இருந்தாலும் அதனால் மக்களுக்கான நன்மைகளையோ பிற அடைதல்களையோ பெறமுடியாது என்றால், அந்தக் கட்சியை மக்கள் அங்கீகரித்துக் கொள்வதில்லை.

இதேவேளை கடந்த காலங்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறிய பல கட்சிகளையும் மக்கள் நிராகரிக்கின்றனர். இதனால், தனித்து நிற்க முடியாத கட்சிகள் ஒரு கூட்டணிக்கு வருகின்றன.

இந்தக் கூட்டணிகள் பல வகைப்படும். தாம் அறுதிப் பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்று விரும்புகின்ற சில கட்சிகள் அதற்கேற்ப காய்களை நகர்த்திக் கூட்டுகளை அமைத்துக் கொள்கின்றன. மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதற்கு நல்ல உதாரணம்.

அதேபோன்று பெரும் தரப்போடு சேர்ந்து போட்டியிட்டு தமது வெற்றியையும் உறுதிப்படுத்தி, தம்மையும் பாதுகாத்துக் கொண்டு, நன்மைகளையும் பெற்றுக் கொள்ளும் கட்சிகள் - சிறு தரப்பினர் இன்னொரு வகை. இதற்கு உதாரணம் நம் விமல் வீரவன்ஸ, றிஸாட் பதியுதீன் போன்றோர்.

மற்றொருசாரார் தம்மையும் கட்சியையும் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கூட்டு வைத்துக் கொள்ளுவோர். இவர்களுக்குச் சிறந்த உதாரணமாக இப்போது இருப்பது, வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, த. சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அமைப்பு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த இரண்டு கட்சிகளும் எந்தத் தேர்தலில் தனித்து நின்று போட்டியிட்டாலும் ஓர் இடத்தைக் கூடத் தக்கவைக்கவோ கைப்பற்றவோ முடியாதவை. இந்த உண்மையை இந்த இரண்டு கட்சியினரும் மக்களும் நன்றாகவே அறிவர்.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து கொள்வதற்கு இந்த இரண்டு கட்சிகளும் இணங்கியிருப்பதற்கான காரணத்தைப் பலரும் நன்றாகவே அறிவர்.

கூட்டமைப்புடன் சேர்ந்து கொண்டால் தமக்கும் ஏதாவது கிடைக்கும். அல்லது கிடைப்பவற்றில் பங்கு போட்டுக் கொள்ளலாம். இது கட்சியையும் பாதுகாத்து, அடுத்து வருகின்ற மாகாண சபைத் தேர்தலுக்கும் பின்னர் வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கும் ஒரு வழியை வாய்ப்பை தரும் என்று இந்த இரண்டு தரப்பினரும் சிந்திக்கின்றனர்.

எனவேதான் பரம பகையை மறந்து, பிரிந்தவர் மீண்டும் சந்தித்தால்.. என்ற உணர்ச்சி பூர்வமான நிலையில் ஒன்றாகியுள்ளனர் இவர்கள்.

இதேவேளை இந்தத் தேர்தலானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் மிகச் சவாலான ஒரு நிலையே. 2004 காலப்பகுதியின் நிலைமையை 2009 தேர்தலில் கூட்டமைப்புப் பெற முடியவில்லை. இதற்கு வடக்குக் கிழக்கின் அரசியல் நிலைவர மாற்றம் பெரிய பங்காற்றியது. அரசாங்கத்தின் செல்வாக்கும் புதிய அறிமுகமும் மக்களின் கடந்த காலக் களைப்பும் ஒரு வலுவான காரணம் ஆகியது.

எனவே 2009 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

இப்போது இன்னும் பலவீனமான நிலைக்கு கூட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேரும் போனதைப் போல இன்னொரு நிலையில் தான் கூட்டமைப்பு இன்றிருக்கிறது எனலாம். அத்தகையதொரு நிலையை - இறுக்கமான பொறி அமைப்பை இந்த அரசாங்கம் இன்று கொண்டிருக்கிறது.

ஆகவே வேறு வழியின்றி இந்தத் தரப்புகள் விருப்பமின்றியே அரசின் பக்கம் சாய வேண்டி ஏற்படுகிறது.

ஏனெனில், மக்களுக்கு நிறையச் செய்ய வேணும். அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேணும். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேணும் என்ற மாதிரியான ஒரு கட்டாய நிலை இந்தத் தரப்புகளுக்கு ஏற்படுகிறது. ஆனால், இவற்றை அரசாங்கம் நினைத்த மாத்திரத்தில் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

ஆகவே, ஒரு தடுமாற்ற நிலையில் கூட்டமைப்பு இருக்கிறது. இது உள்ளூராட்சித் தேர்தலைப் பாதிக்கும். உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் என்பது, பிரதேச அபிவிருத்தியை மையமாகக் கொண்டது. இதனால் அரசியல் அரங்கில் இது வேறு விதமான தொனிப் பொருளையே கொடுக்கும்.

அதாவது இலட்சியவாத அரசியலுக்குப் பதிலாக அபிவிருத்தி நலத்திட்டங்கள் - உதவிகள் போன்றவற்றையே இந்தத் தேர்தல் மூலம் மக்கள் எதிர்பார்ப்பது வழமை.

ஆகவே இது மேலும் இலட்சியவாதக் கட்சிகளுக்கு ஒரு சவாலான விடயம். இந்தச் சவால் கூட்டமைப்புக்கும் ஏற்பட்டுள்ளது. இதனால், அது தன்னைப் பலப்படுத்திக் கொள்ள புளொட்டையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் இணைத்துக் கொண்டுள்ளது.

தனது நெருக்கடிகளைக் குறைத்துக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்த இரண்டு தரப்பின் இணைவை

**ஜோசப் தயாளன்**

கூட்டமைப்புப் பயன்படுத்திக் கொள்ள விளைகிறது. இதில் காணாமற் போவது முதலில் யார் என்றால் புளொட் அமைப்பே. சித்தார்த்தன் ஒரு தனியாளாக தனிமைப்படுத்தப்படுகிறார்.

அடுத்தது தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஆனந்த சங்கரியுமே. இதில் இன்னொரு வேடிக்கையான சங்கதியும் உண்டு.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது பல தரப்புகளை உள்ளடக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. அதாவது, ஒரு பொது உடன்படிக்கையின் நிமித்தமாகப் பலகட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியதே தமிழர் விடுதலைக் கூட்டணியாகும்.

ஆனால், பின்னர் அந்தக் கூட்டணி சிதைந்துபோன நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியது.

இப்போது அந்தக் கூட்டணியும் இந்தக்கூட்டமைப்பும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. இந்தக் கூட்டமைப்பிலிருந்தும் தமிழ்க் காங்கிரஸ் பிரிந்து சென்று விட்டது. சிவாஜிலிங்கம் போன்றவர்கள் விலகிவிட்டனர். ஆனாலும் கூட்டமைப்பும் இருக்கிறது. கூட்டணியும் உள்ளது.

இந்த நிலையில் யாரை யார் காப்பாற்றிக் கொள்வது, நீ பாதி நான் மீதி என்றோ அதற்கு மேல் அல்லது அதற்குக் கீழ் என்ற மாதிரியான ஏற்றுக் கொள்ளல்கள், சமரசங்கள், எல்லாம் கலந்த நிலையில் இந்தக் கூட்டணி அமைந்துள்ளது.

இது வடக்குக் கிழக்கில் குறிப்பாக வடக்கில் தேர்தலிலும் குதிக்கப் போகிறது. மக்கள் எல்லாவற்றுக்கும் தயாராக இருக்கிறார்கள். பதில் சொல்லுவதற்கு நல்லவர்கள் நல்லதையே செய்வார்கள். ஆனால், அதற்கான காலம்....? ★★★

# காலாவதியான காலத்தில் என் ஒருநாள்

யாழ்ப்பாணம் இருட்டுக்குள் கட்டிவைக்கப்பட்டிருந்த ஓர் காலத்தில் புத்தகங்களுக்குத் தேடியலைந்திருக்கிறேன். விசில்ச்சத்தங்களில், பயணிக்கும் பாதைகள் மூடிக்கொள்ளும். அந்தவேளைகளில் எறும்புகள் கூடத் தெருக் கடப்பதில்லை. எங்காவது ஒரு தெரு முனையில் மதிலோடு ஒட்டிக் கொண்டு என்னைக் கடந்துபோகும் பிரமாண்ட பச்சை ரதங்களை எண்ணிக் கொண்டிருந்திருக்கிறேன். சில வேளைகளில் எனக்கு நிழல்கிடைக்காமல் போய்விடும். சூரியவெயில் தலையை பிளந்து இறங்கி என்னுள் கொதிப்பை கக்கும். அந்தக் கொதிப்பு அம்மாவையும், தம்பியையும் போய்ச்சேரும். எல்லாப் பச்சை ரதங்களும் போய்முடிந்ததும் அனுமதி கிடைக்கும். என் தெருவில் பயணிக்க எங்காவது ஒரு மூலையில் தனிமையில் உடைந்து கிடக்கும் நூலகம் நோக்கிப் பயணித்திருக்கிறேன்.



ஒவ்வொரு தெரு மூலையிலும் முளைத்திருக்கும் காவலரண்கள், கண்களையும், இதயத்தையும் வீங்கி வெடிக்கச் செய்யும். உயர்ந்திருக்கும் மின்கம்பங்களோடு கம்பங்களாய் நிற்கும் ஏ.கே. 47கள் எனக்காக ரவையேற்றம் செய்யப்பட்டு, என்னையே குறிபார்த்து காத்துக்கிடப்பதை போல் மனசுக்குள் பயம் தெறிக்கும். அவைகளைத் தாண்டும் போதெல்லாம் பின்னால் வரும் உந்துருளிகள் என்னைக்கடக்கும் வரை முதுகும், பிடரியும், பின்தெரியும் எல்லாப் பாகங்களும் கூசும். எதிர்ப்படும் தலைக்கவசமணிந்த பல்ஸர் உந்துருளிகளைக் கண்டால் உயிரின் அடிப்பகுதிவரை வலிக்கும். யாழ்ப்பாணத்துக் கோடை வெயில் காலத்திலும் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் கணங்களை உணர்வேன்.

எப்படியாவது நான் போகப் போகும் நூலகத்திற்கான குச்சொழுங்கைகளை கண்டு பிடித்துவிடுவேன். பிரதான வீதிகளை கடக்கும் போது வரும் கலக்கம், மூளைக்குள் வரைந்து வைத்திருந்த குறுக்கொழுங்கைகளின் வரைபடத்தையே மறக்கச் செய்துவிடும். ஒவ்வொரு முடக்கிலும் குந்தியிருக்கும் பிள்ளையார்களும், முருகன்களும் நீண்ட நாட்கள் மணியோசையையும், மந்திரவாசனையையும் கேட்காத சலிப்பை வெளிக்காட்டிக் கொண்டிருப்பர். கோயில்களின் முற்றங்களில் புல் மண்டிக்கிடக்கும். கல் நாட்டில் பொங்கலிடப்பட்ட அடுப்பிடங்களில் காலாவதியான கரித்துண்டுகள் மட்டும் கிடக்கும். சிலவேளைகளில் குட்டைநாய்கள் பழைய குட்டை மறக்க முடியாமல் அதற்குள் முடங்கியிருக்கும். கோவில் முற்றங்கள் குழந்தைகளின் தடங்களுக்காக காத்துக்கிடக்கும். தேர்முட்டிகள் என்னையும், போன கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட கூடப்படித்தவனையும், நேற்றிரவு வெள்ளை வானில் கடத்தப்பட்ட பக்கத்துவீட்டு நண்பனையும், இன்று காலை மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்த சித்தியின் மகனையும் தேடிக் கொண்டிருக்கும்.

**ஜெரா**

தெருவில் என்னைக்கடந்து போகும் என் அழகியவளுக்கு நான் இனந்தெரியாத நபராகிப் போயிருக்கிறேன். அவளும் நானும் பேசிய வார்த்தைகள், சிரிப்பொலிகள், சண்டைகள், அழுகைகள் எல்லாவற்றையும் மறந்தவளாக, ஓர் அந்நியத்தனத்தை மூடிக்கொண்டிருக்கிறாள். எப்படியும் உடைந்து கிடக்கும் ஓர் நூலகத்தை அடைந்துவிடுவேன். அக்காலத்தில் என்போன்ற வயதினர் அகோர அமில மழை பெய்தால் கூட அந்த இடங்களில் ஒதுங்கிக் கொள்வதில்லை. புத்தகங்களை காப்பவர் முழுசிக்கொண்டு எச்சில் விழுங்குவார். நான் கடந்த காலங்களின் நிகழ்பதிவுகள் பற்றியவற்றை தேடத்தொடங்குவேன். சில காலங்களுக்கு முன் வாசித்து நினைவாக வைத்துவிட்டுப்போன இடங்களில் இருந்து வாசிக்கவெனத் திருப்பித் தேடும் புத்தகங்கள் காணமல் போயிருக்கும். "ஆழ ஊடுருவித்" தேடினால் மனித நடமாட்டம் அற்றமூலைகளில் ஒளிந்திருக்கும், அல்லது பகலில் எரியூட்டப் பட்டிருக்கும். அவைகள் கருகிக் கிடந்த போதிலும், அவற்றிலிருந்த செவ்வரிகள் மினுமினுத்துக் கொண்டேயிருக்கும். தேடித் தோற்றுப்போவேன். வெறுமையாய் கிடக்கும் நூலகங்கள் என்னையும் வெளியே தள்ளும். தினசரிப் பத்திரிகைகள் பக்கம் போவதேயில்லை. மரணங்களை வாசிக்க மனத்துக்கு திராணியில்லை. பூட்டப்படாத என்மிதிவாகனம் வீடு நோக்கும்.

வீட்டில் ஏதாவது சாப்பிட இருக்கும். சாப்பாட்டுத் தட்டுநிறைய பயம் வைக்கப்பட்டிருக்கும். பரிமாறிக் கொள்வோம். சிந்திக்க முடிவதில்லை. கதைக்க முடிவதில்லை. மௌனப் பெருவெளி எல்லோர்க்கிடையிலும் இடைவெளிகளை அதிகரித்துக்கொண்டே போயிருந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தை இரவு போர்த்திக்கொள்ளும். ஏதாவது பயம் கலந்த நினைவு, தூக்கத்தை தூரப்போட்டுவிடும். கட்டில் கசங்கி கழியும். சில கணங்களில் கண்ணீரால் குளித்து விடும். தெருவில் பயணிக்கும் இனந்தெரியாத இரைச்சல்கள் என் வீட்டு முற்றத்திலே முற்றுப்பெறுவதாக எழும் அதீதபீதிக் கற்பனை அச்சுறுத்தும். அம்மா அடிக்கடி என்னைத் தொட்டுப் பார்த்துக் கொள்வாள். அப்பாவின் கொறட்டைச் சத்தம் தன்னிச்சையாக ஓய்வெடுத்திருக்கும். இரவு நிர்வாணமாயிருக்கும். பயம் மட்டுமே புணர்ச்சியில் ஈடுபட்டு குழந்தைகளைப் பிரசவிப்பதாகச் சொன்னார்கள். சில ஊனக் குழந்தைகள் புதுமணத்தவர்க்குப் பிறந்திருந்திருந்தனர். விடிந்தும் விடியாமலும் இருக்கும் புலர்பொழுது, மறுநாளை அறிவிக்கும். சேவல்கள் கூவுவதையே நிறுத்திக்கொண்டன.

ஒவ்வொரு தெரு மூலையிலும் முளைத்திருக்கும் காவலரண்கள், கண்களையும், இதயத்தையும் வீங்கி வெடிக்கச் செய்யும். உயர்ந்திருக்கும் மின்கம்பங்களோடு கம்பங்களாய் நிற்கும் ஏ.கே.47கள் என்க்காக ரவையேற்றம் செய்யப்பட்டு, என்னையே குறிபார்த்துக் காத்துக்கிடப்பதைப் போல் மனசுக்குள் பயம் தெறிக்கும். அவைகளை தாண்டும் போதெல்லாம் பின்னால் வரும் உந்துருளிகள் என்னைக்கடக்கும் வரை முதுகும், பிடரியும், பின்தெரியும் எல்லாப் பாகங்களும் கூசும். எதிர்ப்படும் தலைக்கவசமணிந்த பல்ஸர் உந்துருளிகளைக் கண்டால் உயிரின் அடிப்பகுதிவரை வலிக்கும். யாழ்ப்பாணத்துக் கோடை வெயில் காலத்திலும் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் கணங்களை உணர்வேன்.

2011 இல் ஓரிரவு தெருக்களில் உலாத்திக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு சந்தியிலும் திடிரென முளைத்திருந்த ஏ.கே47 மனிதர்களும், தடைக் குறியீடுகளும் ஏதோ ஒரு குரூர உணர்வை எனக்குள் தூண்டின. ஓர் சந்தியில் அடையாள அட்டை என்னை அடையாளப்படுத்திக் கொண்டது. என் இரவுப் பயணம் 2006 ஐ நோக்கிப்பயணித்தது. என் அறைக்குள் புகுந்து மூலையொன்றில் ஒடுங்கிக் கொண்டேன். நாளையை நினைக்க வெறுப்பாயிருந்தது. தூக்கத்தை தேடத் தொடங்கினேன். ★★★



# இளைஞன்



## திரைவிமர்சனம்

கலைஞர் கருணாநிதி கதை, திரைக்கதை, வசனத்தில் வந்துள்ள படம். கவிஞர் பா.விஜய் நாயகன். 1959களில் நடக்கிற கதை. கப்பல் கட்டும் கம்பெனி நடத்துபவர் சரத்பாபு. இரக்க மனதுக்காரர்.

வயதானதும் பொறுப்புகளை மகன் சுமன் வசம் ஒப்படைக்கிறார். சுமன், தொழிலாளர்களை கசக்கி பிழிகிறார். வெளியுலகை காட்டாமல் அடைத்து போட்டு அதிக நேரம் வேலை வாங்குகிறார். எதிர்ப்பவர்கள் அடியாட்களால் கொல்லப்படுகின்றனர். தொழிலாளர்கள் மதிக்கும் நாசரையும் கொல்கின்றனர். அவர் மகன் பா.விஜய் வெகுண்டெழுகிறார். கப்பல் கட்டும் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்து சுமனுக்கு எதிராக தொழிலாளர்களை ஒன்றுபடுத்துகிறார். வெளிநாட்டில் படித்து விட்டு வரும் மீரா ஜாஸ்மினும் அண்ணன் நடத்தைகளில் வெறுப்பாகி பா.விஜய்யுடன் கைகோர்க்கிறார். பீரங்கி, வெடிகுண்டுகள் என ஆயுத போராட்டத்துக்கு தயாராகின்றனர். பா.விஜய்யை தாய் குஷ்பு தடுத்து அகிம்சை வழியில் உரிமைகளை மீட்டெடுக்க கோருகிறார். அடிமைத்தனத்தில் இருந்து தொழிலாளர்கள் எப்படி மீட்கப்படுகின்றனர் என்பது கிளைமாக்ஸ்.

கலைஞர் கருணாநிதியின் அழுத்தமான திரைக்கதையில், காட்சிகள் விறு விறுப்பாக நகர்கின்றன. முதலாளி, தொழிலாளர் வர்க்க போராட்டத்தில் தெறிக்கும் அவர் வசனங்களில் பொறி. பிரமாண்ட கப்பல் கட்டும் அரங்குகள் கொத்தடிமை தொழில்.

காஸ்ட்யூம்கள் என காட்சிகளின் பிரம்மாண்டத்தில் வரலாற்று காலத்துக்கு இழுத்து செல்கிறார் இயக்குனர் சுரேஷ் கிருஷ்ணா. வீராவேசமான பேச்சுக்களால் கபடதாரிகளை மட்டுமே பொறுப்பும் கார்க்கி கேரக்டரில் வாழ்கிறார் பா.விஜய். எலும்பு நோக உழைத்து அசதியாக வரும் தந்தைக்கு கால் பிடித்து விடுவது, தாய் சொல்லுக்குக் கட்டுப்பட்டு புரட்சிக்கு தயார் செய்த ஆயுதங்களை மண்ணில் புதைப்பது தாய் துன்புறுத்தப்படுவதைக் கண்டு பிணைக் கப்பட்ட சங்கிலியில் இருந்து திமிறுவது என தேர்ந்த நடிப்பில் பளிச்சிடுகிறார். கிளைமாக்ஸ் சண்டையில் அக்ஷன் ஹீரோக்களுக்கு இணையான வேகம். தொழிலாளர்களுக்காக வாதாடும் மீரா ஜாஸ்மின், பா.விஜய் மேல் காதல் வயப்படும் ரம்யா நம்பீசன் கேரக்டர்களும் கச்சிதம். குஷ்பு அன்பும் ஆவேசமுமான அழகான அம்மா. சுமன் நமீதா, கொடூர வில்ல தம்பதி. சரத்பாபுவை கொன்று கடலில் வீசுவது, தொழிலாளர்களை நடைபாதை காலை வாருவது என கொடூரத்தில் உலுக்குகின்றனர்.

வடிவேலு, கருணாஸ் சிரிக்க வைக்கின்றனர். நாசர், டெல்லி கணேஷ், மணிவண்ணன், சரத்பாபு, தியாகு, ஒய்.ஜி.மகேந்திரன் கேரக்டர்களும் வலுசேர்க்கின்றன. நான் கடவுள் ராஜேந்திரன் மிரட்டல் வில்லன். வித்யாசாகர் இசையில் பாடல்கள் இனிமை. பி.எல்.சஞ்சய் கேமரா வரலாற்று காலத்தை கண்முன் நிறுத்துகிறது. கலைஞரின் கை வண்ணத்தில் (வி)வேகமான இளைஞன்.



## நதியாவுக்குப் பதில் நமீதா

ஜெயா டிவியில் பிரபல நிகழ்ச்சியான ஜாக்பாட்டிலிருந்து நீக்கப்படுகிறார் நடிகை நதியா. அவருக்குப் பதில் இப்போது நமீதாவை ஒப்பந்தம் செய்துள்ளது ஜெயா டிவி. குஷ்புவுக்குப் பிறகு ஜாக்பாட்டின் புதிய நடத்துநராக நதியா ஒப்பந்தமானார். ஆனால் இவர் வந்த பிறகு அந்த நிகழ்ச்சி அதல பாதாளத்தில் விழுந்துவிட்டதாக கொமெண்ட் அடிக்க ஆரம்பித்து விட்டனர். இந்த நிலையில் கலைஞர் டிவியின் மானாட மயிலாட நிகழ்ச்சியை பிரபலமாக்கிய நமீதா, இப்போது அந்த நிகழ்ச்சியின் நான்காம் பகுதியிலிருந்து ஒதுங்கிவிட்டார். உடனே அவரை வைத்து ஜாக்பாட்டை நடத்த முடிவு செய்த ஜெயா டிவி, அவரை ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்காக கணிசமான சம்பளம் பேசப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நமீதா இந்த நிகழ்ச்சிக்காக தனது தமிழ் உச்சரிப்பை இன்னும் திருத்தமாக்கிக் கொள்ள டிரெயினிங்கெல்லாம் எடுத்திருக்கிறாராம். நமீதாவுக்குப் பாஷையா முக்கியம்!.



காவலன் லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா ஆகிட்டான் என்று கும்மிக்கொட்டி வருகிறது விஜய் ரசிகர் வட்டாரம். கொஞ்சக் காலமாக கடுப்பில் இருந்த விஜய் காவலன் வெற்றியில் குஷியாகி இருக்கிறார். காவலன் படம் பல சிக்கல்களால் தாமதமாகியது. தாமதமான போதும் தன் படத்திற்காக பொறுமையோடு காத்திருந்த ரசிகர்களுக்கு நன்றியையும் தெரிவித்திருக்கிறார் விஜய்.

அரசியலைப் பற்றி ஏதாவது கேட்டால், அண்ண...
விஜய் வேலாயுதம் படத்தின் ஷூட்டிங்கில் படு பி...
சென்னை துறைமுகத்தில் நடந்து வருகிறது. விஜய்...
படத்தில் தானாம். வேலாயுதம் படத்தை விஜய்யி...
செய்திருக்கிறார்கள். காவலன் வெற்றி பெற்றுள்ள...
வரிசைக் கட்டுகிறார்கள். அடுத்து கலைப்புலி தாணு...

## வெற்றியில் வ...

நடிக்கிறார் விஜய். காவலன் படத்தின்...
திருப்தி.

'ராஜா சின்ன ரோஜா' மாதிரி முழுக்க...
நடிக்க வேண்டும் என்பது விஜய்யின் ஆ...
கர்சிப்பைப் போகத்தியா ரூல் பண்ணின...
மனசுக்காரர் ஆகிட்டார். இயக்குனர் சே...
பாடங்களை ஏதோ ஒரு காரணத்துக்காக...
முக்கியத்துவமும் குறைந்துவிட்டது. இ...
படத்தில் நடிக்கப் போகிறேன் என்று செ...



# ஷெரவாத்தை நீக்கிவிட்ட தொலைக்காட்சி

சக்தாம் தூம் என்ற T.V ரியாலிட்டி ஷோவிலிருந்து நடிகை மல்லிகா ஷெராவத் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாகத் தற்போது ஊர்மிளா மடோன் கர் புக் ஆகியுள்ளார். மல்லிகாவால் ஏகப்பட்ட நெருக்கடிகள் ஏற்பட்டதால் அவரை நீக்க முடிவு செய்யப்பட்டது. அவரால் செலவும் அதிகமாம். இதையடுத்து வேறு வழியில்லாமல் தூக்கிவிட்டார்களாம். டேட் பிரச்சினைதான் முக்கிய காரணம் என்கிறார் மல்லிகா. பாவம் இவர்கள். மல்லிகாவை விட அதிகம் Feel பண்ணுறாங்கப்பா.



# ரஹ்மான் இடத்தில் யுவன்

தனது நெருங்கிய நண்பரின் வாழ்க் கைச் சம்பவத்தைக் கதையாக்கு கிறார், மணிரத்தினம். இந்தப் படத்தை மணிரத்தினம் தயாரிக்க, இவரது அஸிஸ்டென் சிவா இயக்கியுள் ளார்.

படத்தின் இசையமைப் பாளரை மட்டும் மாற்ற முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். அந்த அதிஷ்ட இசையமைப்பாளர் யுவன் சங்கர் என்கிறது கோடம்பாக்க வட்டாரம். ரஹ்மான் பிசியாம். அது தானாம் யுவன். தமிழ்ப்பக்கம் இசைப் புயல் இப்போதைக்கு வீசாதோ?.



இருக்கிற கதாநாயகிகளில் வாயாடி யார்? என்று கேட்டால், அது 'பாவ' நடிகைதான் என்று பழகியவர்கள் அத்தனை பேரும் சொல்வார்கள். அதனால் இந்தப் புத்தாண்டில் இருந்து யாரிடமும் அதிகமாக பேசுவதில்லை என்று 'பாவ' நடிகை சபதம் எடுத்து இருக்கிறாராம். சபதம் காப்பாற்றப்படுமா? பார்க்கலாம்!

# பாவனாவின் திடீர் சபதம்

...ன்னா... அரசியல் கேள்விகள் வேண்டாம் என்று சொல்லும் ...் படு பிசியாக இருந்து வருகிறார். வேலாயுதம் ஷூட்டிங் ... விஜய்யின் முழு சிந்தனையும் இப்போது வேலாயுதம் ...ஜய்யின் பிறந்தநாளுக்கு வெளியிட முடிவு ...றுள்ளதால், மீண்டும் தயாரிப்பாளர்கள் விஜய்யின் வாசலில் ...புலி தாணு தயாரிப்பில் சீமான் இயக்கத்தில் 'பகலவன்'படத்தில்

# விஜய் !

...த்தின் முழு கதையும் கேட்டதால் விஜய்க்கு ரொம்ப ...

...முழுக்க முழுக்க குழந்தைகளுக்கான ஒரு படத்தில் ...ய்யின் ஆசையாம். என்னப்பா இதுவரைக்கும் ...ண்ணிலவர்... திடீரென்று இப்படி குழந்தை ...குனர் சேரன் கதை சொன்ன போதெல்லாம் அந்த ...துக்காக தவிர்த்தார் விஜய். விவசாயத்தின் ...டது. இதையும் வெளிப்படுத்துகிற மாதிரி ஒரு ...ன்று சொல்கிறார் விஜய்.

# மலையக மக்களின் வாக்குகளை வேட்டையாடப் போட்டி போடும் அரசியல்வாதிகள்


ரங்கா


திகாம்பரம்


ஆறுமுகம் தொண்டமான்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் போது மலையகத் தலைமைகள் தம்வசம் இருப்பதையும் இழந்து விடுமோ என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இம்முறை மலையக வாக்குகள் சிதைந்து சின்னாபின்னமாகிவிடும் துர்ப்பாக்கிய நிலைமை தோன்றியுள்ளது.

மலையகத்தில் பிரதான தொழிற் சங்கங்களாகவும் அரசியல் கட்சிகளாகவும் இருப்பவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், மலையக மக்கள் முன்னணியுமே. தொழிற்சங்க ரீதியில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரு அங்கமாக இருக்கும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் இரண்டாவது இடத்தில் இருக்கின்றது.

அடுத்ததாக நுவரெலியா மாவட்டத்தில் பெரிதும் பேசப்படும் பிரமுகர்களாக சதாசிவமும், திகாம்பரமும் இருக்கின்றனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் நடைபெற்ற மாகாண சபை தேர்தலின் போது மலையகத்தில் பெரும் தலைவர்கள் என்று கூறத்தக்க ஆறுமுகன் தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோரின் வேட்பாளர்களை எல்லாம் பின்தள்ளி விட்டு நுவரெலியா மாவட்டத்திலேயே ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்று முதலாவது இடத்தைத் தட்டிக் கொண்டவர் திகாம்பரம். தான் முன்பு இருந்த மலையக மக்கள் முன்னணிக்கு ஒரு இடம்கூட இல்லாமல் செய்து தனது கட்சியின் சார்பில் இரண்டு அங்கத்தினர்களை மத்திய மாகாண சபை க்கு இட்டுச் சென்றார்.

திகாம்பரத்தின் இந்த அதிரடியான வளர்ச்சியும் செல்வாக்கும் மலையகத்தில் இவர் ஒரு மாற்றுத் தலைமையாகிவிடுவாரோ என்ற பீதியை மலையகப் பெருந்தலைவர்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டது.

ஆனால் தொடர்ச்சியாக இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்த நிலைமையில் பெரிய மாற்றமே ஏற்பட்டுவிட்டது. மாகாணசபைத் தேர்தலின்போது பெற்றவாக்குகளில் மூன்றில் ஒரு பகுதியை திகாம்பரம் இழந்துவிட்டார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவராக இருந்தபோதே தமது தேர்தல் வேட்டையில் ஒரு மாகாண சபை உறுப்பினரைக்கூடப் பெறமுடியாமல் போன மலையக மக்கள் முன்னணி தொடர்ச்சியாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் படுதோல்வி யடைந்துவிட்டது.

அமரர் சந்திரசேகரனின் மரண ஊர்வலத்தில் கலந்து கொண்ட லட்சத்திற்கும் அதிகமான கூட்டத்தை நம்பி ஏமாந்து விட்டார் கட்சியின் தலைவி சாந்தினிதேவி சந்திரசேகரன்.

தனது கணவரின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலை கணவனின் வழியில் தன்னையும் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு சென்று விடும் என்ற அவரது நம்பிக்கை பகல். கனவானது தான் மிச்சம்.

இவரது தோல்விக்கு அக்கட்சியின் தலைமைப்பதவிக்கு ஏற்பட்ட நிழல் யுத்தமும் ஒரு காரணம். தலை

**இந்தியாவில் குஷ்புக்கு கோயில் கட்டியவர்கள் தானே இந்தியர்கள். இவர்களின் வம்சாவழியினரையும் அதேபாணி யில் கவிழ்த்துவிட்டவர் இந்த ரங்கா.**

வரின் காலத்திலேயே காணப் பட்ட கருத்து முரண்பாடுகளும், கட்சிக்குள்ளே இருந்து வந்த கழுத்தறுப்புக்களும் தலைவியின் காலை சமயம் பார்த்து வாரிவிட்டுவிட்டன.

தலைவரைப் போன்றல்லாது ஒரு குறிப்பிட்டவர்களின் வார்த்தைக்கு மட்டும் பக்கச்சார்பாக முக்கியத்துவம் கொடுத்ததோடு, நல்ல ஆலோசனைகளையும், விட்ட தவறுகளையும் பற்றுடன் சுட்டிக் காட்டியவர்களையும் கட்சித்தலைவி உதாசீனப்படுத்தி விட்டார் என்றும் குற்றம் சாட்டப் படுகின்றது.

என்னதான் நட்புறவுடன் செயல்படுவோம் என்று வெளியே கூறிக் கொண்டாலும் மலையக மக்கள் முன்னணியைத் தலை தூக்கவிடக்கூடாது என்ற உள்நோக்கத்தைக் கொண்டது இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தலைமை. எந்தவொரு தலைமையும் தனக்கு மாற்றாக ஒரு தலைமை உருவாவதை விரும்பாது என்பது இயற்கைதானே.

இப்போது இந்த இரண்டு தொழிற் சங்கங்களும் ஆளும் கட்சியுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடப்போகின்றன.

நாடாளுமன்றம் முதல் நகரசபை, பிரதேச சபை என்பன வரை தீர்மானம் எடுக்கும் சக்தியாக இருப்பது மலையக தொழிலாளர்களின் வாக்குகளே.

நிலைமை இப்படி இருக்க மாற்றாரின் வெற்றிலைச் சின்னத்தில் இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிடுகின்றன.

இரவல் சின்னத்தில் ஒன்றிணைந்து போட்டியிட ஒப்புக்கொண்ட இதன் தலைவர்கள் தமது சொந்தச் சின்னம் ஒன்றில் இணைந்து வாக்குக் கேட்டால் நுவரெலியா மாவட்டத்தில் நகர சபைகள் உட்பட பல பிரதேச சபைகளையும் தமதாக்கிக் கொள் ள முடியும்தானே என்று வினாம் தெரிவிக்கின்றனர் மலையக இளைஞர்கள்.

இப்படித்தமது தனிப்பட்ட சுகபோகங்களுக்காகவும், அமைச்சுப்பதவிகளுக்காகவும் மாறிமாறி பெரும்பான்மை அரசியல் கட்சிகளுடன் ஒட்டிக்கொள்வதால் தானோ என்னவோ ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான அமரர் காமினி திஸநாயக்கா அன்றே, நாயின் காலில் ஒட்டிக் கொண்ட உண்ணிகள் என்று இவர்களை எடைபோட்டு விட்டாரோ என்றும் மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது.

அதேபோன்று மற்றும் ஒரு அரசியல் கட்சியுடன் இணைந்து வெற்றி பெற்ற திகாம்பரம் இம்முறை தனித்துப்போட்டியிடுகின்றார்.

இவருடைய துணிவும் தன்னம்பிக்கையும் வரவேற்கத்தக்கது தான். இம்முறை ஐ.தே.கட்சி தனது சின்னத்தில் (யானை) போட்டியிட முன்வருபவர்கள் தமது கட்சியின் அங்கத்தவர்களாக அங்கத்துவம் பெறவேண்டும் என வெட்டு ஒன்று துண்டு ஒன்றாகக் கூறிவிட்டது.

ஆளும் கட்சி ஆறுமுகன் தொண்டமானுக்கும், சாந்தினிதேவிக்கும் வழங்க முன்வந்த ஒதுக்கீடுகளில் திகாம்பரத்திற்கும் வழங்குவதில் ஆறுமுகனார் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்ளார்.

இதனால் எவரிடமும் யாசகம் கேட்க வேண்டாம், தனித்துப் போட்டியிட்டுத் தமது பலத்தைக் காட்டுவோம் என்று திகாம்பரம் துணிந்து விட்டார் என்றும் கூறப்படுகின்றது.

அடுத்ததாக ஐ.தே.க.சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவுடன் ஆளும்கட்சியுடன் கைகோர்த்துக் கொண்டவர் ஸ்ரீரங்கா.

இந்தியாவில் குஷ்புக்கு கோயில் கட்டியவர்கள் தானே இந்தியர்கள். இவர்களின்வம்சாவழியினரையும் அதேபாணியில் கவிழ்த்துவிட்டவர் இந்த ரங்கா.

மின்னல் நிகழ்ச்சியின் மூலம் தமிழர்களையும் தமிழர்களையும் மோதவிட்டார். இரு பக்கமாக முஸ்லிம் தலைவர்களை அழைத்து மோதவிட்டார். இந்த மோதலின் போது அவர்களுடைய பலவீனங்களை வெளிப்படுத்துவதிலேயே கூடிய கவனம் செலுத்தினார்.

இந்தத் தொலைக்காட்சியையும், மின்னலையும் மலையகம் எங்கும் எடுத்துச் சென்று 'இதுவரை காலமும் இருந்த மலையகத் தலைவர்கள் உங்

**தனது கணவரின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலை கணவனின் வழியில் தன்னையும் நாடாளுமன்றத்திற்கு கொண்டு சென்று விடும் என்ற அவரது நம்பிக்கை பகல் கனவானது தான் மிச்சம்.**

களுக்கு எதையும் செய்யவில்லை. இதோ, ஆபத்பாந்தவனாக நான் வந்து விட்டேன்' என்று பிரசாரம் செய்து வெற்றியும் பெற்றுவிட்டார்.

ஆனால் இந்த ரங்கா தனக்கு அரசியல் அந்தஸ்தைப் பெற்று க்கொடுத்த ஐக்கியதேசியக்கட்சியை முதுகில் குற்றி விட்டு அரசுடன் ஒட்டிக்கொண்டார்.

இவரும் இவருடைய ஆதரவாளர்களும் இம்முறை யாருடைய சின்னத்தில் மலையகத்தில் வாக்குக் கேட்கப் போகின்றனர் என்பதும் கேள்வியாகியுள்ளது.

மலையகத்தில் அடுத்த நிலையில் இருப்பவர் சதாசிவம். இவர் ஆரம்பம் முதலே தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர். இக்கட்டுரை எழுதும் நேரம்வரை அவர் யாருடன் இணைந்து போட்டியிடுவது என்றோ தனித்து போட்டியிடுவது என்றோ தீர்மானிக்கவில்லை.

மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் உபதலைவர்களுள் ஒருவருமான அரவிந்த குமார் ஊவா மாகாணத்தில் ஆரம்பம் முதலே மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு தனக்கென ஒரு முத்திரை பதித்து வருகின்றார். இம்முறை

**இரா.புத்திரசிகாமணி**

யும் ஊவாவில் இவரது தலைமைத்துவத்தின் கீழ் மண் வெட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றனர். நுவரெலியா உட்பட ஏனைய மாவட்டங்களில் அரசுடன் இணைந்து போட்டியிடுகின்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசின் ஒரு அங்கமாகிவிட்டதால் அதற்கும் இதைத்தவிர வேறு வழியில்லை.

எது எப்படியோ இந்த மலையகத் தலைவர்கள் எல்லோரும் ஒரே மூச்சில் மலையக மக்களின் வாக்குகளைப் பிரித்து சின்னாபின்னமாக்கிவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு களம் இறங்குகின்றனர்.

இதனால் இதுவரை காலமும் தம் வசம் இருந்த நகரசபைகளாகவும், பிரதேச சபைகளையும் கூட இழந்து விடக் கூடுமோ என்ற நிலை ஏற்பட்டுள்ளது. காலம் தான் இவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும். ★★★

# மௌனமாக இருந்து காங்கிரஸ் கூட்டணி விடயத்தில் சாதித்த கருணாநிதி

கலைஞர் கருணாநிதி ஒரு அரசியல் சாணக்கியர் என்பது கடந்த வாரங்களின் அரசியல் நிகழ்வுகளில் தெளிவாக மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணி கூடாது என முழங்கி வந்த காங்கிரஸ் கட்சியினரான இளங்கோவன் வாயை கருணாநிதி அடைத்த விதம் வரலாற்றில் பதிவாகிவிட்டது. இளங்கோவன் சென்ற வாரம் காங்கிரஸ் தலைமையால் வரவழைக்கப்பட்டு தமிழக முதல்வரை சந்தித்துப் பேசுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார். காங்கிரஸ் தலைமையின் முடிவை எதிர்த்து ஒருவேளை இளங்கோவன் ராஜினாமா செய்யக்கூடும். அவ்வாறு செய்யாவிட்டால் அவருக்குப் பெரும் மானப்பிரச்சினை உருவாகும். அதைவிட மேலாக, போட்டியிட்டால் அவருக்கு ஆதரவாக வேலை செய்யும்படி தி.மு.க தொண்டர்களையும் உள்ளூர் தலைவர்களையும் கேட்கவேண்டி இருக்கும். இதற்கஞ்சி அவரோ அவரது ஆதரவாளரோ தேர்தலில் போட்டியிடாமலே விடக் கூடும் எனவும் கூறப்படுகிறது. மாற்று வழியாக அவர் தனிக்கட்சி தொடங்கி அ.தி.மு.க. வுடன் கூட்டணி வைக்கவும் கூடும்.




இதேபோல 1996 ல் ஆளும் அ.தி.மு.க.வுடன் கூட்டணியைத் தொடர காங்கிரஸ் முடிவெடுத்ததை எதிர்த்து மூப்பனார் தமிழ் மாநில காங்கிரசை உருவாக்கினர். தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து பெருவெற்றியும் கிட்டியது. அதே போன்று இன்று காங்கிரசிலிருந்து வெளியேறி எதிர்கட்சியினரான அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து கூட்டணியை வெற்றி பெறவைக்க இளங்கோவனால் முடியுமா என்பதே கேள்வி. மூப்பனார் போல ஆதரவுத் தளம் இளங்கோவனுக்கு இல்லை என்பது கவனிக்கத்தக்கது. காங்கிரசை உடைப்பதில் நூறுவீத வெற்றியை மூப்பனார் ஈட்டியது போல இளங்கோவனால் இயலாது என்பதும் உண்மையே.

தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி உறுதியாகியதை அடுத்து தொகுதிப் பங்கீடும் கிட்டத்தட்ட முடிவாகி உள்ளது. இவ்வாரம் கலைஞர் டில்லி சென்று சோனியாவைச் சந்திக்கவுள்ளார். அதற்கு முன் மத்திய அமைச்சர் வீரப்ப மொய்லி, மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி, வாசன் என பல தலைவர்கள் கலைஞரைச் சந்தித்துள்ளனர். தங்கபாலு, சிதம்பரம் இருவரும் தொடர்ந்து தி.மு.க. பக்கமே இருந்துள்ளனர். இனி காங்கிரசிலும், தி.மு.க.விலும் ஏன் அ.தி.மு.க.விலும் கூட யாரும் இளங்கோவனை மதிக்கமாட்டார்கள். பேசாமல் இருந்திருந்தால் சட்டசபைத் தேர்தலில் தனது தொகுதியில் போட்டியிட்டு இருக்கமுடியும். சென்ற 2009 லோக்சபா தேர்தலில் தனது ஈரோடு தொகுதியில் மத்திய இணை அமைச்சரான இளங்கோவன் தோல்வியுற்றார். அதன் பிறகு தான் அவர் காங்கிரஸ் கட்சியிலும் செல்லாக்காசாக மாறினார். இந்தப் பிரதிபலிப்பே தி.மு.க. மீது வெறுப்பை உமிழும் அவரது செயலுக்கு காரணமானது.

**அ.தி.மு.க கூட்டணி முடிவாவதில் தாமதம் தி.மு.க கூட்டணி பிரசாரத்தில் முந்துகிறது**

தி.மு.க.வின் முன்னாள் மத்திய மந்திரி ராசாவின் ஸ்பெக்ட்ரம் ஊழலால் பெரும் தேர்தல் பின்னடைவைச் சந்தித்த தி.மு.க, காங்கிரசுடனான கூட்டணி முடிவாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து புதுத்தெம்படைந்துள்ளது. ராசாவின் ஊழலால் உற்சாகத்தில் இருந்த அ.தி.மு.கவோ கட்சித்தலைவி ஜெயலலிதாவின் முட்டாள் தனமான நடவடிக்கைகளால் மீண்டும் பின்னடைவை சந்தித்துள்ளது. காரணம் ஆட்சியிலுள்ள கட்சி மீது மக்கள் அதிருப்தி அதிகமாக இருப்பதாலும் பல்வேறு பத்திரிகை மற்றும் ஊடக தரப்புகளும் ஆளும் கட்சி மீது வெறுப்பில் இருப்பதாலும் பிரதான எதிர்க்கட்சியுடன் கூட்டணி சேர்வதில் பலதரப்புகளும் விருப்பம் கொண்டிருப்பர். எனவே ஜெயலலிதா கட்சி இப்போது தனது கூட்டணியையும் வேட்பாளர்களையும் அறிவித்து பிரசாரத்தையும் கூட தொடங்கி இருக்க வேண்டும். தே.மு.தி.க.வுடன் அ.தி.மு.க. அணி சேரவேண்டுமென இருகட்சிகளின் தொண்டர்களின் விருப்பம் உள்ளது. ஆனால் விஜயகாந்த் மிக அதிக எண்ணிக்கையான தொகுதிகளைக் கேட்டுள்ளார். காங்கிரசும் பாட்டாளி மக்கள் கட்சியும் அ.தி.மு.க. அணியில் இடம் பெற விரும்பவில்லை. அ.தி.மு.க. எவ்வளவோ முயன்றபோதும் இவ்விரு கட்சிகளும் தி.மு.க.வே மேல் என்று கூறிவிட்டன. இது, கிட்டத்தட்ட ஜெயலலிதாவுக்கு பெரும் பாதகமாக அமைந்துவிட்டது. தி.மு.க.வுடன் கூட்டணியை முறிக்க வேண்டாமென கூறிய மகன் அன்புமணியின் அன்புக்கட்டளையை டாக்டர் ராமதாஸ் இம்முறை ஏற்றுக்கொண்டுவிட்டார். காங்கிரஸாலும் பா.ம.க.வினாலும் ஒதுக்கப்பட்ட அ.தி.மு.கவுக்கு தான் எதற்கு மரியாதை தரவேண்டும் எனக் கேட்கும் விஜயகாந்தின் கேள்வியில் நியாயம் உள்ளது. காங்கிரசுக்காகக் காத்திராது விஜயகாந்துடன் கூட்டணியை முடிவுசெய்யுமாறு 'துக்ளக்சோ' வெளிப்படையாகவே 'ஜெ'க்கு ஆலோசனை வழங்கியிருந்தார். அ.தி.மு.க- தே.மு.தி.க கூட்டணி அமையாவிடில் தி.மு.க அணியை வீழ்த்த முடியாது என்பது சோ போன்ற வெளியாட்களுக்கு தெளிவாகவே தெரியும். ஆனால் 'ஜெ'க்கு இதெல்லாம் புரியாமல் போனது அவரது துரதிஷ்டமே. தி.மு.க.வின் பதினேழு எம்.பிகள் இல்லாவிடில் மன்மோகன் சிங் அரசு ஒரு வினாடி கூட மேற்கொண்டு தாக்குப்பிடிக்க முடியாதென்பது சிறு குழந்தைக்குக் கூட புரிந்த உண்மை. இப்படியிருக்க தி.மு.க.வை கை கழுவி விட்டு தன்தலையில் தானே மண்ணை யள்ளிப் போட்டுக் கொள்ள சோனியா காந்தி ஒரு அடிமுட்டாள் என 'ஜெ' நினைத்தார் போலும் காங்கிரசுடன் கூட்டணி அமைத்தால் மிஞ்சிப்போனால் எழுபத்தைந்து இடங்களை காங்கிரஸுக்கு தர மட்டுமே 'ஜெ' தயாராக இருந்தார். அதுவும் காங்கிரஸுக்கு ஒதுக்கும் எழுபத்தைந்து இடங்களில் தி.மு.க செல்வாக்கு உள்ள தொகுதிகளை காங்கிரஸின் தலையில் கட்டியடித்துவிடுவார். இதனால் காங்கிரஸுக்கு எந்தவிதப் பயனுமில்லை. இவ்வாறு தற்கொலை செய்ய காங்கிரஸ் தயாராக இல்லை. இந்தப் பத்தியில் சில மாதங்களுக்கு முன் எந்த நிலையிலும் தி.மு.கவின் பதினேழு எம்.பிகளுடைய உறவை உதற காங்கிரஸ் துணியாது எனத் தெள்ளத்தெளிவாக எழுதினோம். அதுவே இன்று நடந்துள்ளது. தி.மு.க.வுடன் கூட்டணியை தொடர வேண்டாவெறுப்புடனே காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது. மத்திய அரசைக் கவிழாது காக்கவே இந்த முடிவு.

சி.சுரேந்திரஜித்



தி.மு.க. கூட்டணியில் காங்கிரசுக்கு அறுபது இடங்களை ஒதுக்கீடு செய்ய தி.மு.க. தயாராகவுள்ளது. கடந்த 2006 சட்டசபைத் தேர்தலில் இதே தி.மு.க அணியில் காங்கிரசுக்கு 48 இடங்களே ஒதுக்கப்பட்டன. ஆனால் அப்போதிருந்த கம்யூனிஸ்ட்டுகள் இப்போது தி.மு.க. அணியில் இல்லை. எனவே அந்த இடங்களில் பெரும் பகுதி காங்கிரஸுக்கே சேரவுள்ளது. பா.ம.க.வுக்கு இருபத்திநாலு இடங்கள் தரப்படும். 2006இல் அக்கட்சிக்கு முப்பது இடங்களை தி.மு.க ஒதுக்கியது. அதில் பதினேழு இடங்களை பா.ம.க வென்றது. காங்கிரஸோ தனக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் நாற்பத்தெட்டில் முப்பத்தைந்து இடங்களை வென்றது கவனிக்கத்தக்கது. அதன் பின்பு நடந்த லோக்சபா தேர்தலில் தோழமைக்கட்சியான காங்கிரஸைக் காட்டிலும் தி.மு.க. சிறப்பான வெற்றி கண்டது. அந்நேரத்தில் இலங்கையில் கடைசிக் கட்டயுத்தம் நடந்ததால் காங்கிரஸ் மீது பல இடங்களில் மக்கள் கோபத்தைக் காட்டினர். இந்தச் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸுக்கு தி.மு.க போல் வெற்றியீட்ட முடியாது என்ற நிலையே இருந்து வந்தது. ஆனால் ராசாவின் ஊழலால் தி.மு.க பின்னடைந்து காங்கிரஸ் முன்நிலை பெற்றுள்ளது. இதனால் காங்கிரஸுக்கு அதிக இடங்களை ஒதுக்க தி.மு.கவுக்கு நிர்பந்தம் உண்டாகி உள்ளது.

சென்ற தேர்தலில் தி.மு.க அணியில் காங்கிரஸ், தி.மு.க, கம்யூனிஸ்ட்டுகள், பா.ம.க என பலகட்சிகள் இருந்ததால் தி.மு.க. மிக குறைவான தொகுதிகளிலே போட்டியிட்டது. இதனால் தி.மு.க. தனித்து வென்ற தொகுதி தொண்ணூற்றி நான்காக குறைவடைந்தது. காங்கிரஸ், பா.ம.க., கம்யூனிஸ்ட்கள் தயவிலேயே கருணாநிதி முதல்வரானார். ஆயினும் ஆட்சிக்கு முட்டுக் கொடுப்பதற்கு கைமாறாக ஆட்சியில் பங்கு கேட்டு முரண்டு பிடிக்க காங்கிரஸுக்கு இயலாது போயிற்று. ராசாவின் ஊழல் காரணமாக பழையபடி மிகக்குறைந்த நூற்றியிருபத்தெட்டு தொகுதிகளில் தான் தி.மு.க போட்டியிடவுள்ளது. இதில் 117 தொகுதிகளில் வென்றால் தான் தனித்து ஆளமுடியும். எனவே வேறு வழியின்றி தமிழகமும் கூட்டணி அரசியலை நோக்கி பயணிப்பதாகவே தெரிகிறது. காங்கிரஸ் உதவியின்றி விடுதலை சிறுத்தைகள், பா.ம.க உதவியுடன் நூற்றிப்பதினேழைத் தாண்டிவிட முடியும் என கலைஞர் திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் ஆட்சியில் பங்கு கோரும் காங்கிரஸின் ஆசையை அடக்கிவிட முடியும். கருணாநிதியின் அரசியல் சாணக்கியம் இந்த அடிப்படையில் தான் தொகுதிப் பங்கீட்டை அணுகியுள்ளது. ஜெயலலிதாவின் சாணக்கியமோ கூட்டணி முடிவை தாமதப்படுத்துவதிலேயே அழிவைத் தேடும் வகையில் அமைந்துள்ளது. எனவே மீண்டும் கலைஞர் முதல்வர் ஆவதற்கு உள்ள தடைகள் ஒவ்வொன்றாக நீங்கி வருகின்றன என்றே சொல்ல வேண்டும். இதற்கிடையில் வேறு வழியின்றி அ.தி.மு.க கூட்டணியை பலப்படுத்த நடிகர்கள் அஜித்குமார் அல்லது விஜயை இழுக்கும் முயற்சியில் 'ஜெ' தரப்பு இறங்கியுள்ளது. இவ்விரு இளம் முன்னணி நடிகர்களில் ஒருவர் தான் அ.தி.மு.க வில் சேரலாம். இருவரும் சேர்ந்திருக்க முடியாது. எவ்வாறாயினும் ராசா ஊழல் விவகாரத்தால் கிடைத்த பொன்னான வாய்ப்பை 'ஜெ' கூட்டணி அமைக்க முடியாத பலவீனத்தால் சொதப்பி அழித்துவிட்டார் என்றே நோக்கர்கள் கூறுகின்றனர். தி.மு.க.வின் பலவீனம் ஊழல் என்றால், அ.தி.மு.கவின் பலவீனம் நட்பை பேணமுடியாது தனிமரமாக நிற்பது என்று துணிந்து சொல்லலாம். ✱

சுடர் ஒளி

23, ஜனவரி - 29, ஜனவரி, 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## தேர்தல்கால விளையாட்டு வேண்டாம்

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை அண்மையில் அலரி மாளிகையில் சந்தித்துப் பேசியிருந்தார் ஜனாதிபதி. புத்தாண்டை ஒட்டிய காலை உணவு விருந்துபசாரம் அது. இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்தைத் தாண்டிச் (பிளஸ்) சென்று தீர்வு காண அரசு விரும்புகிறது என்று அப்போது மஹிந்த தெரிவித்திருந்தார்.

அவர் 13ஆவது திருத்தம் பிளஸ் என்று தெரிவித்திருந்தாலும் அந்தப் பிளஸ் எவை என்பதை அவர் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. ஆனால், 13ஆவது திருத்தம் குறிப்பிடும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க முடியாது என்றும் மாகாண அரசுகள் தன்னிச்சையாக நிதியைக் கையாளும் அதிகாரத்தையும் வழங்க முடியாது என்றும் 13ஆவது திருத்தத்தின் மைனஸ்கள் பற்றி அவர் தெளிவாக அங்கு குறிப்பிட்டார். அதாவது வழங்கப் போவது எது என்பதில் அவர் தெளிவில்லாமல் இருந்தாலும் வழங்காமல் விடப்போவது எது என்பதில் அவர் மிகத் தெளிவாக இருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது.

இருப்பினும் கடந்த சில வாரங்களில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் முக்கியமானவையாகத் தோன்றக்கூடிய சில நடவடிக்கைகள் ஜனாதிபதியால் எடுக்கப்பட்டுள்ளன. அதில் முக்கியமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான பேச்சுக்களை அரசு ஆரம்பித்திருப்பது. தீர்வை எட்டுவதற்கான பேச்சுக்கான பேச்சே இப்போது நடக்கிறது என்று கூட்டமைப்பினர் கூறியுள்ளனர். எனினும் நீண்ட காலத்தின் பின்னர் தமிழர் தரப்புடன் பேச்சுக்களை அரசு ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கதே.

இருப்பினும் 13ஆவது திருத்தம் பிளஸ் பற்றிய ஜனாதிபதியின் கருத்துக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை அவர் ஆரம்பித்திருப்பது என்பன எல்லாம், இனப்பிரச்சினைக்கு அவர் அரசியல் தீர்வு காண உண்மையிலேயே விரும்புகிறார் என்று ஏற்றுக் கொள்வதற்கு அல்லது தமிழர்களை நம்ப வைக்கப் போதுமானவை அல்ல.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பது இது ஒன்றும் முதல் தடவையல்ல. அவரது இரண்டாவது பதவிக் காலத்தை நிர்ணயம் செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, தான் வெற்றி பெற்றதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவேன் என்று அவர் கூறினார். ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை. பின்னர் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது தேர்தல் முடிவுகள் வெளியானதும் அதில் வெற்றிபெறும் தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சு ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தார்.

அப்படி வென்று வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அவருக்கு சுமார் 9 மாதங்கள் தேவைப்பட்டுள்ளது. அதுவும் உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிக்கப்படுவதற்குச் சற்று முன்னதாகவே அவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 13 ஆவது திருத்தம் பிளஸ் குறித்தும் ஜனாதிபதி பேசியிருக்கிறார். இவையெல்லாம் உள்ளூராட்சித் தேர்தலை மனதில் கொண்டு செய்யப்படுபவையா? என்பதே தமிழ் மக்களிடம் எழும் சந்தேகம்.

ஒடுக்கப்பட்டவர்களுக்குச் சந்தேகங்கள் எழுவதும் எல்லாவற்றையும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதும் பொது உளவியல் என்கிறார்கள் உளவியலாளர்கள். எனவே அதனை நிவர்த்தி செய்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தனது அர்ப்பணிப்பை, உறுதியை தமிழர்களுக்கு ஜனாதிபதி நிச்சயம் வெளிக்காட்ட வேண்டும்.

# தேவைப்படுபவர்களுக்கு உதவி கிடைப்பதை உறுதிப்படுத்துங்கள்

சசி,ராஜ்

மழை தொடர்ச்சியாகப் பெய்து கொண்டிருந்தது. வீதிகளில் வெள்ளநீர் பாய்ந்ததால் குன்றும் குழியுமாகக் பட்டு இயல்பான போக்குவரத்தும் அங்கு நடைபெறவில்லை. இடப்பெயர்வுக்கு முன்னர் கூலித்தொழிலையே நம்பி வாழ்க்கை நடத்திவந்த அந்தக் கிராம மக்கள் ஒன்றரை மாதத்துக்கு முன்னரே மீள்குடியமர்த்தப்பட்டனர். இப்போது அவர்களுக்குத் தொழில் கிடையாது. கொடிய யுத்தம் காரணமாக இருந்தவை எல்லாவற்றையும் இழந்த மக்களை இயற்கை கூட விடுவதாயில்லை. மழை காரணமாக தாங்கள் அமைத்துக்கொண்ட தற்காலிக குடிசைகளில் மக்கள் முடங்கிப் போயிருந்தனர். மனித வாழ்க்கைக்கு ஒவ்வாத அந்தக் குடிசைகள் மழை வெள்ளத்தை எவ்வாறு தாக்கிக் கொள்ளும்? சேறும் சகதியுமாகவே மக்களின் வீடுகளும் காணப்பட்டன.



முல்லை- பரந்தன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் கிராம சேவகர்பிரிவு - 52 இல் அமைந்துள்ள தேராவில், இளங்கோபுரம் ஆகிய கிராமங்களில் 2010.11.24 அன்று மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள்தான் இந்தப் பாத்திரங்கள்.

1969, 70 களில், கண்டிப்பகுதியில் இருந்த வந்த மக்கள் காடு வெட்டி இந்தக் கிராமங்களை அமைத்துக் கொண்டனர். இதில் இளங்கோபுரத்தில் ஆரம்பத்தில் மூன்று குடும்பங்களே இருந்ததால் அந்தப் பகுதி "மூன்று வீட்டடி" என்றே அழைக்கப்பட்டது. இந்தக் தகவல்களை அந்தக் கிராமத்தின் ஆரம்ப காலக் குடியேற்றவாசியான முத்துக்கறுப்பன் நாகையா எமக்கு எடுத்துக்கூறினார். அவர் தனது கதையை அந்தளவுடன் நிறுத்திக் கொள்ளவில்லை. மீள்குடியமர்த்தப்பட்டதிலிருந்து தனது கிராமமும் மக்களும் எதிர்நோக்கும் துயரங்களை எடுத்துக் கூறியதுடன் அதற்கான ஆதாரங்களையும் எமக்குக் காட்டினார்.

61வயதுடைய நாகையா, தான் ஆரம்பத்தில் காட்டு வேலைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் இந்தக்கிராமத்தில் உள்ளவர்கள் பெரும்பாலும் கூலித்தொழில் மற்றும் காட்டுவேலைகள் செய்பவர்கள் என்றும் அறிமுகப்படுத்தினார்.

இந்தக்கிராமத்தில் 254 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இடப்பெயர்வுக்கு முன்னர் விடுதலைப்புலிகளின் நிருவாகத்தின் கீழ் இயங்கிய தொழிற்சாலைகளும் சில தனியார் தொழிற்சாலைகளும் இந்த மக்களுக்கு வேலை வழங்கி வந்தன. இப்போது இந்தநிலைமை இல்லை. மக்கள் தமது வாழ்வாதாரத்தை ஓட்டுவதற்காக அரச நிவாரணங்களையோ, தொண்டுநிறுவனங்களையோ நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இந்தக்கிராம சேவகர் பிரிவில் அண்மையில் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தலைமையில் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது. இந்த வெள்ள நிவாரணம் கூட தெரிவு செய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கே வழங்கப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். இதில் பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள், விசேட தேவை உடைய குடும்பங்கள் பல தெரிவு செய்யப்படவில்லை என்பது ஆச்சரியமாகும்.

**அரச அதிகாரிகளின் பாரபட்சங்களாலும், பொறுப்பற்ற நடத்தைகளாலும், அரச நிர்வாகத்தினருக்கு ஆதரவாகச் செயற்படுபவர்களாலும், இந்தக்கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. யுத்தம் எல்லா மக்களையும் பாதித்தது. அதுபோல வெள்ளமும் எல்லா மக்களையும் பாதித்தது. குண்டுகளுக்கும் மழை நீருக்கும் கண்பார்வை இல்லை. அவை தெரிவுசெய்யப்பட்ட சில மக்களைத் தாக்குவதுமில்லை. இப்படி இருக்கையில் தேராவில்,இளங்கோபுரம் மக்களுக்கு தற்காலிகவீடு வழங்கல், வெள்ளநிவாரணம், விதவைப்பெண்களுக்கான பதிவுகள், நிரந்தர வீட்டுத்திட்டம் போன்றவற்றில் பாகுபாடுகள் காட்டப்பட்டுள்ளன.**

அரச அதிகாரிகளின் பாரபட்சங்களாலும், பொறுப்பற்ற நடத்தைகளாலும், அரச நிர்வாகத்தினருக்கு ஆதரவாகச் செயற்படுபவர்களாலும், இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. யுத்தம் எல்லா மக்களையும் பாதித்தது. அது போல வெள்ளமும் எல்லாமக்களையும் பாதித்தது.

(00 ஆம் பக்கம் பார்க்க...)

# தேவைப்படுபவர்களுக்கு...

(00 ஆம் பக்கம் பார்க்க...)

குண்டுகளுக்கும் மழை நீருக்கும் கண்டு பார்வை இல்லை. அவை தெரிவுசெய்யப்பட்ட சில மக்களைத் தாக்குவது மில்லை. இப்படி இருக்கையில் தேராவில், இளங்கோபுரம் மக்களுக்கு தற்காலிகவீடு வழங்கல், வெள்ள நிவாரணம், விதவைப்பெண்களுக்கான பதிவுகள், நிரந்தர வீட்டுத்திட்டம் போன்றவற்றில் பாகுபாடுகள் காட்டப்பட்டுள்ளன என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

**ஆண் துணை இல்லாத இவருக்கு தற்காலிக வீட்டை அமைத்துக் கொடுக்கக்கூட ஒருவரும் முன்வரவில்லை. கடும் மழை பெய்தால் வீடு முழுவதும் தண்ணீர் உட்புகுந்துவிடுமளவுக்கு நிலத்திலேயே தற்காலிக கொட்டகை அமைந்துள்ளது. மழைநீர் தேங்கிப்போயுள்ள அந்த இடத்தில் இரவில் நிம்மதியாகத் தூங்குவதே ஆபத்தாகும்.**

தேராவில் கிராமத்தில் யுத்தத்தின் போது கணவனை இழந்த சில குடும்பங்களைச் சந்தித்தோம். கருணாகரன் சந்திராமதி என்ற இளம் பெண் தான் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எமக்கு எடுத்துரைத்தார். 7,5 வயதுகளையுடைய 2 பெண்குழந்தைகளின் தாயான இவர் தனது தாயுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றார். தாயான இராமலிங்கம் காளியம்மாவும் கணவனை இழந்தவர்.

இவர்களது வீட்டில் சந்திராமதியின் சகோதரியான கௌரி நாதன் விமலா என்பவர் 2009 ஆம் ஆண்டு கோம்பாவில் பகுதியில் ஷெல் தாக்குதலில் காயமடைந்து ஒரு கால் முற்றாக இயங்க முடியாமல் இருக்கிறார். விமலாவின் 5 வயது மகனும் இதன்போது காலில் காயமடைந்துள்ளார். விமலாவுக்கு இப்போது 11/2 மாதப் பெண்குழந்தை ஒன்றும் உள்ளது. இவர் புதுமாத்தளனில் இருந்து கப்பல் மூலம் சென்று திருகோணமலை, மன்னார், வவுனியா கொழும்பு ஆகிய இடங்களில் சிகிச்சை பெற்று இப்போதும் வவுனியாவில் மாதாந்தம் சிகிச்சை பெறுகின்றார். சிறுவயதிலிருந்தே கூலித்தொழில் செய்த இவர் இப்போது தனது மருத்துவ மற்றும் போக்குவரத்துச் செலவுகளுக்குப் பெரும் பண நெருக்கடியை எதிர்நோக்குவதாகக் குறிப்பிடுகின்றார்.

இந்த மூன்று குடும்பங்களுக்கும் தற்காலிக வீட்டுக்கான தகரம், வீடமைக்கப் போதாத மரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. ஆண்களின் உதவியற்ற இவர்கள் எவ்வாறு வீட்டை அமைத்துக் கொள்வது? வன்னியில் மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கம் பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளதாகக் குறிப்பிடப்படும் நிலையில் சில பகுதிகளில் தற்காலிக வீடமைப்பதற்கு 3000 ரூபா பணம் மக்களுக்கு வழங்கப்பட்டது. சில இடங்களில் வீடு அமைத்தும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் தற்போது மீளக் குடியமர்த்தப்படும் மக்களில் ஒருபகுதியினர் சலுகைகளிலிருந்தும் நிவாரணக் கொடுப்பனவுகளிலிருந்தும் புறக்கணிக்கப்படுவது வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதாகவே அமைகின்றது.

காளியம்மா தன் பிள்ளைகளின் நிலைமையைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட செத்துப்போகலாம் என்கிறார். தங்களை ஏன்தான் கடவுள் காப்பாற்றி இவ்வளவு துன்பங்களை அனுபவிக்க விட்டிருக்கிறாரோ என்று அழுது புலம்பத் தொடங்கினார். அவருக்கு ஆறுதல் கூற எமக்கு அருகதை இருக்கவில்லை. இருப்பினும் சற்று ஆறுதல் கூறிவிட்டு அடுத்த வீட்டுக்குச் சென்றோம்.

பாலமுரளி சர்மிலாவதி என்ற இளம் தாய் தனது 3 வயது மகனுடன் முற்றத்தில் நின்றார்.

கணவனை இழந்த சோகம் அவரின் முகத்தில் தென்பட்டது. தாயும் மகனும் அயல்வீட்டாரின் உதவியுடன் அவரது கணவரின் காணியில் தங்கியுள்ளனர். 2009 ஆம் ஆண்டு வலைஞர்மடம் பகுதியில் ஷெல்தாக்குதலில் பாலமுரளி கொல்லப்பட்டதாக அவர் சொன்னார்.

தற்காலிக வீட்டைக்கூட அமைக்க முடியாமல் கொடுக்கப்பட்ட தகரங்களை கொட்டகை போல் சாத்திவிட்டு அதற்குள் இருக்கும் சர்மிலாவதியும் மகனும் அரச, தொண்டு நிறுவனங்களின் உதவியில் புறக்கணிக்கப்பட்டே இருக்கின்றனர். ஆண் துணை இல்லாத இவருக்கு தற்காலிக வீட்டை அமைத்துக் கொடுக்கக்கூட ஒருவரும் முன்வரவில்லை. கடும் மழை பெய்தால் வீடு முழுவதும் தண்ணீர் உட்புகுந்துவிடுமளவுக்கு நிலத்திலேயே தற்காலிக கொட்டகை அமைந்துள்ளது. மழைநீர் தேங்கிப்போயுள்ள அந்த இடத்தில் இரவில் நிம்மதியாகத் தூங்குவதே ஆபத்தாகும். இவ்வளவு நெருக்கடிக்குள் சர்மிலாவதி தனது மகனுடன் வாழ்க்கையை ஓட்ட வேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது. இவருக்கு உதவியளிக்கும் அயல்வீட்டுப் பெண்ணான சிதம்பரம் மூக்காயியும் கணவனை இழந்தவரே. தந்தையாருடன் இருக்கும் மூக்காயிக்கும் எல்லோரைப் போலவுமே பிரச்சினைகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்.



இவர்களின் துன்பத்தைப் பார்த்தபடி. அடுத்த வீட்டுக்கு நகர்ந்தோம். அங்கும் நிலைமை அப்படியேதான் இருந்தது. சிறிதரன் மனோஜா என்ற இளம் விதவைக்குடும்பம். இவருக்கும் இரண்டரை வயதில் ஒரு ஆண்குழந்தை. பொக்கணைப் பகுதியில் 2009 ஆம் ஆண்டு ஷெல் தாக்குதலில் சிறிதரன் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர், "நாங்கள் அகதிமுகாமில் பல்வேறு நெருக்கடிகளுடன் வாழ்ந்துவிட்டு சொந்த இடத்திலாவது நிம்மதியாக வாழலாம் என்று வந்தால் இங்கு நிலைமை மோசமாக உள்ளது" எனக் குறிப்பிட்டார். தாய், தந்தையுடன் இருக்கும் மனோஜா உதவிகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றார். 'ஆண் துணை உள்ள குடும்பங்கள் உரியகாலத்தில் உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றனர் அல்லது பேரம் பேசி, அதிகாரிகளுடன் முரண்பட்டாவது தமக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் எங்களைப் போன்றவர்களை அதிகாரிகள் கவனத்தில் கொள்வதில்லை. எங்கள் கதையைப் பொருட்படுத்துவதில்லை' என்கிறார்.

இளங்கோபுரம் கிராமத்தில் பெரியதுரை லச்சுமி என்ற பெண் கணவரை இழந்து 4 பிள்ளைகளுடன் வசித்து வருகின்றார். இவருக்கும் வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கே நெருக்கடிகள் இருப்பதாகக் குறிப்பிடும் லச்சுமி இடம்பெயர்வதற்கு முன்னரும் கஷ்டப்பட்டு உழைத்துத்தான் பிள்ளைகளை வளர்த்தோம். அப்படி இப்போது வேலை இல்லை. நிவாரணங்களைத்தான் எதிர்பார்க்கவேண்டியுள்ளது. ஆனால் அவை முழுமையாக எங்களை வந்தடைவதில்லை. உதவி வழங்குபவர்களும் அரச நிர்வாக அதிகாரிகளும் பொறுப்புடன் இருந்து யாருக்குத் தேவை உள்ளது? யாருக்கு தேவை இல்லை? என்று உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒரு சில குடும்பத்துக்கு எல்லா உதவிகளும் கிடைக்க, எங்களைப் போன்ற பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவரும் அக்கறை கொள்ளவில்லை" என்று குற்றம்சாட்டினார்.

**காளியம்மா தன் பிள்ளைகளின் நிலைமையைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட செத்துப்போகலாம் என்கிறார். தங்களை ஏன்தான் கடவுள் காப் பாற்றி இவ்வளவு துன்பங்களை அனு பவிக்க விட்டிருக்கிறார் என்று அழுது புலம்பத் தொடங்கினார். அவருக்கு ஆறுதல் கூற எமக்கு அருகதை இருக்க வில்லை.**

இப்படி ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்குள் அதிகளவான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் காணப்படும் நிலையில் அவர்கள் தொடர்பில் எந்தவகையிலும் விசேட கவனம் செலுத்தப்படாது அரச சேவையில் உள்ளவர்கள் நடந்து கொள்வதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். சலுகை அடிப்படையில் சில குடும்பங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது, மீண்டும் மீண்டும் ஒரு சாராரையே உதவிகள் சென்றடைவது, லஞ்சம், ஊழல் போன்றதாகும். இவற்றை விலக்க அரச நிர்வாக அதிகாரிகள் சரியாக வழி காட்டப்பட வேண்டும். இவர்களது பணி தொடர்பான அவதானிப்பை பொறுப்பு வாய்ந்த மேலதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். இல்லாதுவிடின் பொறுப்புடன் மக்கள் சேவையாற்றும் சில நிர்வாகிகளது பணியும் மழுங்கடிக்கப்பட்டு வன்னி மக்களின் வாழ்வாதாரம் உட்பட அபிவிருத்திப் பணிகளும் பாதிப்படையும் அபாயம் தோன்றும்.★★★



# என்ன என்ன கனவு கண்டாயோ?

சனத் இந்த நாமம் உச்சரிக்காத வாய்கள் குறைவு. ஒதுக்கப்பட்டிருக்கிறது இந்த நாமம் இன்று. இனிமேலும் ஒலிக்குமா? ஏக்கம் பலருக்கு உண்டு.

செல்லக் குழந்தையாய் இலங்கை அணி இருக்கையில் அதனுடன் இணைந்தவன் இவன். 1969 மாத்தறை மாவட்டத்தின் குழந்தை. சனத் தேரன் ஜெயசூரியா இயற்பெயர் இவனுக்கு. மோகம் அதிகம் கிரிக்கெட்டில். அதனால் நுழைந்தான் பாடசாலை கிரிக்கெட் அணியில். சுத்துவது பலருக்கு பிடிக்கும். இவனுக்கு சுத்தி பந்து போடுவதில் அலாதி பிரியம். இவனது சுழற்றலில் பலர் வீழ்ந்தனர். இதனால் அழைப்பு புளூம்பீல்ட் கிரிக்கெட் அதலெட்டிக் கழகம். ஆரம்பத்தில் சாதிக்க முடியவில்லை.

தொடர்ந்தது பயணம். வெற்றிகள் இவன் கைகளில் பின்னர் வீழ்ந்தது. 1989 டிசெம்பர் 26 முதல் பதிப்பு ஆரம்பம். ஆரம்பம் எங்கேயும் இவனுக்கு சறுக்கல்தான். பிரகாசிக்கவில்லை துடுப்பாட்டத்தில். வீசவில்லை பந்தும். அறிமுகம் அவுஸ்திரேலியாவுடன். அதனால் அடக்கமாகி விட்டான்.

சந்தர்ப்பம் கொடுத்தது இலங்கை இவனுக்கு. பயன்படுத்தினான் தவறாது அவற்றை. இதனால் கிடைத்தது டெஸ்ட் அணியில் இடம். 1991 நியூசிலாந்துடன் அறிமுகம். அங்கும் ஆரம்பம் சிறப்பில்லை. இருந்தாலும் தொடர்ந்தது பயணம். அப்போதெல்லாம் இலங்கை அணி தோல்விக்குதான் சொந்தம். இவன் வருகையுடன் தொடங்கியது புதியதொரு தொடர்.

புதுக் கூட்டணி கட்சி ஸ்தாபித்தார்கள் 1994 காலப்பகுதியில். சனத், ரொமேஸ் களுவிதாரண, மஹநாம, அரவிந்த டி சில்வா, அசங்க குணவர்த்தன, முரளிதரன். கூட்டணி கட்சியின் தலைவர் அர்ஜூண ரணதுங்க. ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றம். புதுக் கூட்டணி புகுந்து விளையாடியது எதிரணிக் கோட்டையினுள். சிதறியது பல இடங்கள். கூட்டணியை குழப்ப பல முயற்சிகள். பலன் அளிக்கவில்லை எவருக்கும்.

போதாது இந்தப் பலம். மாற்றினர் ஒழுங்குகளை கிண்ணத்துக்காக. 1996 உலகக்கிண்ண போட்டிகள் நடந்தன இங்கே. முன்னுக்கு வந்தனர் சனத்-ரொமேஸ் ஜோடி. அப்போதுதான் வெளிச்சத்துக்கு வந்தது மாத்தறை குழந்தையின் புதிய பரிணாமம். அன்றைய விதிகள் அமைந்தன இவனுக்கு சாதகமாய். பதினைந்து ஓவர்கள், பந்துகள் இவன் மட்டையில் பட்டால் தப்பாது எல்லைக் கோட்டை தாண்டும்.

இவனுக்கு அதிரடி மட்டும் அத்துப்படி. இதனால் பலருக்கு குடுத்தான் மரணஅடி. முன்னணி பந்து வீச்சாளர் தாம் எனப் புகழ்ந்தும் பலருக்கு வாயடைப்பு. இவன் கொடுத்த மரண அடியின் உச்சம் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும்தான். பதினேழு பந்தில் அடித்துக்காட்டினான் அரைச்சதம். ஒரு ஓவரில் அடித்தெடுத்தான் 31 ஓட்டம். இவனுக்கு சாதனைகள் புதிதில்லை. ஏனெனில் நித்தம் நித்தம் அவற்றைப் படைப்பதால்.

இவனுக்கு துடுப்பு மட்டை மட்டும் சொந்தம் இல்லை. கைவசம் வைத்திருந்தான் சுழற்றும் வித்தையை. இதனால் முக்கிய தருணங்களில் எதிரணியின் மூக்குடைத்துவிடுவான். இவனுக்கு தலைமைப் பொறுப்பு குடுத்தனர். இவன் சாதனைகளை கௌரவப்படுத்த. 1999 இல் உலகக்கிண்ணத்தின் பின் பதவியேற்றான். இவனுக்கு துணிவு கொஞ்சம் கூட. அதனால் ஜாம்பவான்கள் ஆஸிக்கு எதிராக சுழற்பந்து வீச்சை அழைப்பான் முதல் பதினைந்து ஓவருக்குள். அனைவருக்கும் கொடுப்பான் ஆச்சரியம். எழுதப்படாத விதியாய் இருந்தது 15 ஓவரின் பின்தான் சுழற்பந்து வீச்சு. மாற்றியவன் இவன்தான்.

தலைமைப் பொறுப்பை கையளித்தான் 2003 கிண்ணத்தை தவறவிட்ட பின். இருந்தும் தொடர்ந்தான் முன்னணி அதிரடிக் காரனாய். 2007 உலக்கிண்ணமும் இவனது அதிரடியை ரசித்தது. பின்னர் பிடித்தது சனியன் இவனுக்கு. இளமை முடிந்து முதுமை ஆரம்பம். இவனால் ஈடுகொடுக்க சிரமம். இதனால் இழந்தது 2011 உலகக்கிண்ணமும், ஐ.பி.எல்லும்.

இரண்டிலும் ஆட ஆசைப்பட்டதாக சின்னக் குழந்தை போல் செவ்வியும் குடுத்திருக்கிறான். இதைவிடத் துயரம். அவன் கிரிக்கெட்டுக்கு வந்து 20 ஆண்டுகள் பூர்த்தி அவன் சொல்லித்தான் தெரிந்தது மற்றவர்களுக்கு.

டிலீப்

# முன்னரே வரும் முடிவுகள்



இந்த முறை உலகக்கிண்ணப் போட்டிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே இரு முன்னணி அணித்தலைவர்கள் தாம் உலகக்கிண்ணத்துடன் தமது அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து விலக உள்ளதாக அறிவித்துள்ளனர்.

ஒரு நாள் போட்டித் தரவரிசையில் மூன்றாம் இடத்திலுள்ள தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் சிமித் ஒருவர். மற்றையவர் சர்வேதச ஒரு நாள் போட்டியில் ஏழாம் இடத்திலுள்ள நியூஸிலாந்து அணியின் தலைவர் விக்டோரி.

2003 ஆம் ஆண்டு தமது சொந்த நாட்டில் இடம்பெற்ற உலகக்கிண்ணத் தொடரில் முதல் சுற்றுடனேயே தென்னாபிரிக்க அணி வெளியேறியதைத் தொடர்ந்து அப்போது அதன் அணித்தலைமைப் பதவியிலிருந்து பொலக் விலக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஒரு நாள் போட்டிக்கு அறிமுகமாகி ஒரு வருடமான நிலையில் சிமித் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார். ஒரு அணியின் தலைமைப் பொறுப்பு என்பது மிக முக்கியமானதொன்று. பெரும்பான்மையான அணிகள் போட்டிகளில் அறிமுகமாகி விளையாடி பத்து அல்லது பதினைந்து வருடங்களின் பின்னரே அணித் தலைமைப் பொறுப்பு வழங்கப்படும். இருப்பினும் சிமித்துக்கு அவர் மீது நம்பிக்கை வைத்து அந்த அணித் தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டது.

சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி மிகச்சிறப்பான இடத்துக்கு முன்னேறியது. அத்துடன் சிமித் தனது தனிப்பட்ட துடுப்பாட்டத்திலும் முன்னேறினார். தென்னாபிரிக்க அணியை யாராலும் அசைக்க முடியாத அணியாக உருவாக்கியமைக்கு முக்கியமானவர் சிமித். டெஸ்ட் தரவிசை மற்றும் ஒரு நாள் போட்டிக்கான தரவரிசை என்ப தென்னாபிரிக்க அணி முதலிடத்துக்கு வருவதற்கும் காரணமாக அமைந்தார். தலைமைப் பொறுப்பிலிருந்து சிமித் விலகும் முடிவானது கிரிக்கெட் ரசிகர்கள் இடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் நியூஸிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விக்டோரி விலகக் காரணம், தொடர்ந்தும் தோல்விகளால் நியூஸிலாந்து அணி துவண்டு கொண்டிருக்கிறது.

விக்டோரி அணித்தலைமைப் பொறுப்பை 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தின் பின்னர் பொறுப்பேற்றார். ஸ்ரீபன் பிளெம்மிங் அணியிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்தே வெற்றிடமாகிய அணித்தலைமைக்கு சகல துறை ஆட்டக்காரரான விக்டோரி நியமிக்கப்பட்டார்.



உசிலமணி

விக்டோரி தலைமையிலான நியூஸிலாந்து அணி ஒரு நாள் போட்டிகளிலும் சரி, டெஸ்ட் போட்டிகளிலும் சரி தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து வருகின்றது. அந்த அணி பங்களாதேஷ் அணியுடன் இடம்பெற்ற போட்டித் தொடரில் 4-0 என்ற அடிப்படையில் படுதோல்வியடைந்திருந்தது. எனவே அவர் உலகக் கிண்ண போட்டிகளின் பின்னர் ஓய்வு பெறுவதென்பது இயல்பானதொன்று.

எது எப்படியிருப்பினும் உலகக்கிண்ண போட்டிகள் தொடங்க முன்னரே இவ்வாறான அறிவிப்புக்கள் வருவது அந்த அணிகளின் பலவீனமே. குறிப்பாக தென்னாபிரிக்க அணி கிண்ணம் கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படும் அணிகளில் ஒன்று. அந்த அணியின் தலைமை இவ்வாறு அறிவிப்பு வெளியிடுவதன் பின்னணியில் ஏதோ காரணம் இருப்பது மட்டும் உறுதி.

# இவர்கள் இன்னமும் ஒதுங்கவில்லை.

உலகக்கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு மூன்று வாரங்கள் இருக்கும் நிலையில் அந்தக் கிண்ணத்தை கைப்பற்றுவதற்காக 14 அணிகள் களத்தில் குதித்துள்ளன.

இருப்பினும் கிரிக்கெட் விளையாட்டைப் பொறுத்த வரையில் எந்த நேரத்திலும் எதுவும் நிகழலாம் என்பதுவே உண்மை. பலமான அணியாயினும் தற்போதைய நிலையில் பலமில்லாத அணி எனக் கணிக்கப்பட்டது ஆஸ்திரேலியா. அந்த அணி தனது சொந்த மண்ணிலேயே பல அணிகளிடம் தொடர்ச்சியாக அடிவாங்கிக் கொண்டிருந்தது. அதனடிப்படையாகவே ஆஸ்திரேலியா பலம் இழந்துவிட்டதாக சொல்லப்பட்டது. ஹட்ரிக் உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய அந்த அணி இந்த முறை உலகக்கிண்ணத்தை நெருங்காது என்பதே பலரது எதிர்பார்ப்பு.



தில்லாலங்கடி

நாங்கள் இந்த முறையும் விடமாட்டோம்.

அதற்கேற்றாப்போல் அந்த அணி தனது மண்ணிலேயே இலங்கை அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரை, ஆஷஷ் தொடரை தனது சொந்த மண்ணில் வைத்தே பறிகொடுத்தது. இவற்றையெல்லாம் தவிடு பொடியாக்குவது போல இங்கிலாந்துடனான ஒரு நாள் போட்டித் தொடரில் அந்த அணி தனது திறமைகளைக் காட்டி வருகின்றது. முதல் மூன்று போட்டிகளையும் வென்று தொடரில் முன்னிலை வகிக்கின்றது.

டெஸ்ட் போட்டிகளிலேயே அந்த அணி பலவீனமாக இருகின்றதே ஒழிய ஒரு நாள் போட்டிகளில் அந்த அணி எழுச்சியுடன்தான் இருக்கின்றதென்பதையே காட்டிநிற்கிறது. எனவே உலகக்கிண்ணப் போட்டிகளில் அந்த அணி இந்த முறையும் கிண்ணத்தை வெல்லும் நாடுகளின் பட்டியலிலேயே சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

# கவிதைப்புனல்



## தீர்வொன்று வந்திங்கு சேர்ந்திடுமா?

தந்தை செல்வாவின் தலைமையின் கீழ்எத்தனையோ
விந்தைமிகு போராட்டம் விடுதலைக்காய்ச் செய்திட்டோம்
எந்தவரசும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை
அந்த நிலையிற்தான் ஆயுதப்போர் ஆரம்பம்

உண்ணாவிரதங்கள் ஊர்வலங்கள் கடையடைப்பு
கண்ணாரப் பலகண்டோம் களங்களிலே பலமிழந்தோம்
தண்ணார் தமிழணங்கு தலைவிரித்து ஏதிலியாய்
உண்ணாமல் கிடக்கின்றாள் ஒருதீர்வு வந்திடுமா

காகிதத்து ஒப்பந்தம் கண்துடைப்புத் தானென்று
ஆயுதப்போர் நடத்தியவர் அழிவுற்றார் என்செய்வோம்
தாயகத்து மண்ணிப்போ தலைகீழாய் மாறிப்போய்
வாயடைத்துக் கிடக்கிறது வந்தேறு குடிகளினால்

சொந்த நாட்டினிலே சோகங்கள் பலசுமந்து
எந்த இனமுமெங்கும் இவ்வாறு வாழவில்லை
இந்தநிலை எங்களுக்கு ஏன்தான் வந்ததுவோ
முந்தை வினைப்பயனோ முன்னோர்கள் செய்தவறோ

சொத்திழந்து சுகமிழந்து சொந்தங்கள் பலவிழந்து
அத்தனையும் இழந்து அகதியெனப் பெயரெடுத்து
எத்தனைநாள் இம்மண்ணில் ஏதிலியாய் வாழ்வதுவோ
இத்தனைக்கும் ஒரு தீர்வு என்றுவந்து சேர்ந்திடுமோ!

இரத்தினசபாபதி
குலசிங்கம்.



## அன்பு காட்டும் வாழ்க்கை

மானத்தைக் காத்திடும் நல்லுடை - இன்று
மானம் இழந்தவர்க்கு ஏனுடை
தானுண்ணும் வாழ்க்கையே ஏனடா - அயல்
தம்மை அணைத்துயிர் வாழடா.

ஊணும் உறக்கமும் வேண்டுமே - போற்றும்
உலகின் இயல்பவை உண்மையே
உணவும் உறக்கமும் வாழ்வென - இந்த
உலகில் உலவுதல் பொய்யடா

உண்டவர் வீட்டுக்கு இரண்டகம் - செய்தும்
ஊரில் பெரியவர் ஆகியோர்
கண்டநற் பேரின்பம் ஏதடா அன்பு
காட்டிடு வாழ்க்கையே மேலடா

சிவமனோகரி செல்லத்துரை.



## கனாக்கண்டேன் தோழி நான்

நீண்ட நெடுங்காலம் நிறைவான வாழ்வுக்காய்
நெடுமூச்செறிந்து நிம்மதியைத் தானிழந்து
கூண்டுக் கிளியாகக் குமரியெனும் பெயருடனே
கோலம் அழிந்து குறுகிடும்நம் கோதையரை
கரும்பெனவே கண்டுமனம் காதலித்துக் கைப்பிடித்து
காலமெலாம் கைகோர்த்துக் களிப்புடனே வாழ்வதற்கு
விரும்பியிங்கு முன்வரவே எவருமில்லை எனும்நிலையை
விலக்குதற்கு இளைஞர் வரக் கனாக்கண்டேன் தோழி நான்

சீதனத்தின் கொடுமையினால் செல்வமிலா நிலைமையினால்
சீர் கொடுக்க வசதியின்றி சீரழியும் வாழ்க்கையினால்
பேதலித்து மனமுடைந்து பிறந்ததற்கே மிகவருந்தி
பெற்றோரின் கண்ணீரில் தினந்தோறும் தாம்நனைந்து
வாடுமெங்கள் வனிதையரை வனப்பிழந்து போவோரை
வையகத்தில் வாழ்வதற்கு வழியறியாத் தோகையரை
தேடியிங்கு வாழ்வளித்துச் சிறப்பளிக்க நம்மிளைஞர்
திரண்டுவரும் காட்சியினைக் கனாக்கண்டேன் தோழி நான்

அடக்குமுறை ஒடுக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க
அமைதிக்குப் பெயர் பெற்ற அழகுநம் தேசத்தில்
தொடக்கிவிட்ட யுத்தமது தொடர்ந்ததனால் நெடுங்காலம்
தொகைதொகையாய் இளைஞர்களைத் தொலைத்தே அழித்துவிட
வாழ்விழந்த இளம்பெண்கள் வாழ்வுபெற வேண்டுமென
வாலிபர்கள் மனங்கொண்டு மணங்கொள்ளத் துணிகின்ற
காலமது கனிந்திடவும் காரிகையர் களிப்புறுதல்
கண் முன்னே நிகழ்ந்திடவும் கனாக்கண்டேன் தோழி நான்

கொற்றை,
பி.கிருஷ்ணானந்தன்



## உள்ளத்தை உறுத்துதையோ உண்மை

இல்வசமாய்க் கல்வி
இருப்பவரோ இரட்டையராம்
நில்வரமோ இல்லைப்பாழ்
நிலத்தினிலே - கல்வரமே
பள்ளியிலே சேர்ப்பதற்கோ
பணங்கொண்டா என்கின்றார்
உள்ளத்தை உத்துதையோ உண்மை

- பொய் பொறுக்கான்

## வேண்டுவதோ வேண்டும்

உள்ளத் தெளிவு வேண்டும் - வெல்லும்
உயர்ந்த நோக்கம் வேண்டும்
பள்ளத் திருக்கும் மாந்தர் - உயரும்
பணிகள் தொடரவேண்டும்

குணத்தை மதிக்க வேண்டும் - இட்டோர்
குலத்தைக் காக்க வேண்டும்
கணத்துக் கொருபொய் கூறும் - வேடக்
கசடர் ஒழிய வேண்டும்

இரக்கம் பொறுமை வேண்டும் - அன்பில்
இனிக்கும் வாழ்வு வேண்டும்
அரக்கர் போன்ற கொடியர் - தம்மை
அழிக்கும் வலிமை வேண்டும்

செழிப்பாய் வாழ வேண்டும் - உழைத்து
சேர்க்கும் பண்பு வேண்டும்
அழித்துப் பகைகொண்டாளும் - கொடியர்
அகத்தைத் திருத்த வேண்டும்

செ. மகேந்திரன்



## உன்னோடு நான்

என்னோடு
உறவாடும்
உன் உறவின்
பரிவுகளுக்குள்
நீயும் நானும்
ஒன்றோடு ஒன்றாய்

கனத்த நினைவுகளும்
காரணமில்லா
கனவுகளும்
என்னை உன்னுடன்
இருப்பாக்கிக்கொண்டது

உன் உறவின்
சாம்ராஜ்யத்தில்
என் காத்திருப்புக்கள்
காரணமில்லாமலே
கிரீடம் சூடிக்கொண்டது

என் உணர்விலும்
உயிர்ப்பிலும்
சங்கமமாகி
உறவாடும்
உன் நினைவுகளுடன்
என்றும் நான்...

க.நாகேஸ்வரன்.

## ஹைக்கூ கவிதைகள்

**இனந்தெரியாதோர்**

எம்மண்ணில்
பலரது சாவுகளையும் தீர்மானிக்கும்
ஜமதர்ம ராஜாக்கள்

**சீதனம்**

அவள்
யாதகத்தில்
பாதகமானது

**காதல்**

அவன்
முகத்தில் பூத்துக்குலுங்கிய
புன்னகைப் பூக்களைப்
பறித்துவிட்டு
அவள் பரிகரித்துவிட்டுச்சென்ற
முட்செடிகள்

அபிமான்







**அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

எல்லாம் தெரிந்திருந்தாலும் அடக்கமாக இருக்கும் நீங்கள், சண்டை சச்சரவு என வந்துவிட்டால் பதுங்க மாட்டீர்கள். வர வேண்டிய பணம் கைக்கு வரும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பார். புது வேலைக் கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். புது வீடு கட்டி குடிப்புகுவீர்கள். கன்னிப்பெண்களே! கல்யாண பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். அதிரடி முடிவுகளால் வெற்றி பெறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 5, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : செம்மஞ்சள், ஊதா. அதிர்ஷ்ட திசை : தென்மேற்கு





**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

இடம், பொருள், ஏவல் அறிந்து எதையும் செய்யும் நீங்கள், யாருக்காகவும் கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். வீடு, எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்றுத் தீரும். அலுவலகத்தில் அதிகாரிகள் மதிப்பார்கள். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். தொலை நோக்குச் சிந்தனையுடன் செயல்பட வேண்டிய வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : வெள்ளை, பிங்க்: அதிர்ஷ்ட திசை: வடக்கு.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சுயநலமில்லாத நீங்கள், சொந்தபந்தங்களை விட நட்பு வட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். குடும்பத்தில் இருந்த கூச்சல், குழப்பங்கள் விலகும். உறவினர்கள், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். பணம் வந்தாலும் வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வழக்கில் அவசரம் வேண்டாம். கன்னிப் பெண்களே! பெற்றோரைக் கலந்தாலோசித்து முடிவுகளெடுப்பது நல்லது. வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். அமைதி காக்க வேண்டிய வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 3, 6 அதிர்ஷ்ட நிறங்கள் : பிஸ்தாபச்சை, மஞ்சள்: அதிர்ஷ்ட திசை : வடகிழக்கு.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

மொழிப் பற்று அதிகமுள்ள நீங்கள், சுதந்திர மனப்பான்மை உள்ளவர்கள், சுகபோகங்களுக்கு அடிமையாக மாட்டீர்கள். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். எதிர்பார்த்த பணம் வரும். அரைக்குறையாக நின்ற வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். உடன்பிறந்தவர்களின் பிரச்னையைத் தீர்த்து வைப்பீர்கள். உங்கள் ரசனைக் கேற்ப வீடு, வாகனம் அமையும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். கன்னிப் பெண்களே! கல்யாண முயற்சிகள் பலிதமாகும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் பாராட்டினாலும் சக ஊழியர்களால் பிரச்சினை உண்டு. இடைவிடாமல் போராடி இலக்கை எட்டும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 5, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : ரோஸ், இளம்சிவப்பு அதிர்ஷ்ட திசை : தெற்கு.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

சொல் ஒன்று செயல் வேறு என்றில்லாமல் சொன்னதை முடித்துக் காட்டும் சத்திய சீலர்கள் நீங்கள் தான். எதிர்பார்த்த காரியங்கள் தடையின்றி முடியும். குடும்பத்தில் அமைதி நிலவும். மகளுக்கு நல்ல வரன் அமையும். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பெற்றோரின் ஆதரவுக் கிட்டும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமையை மேலதிகாரி பாராட்டுவார். கலைத்துறையினர்களே! உங்களின் படைப்புகளுக்கு மதிப்பு மரியாதை கூடும். புது எண்ணங்கள் மனதில் மேலோங்கும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 4, 6 அதிர்ஷ்ட நிறங்கள் : சில்வர் கிரே, ஊதா. அதிர்ஷ்ட திசை : தென்மேற்கு




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

சிறுவயதிலேயே பலவித அனுபவங்களால் பக்குவப்பட்ட நீங்கள், பகைவரையும் நேசிப்பவர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புது வீடு கட்டி குடிபுகுவீர்கள். பழைய உறவினர்கள் தேடி வந்து பேசுவார்கள். நட்பு வட்டம் விரியும். கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தாய்வழியில் பிரச்சினைகள் வந்து நீங்கும். வழக்கில் வழக்கறிஞரை மாற்றுவீர்கள். வியாபாரத்தில் முழுமூச்சுடன் இறங்கி விரிவுபடுத்துவீர்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மேலதிகாரியுடன் இருந்த கசப்புணர்வு நீங்கும். மன உறுதியால் சாதிக்கும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 3, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : பிரவுன், க்ரீம் வெள்ளை. அதிர்ஷ்ட திசை: கிழக்கு.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

தன் கையே தனக்கு உதவி என்று வாழும் நீங்கள், நெஞ்சுறுதியுடன் பிரச்சினைகளைச் சந்திப்பவர்கள். கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளிடம் பாசம் அதிகரிக்கும். வீடு, வாகனத்தைச் சீர் செய்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். ஏழரைச் சனி தொடர்வதால் யாருக்கும் கையெழுத்திட வேண்டாம். தூக்கமின்மை வந்து நீங்கும். இழந்த புகழை மீண்டும் பெற யதார்த்தமான படைப்புகளைக் கொடுக்கப் பாருங்கள். ஏமாற்றங்கள், எதிர்ப்புகளை கடக்கும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 2, 5 அதிர்ஷ்ட நிறங்கள் : கிரே, மயில்நீலம். அதிர்ஷ்ட திசை : வடமேற்கு




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

தெளிந்த நீரோடையைப் போல வெள்ளை மனசுள்ள நீங்கள், தீர்க்கமான முடிவுகளை எடுப்பதில் வல்லவர்கள். தள்ளிப் போன திருமணப் பேச்சுவார்த்தை கைகூடும். பேச்சில் கம்பீரம் தெரியும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயற்படுவார்கள். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். புது நிலம், வீடு வாங்குவீர்கள். உங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். சாதுக்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். கலைத்துறையினர்களே! உங்கள் புகழ் கூடும். ஈகை குணத்தால் எல்லோராலும் பாராட்டப்படும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : மெரூண், பழுப்பு. அதிர்ஷ்ட திசை : மேற்கு.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

ரசிப்புத் தன்மை அதிகம் கொண்ட நீங்கள் ஏதேனும் ஒரு வகையில் சாதிக்க வேண்டுமென நினைப்பீர்கள். சொந்த-பந்தங்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பழைய இடத்தை நல்ல விலைக்கு விற்று புது வீடு வாங்குவீர்கள். பழைய கடனைத் தீர்க்க உதவிகள் கிடைக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். கலைத்துறையினர்களே! மூத்த கலைஞர்களின் ஆதரவுக் கிட்டும். மாறுபட்ட அணுகுமுறை யால் வெற்றி பெறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 5, 6 அதிர்ஷ்ட நிறங்கள் : வெளிர்நீலம், கிரே அதிர்ஷ்ட திசை : தென்கிழக்கு.





**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

பாகுபாடு பார்க்காமல் உதவும் நீங்கள் பார்த்தால் பூனை, பாய்ந்தால் புலி. ஆனால் பல நேரங்களில் பாசமாகப் பேசுபவர்களிடம் ஏமாறுவீர்கள். புது வேலை கிடைக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். புது வீடு கட்ட வங்கிக் கடன் கிடைக்கும். சொத்து வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். அலுத்துக் கொள்ளாமல் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு உழைக்க வேண்டிய வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 4 அதிர்ஷ்ட நிறங்கள் : ப்ரவுன், வெள்ளை அதிர்ஷ்ட திசை : மேற்கு.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

கறைபடியாத களங்கமற்ற மனசு கொண்ட நீங்கள் காலத்திற்கு ஏற்பக் கோலத்தை மாற்றிக் கொண்டாலும் ஒழுக்கம் தவறாதவர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மனைவி வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீட்டில் கூடுதலாக ஒரு அறைக் கட்டுவீர்கள். கன்னிப் பெண்ளே! உங்களின் புதிய திட்டங்களை பெற்றோர் ஆதரிப்பார்கள். வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டு. பங்குதாரர்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். விட்டுக் கொடுத்து விட்டதைப் பிடிக்கும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 6, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : ஆலிவ்பச்சை, பிங்க். அதிர்ஷ்ட திசை : வடக்கு,




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

யதார்த்தமாகவும், எடுத்துக்காட்டாகவும் வாழும் நீங்கள் தன்னைச் சுற்றியிருப்பவர்களை வழி நடத்திச் செல்வதிலும் வல்லவர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். குடும்பத்தின் அடிப்படை வசதிகள் பெருகும். கோவில் விழாக்களுக்கு தலைமை தாங்குவீர்கள். உடன்பிறந்தவர்கள் வலிய வந்து உதவுவார்கள். புதுச் சொத்து வாங்குவீர்கள். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நேரங்களில் பிடிப்பில்லாமல் போகும். கலைத்துறையினர்களே! பழைய நிறுவனங்கள் உங்களை அழைத்துப் பேசும். ஓசைப்படாமல் வளரும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 2, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : மெரூண், ரோஸ். அதிர்ஷ்ட திசை : வடகிழக்கு.

# 'ங'ப்போல் வளை

ஔவைப் பாட்டி உங்களுக்குத் தமிழ் எழுத்தொன்றையே உதாரணம் காட்டி அது போல நீங்களும் வாழவேண்டும் என்று கூறுகிறார்.

தமிழ்க் குழந்தைகளாகிய நீங்கள் தமிழ் எழுத்தாகவே வாழும்படி கூறுகிறார். 'ங' என்ற எழுத்தை நீங்கள் அறிவீர்கள். சொற்களில் இந்த எழுத்தை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. அங்ஙனம், இங்ஙனம் என்று அபூர்வமாக இவ்வெழுத்துக்கள் வரும் ஙா-ஙி - ஙூ போன்ற எழுத்துக்கள் தமிழ்ச் சொற்களில் வருவதில்லை. ஆனாலும் 'ங' என்னும் எழுத்து தன் வரிசையில்



உள்ள மற்ற எழுத்துக்களை தழுவிக்கொண்டிருக்கிறது. அதே மாதிரி நீயும் பயனுள்ளவனாக இருக்கவேண்டும். உன் இனத்தவர் பயனில்லாதவர்களாக இருந்தபோதிலும் அவர்களை நீ தழுவிக்கொள்ள வேண்டும். 'ங' வைப் போல என்கிறார் ஔவையார்.




# அனந்தல் ஆடேல்

மனிதனுக்கு உழைப்பைப் போலவே ஓய்வும் வேண்டும். ஒரு சராசரி மனிதன் ஒரு நாளைக்கு ஐந் திலிருந்து ஆறு மணிநேரம் தூங்கவேண்டும். அப் போதுதான் அவன் பகலில் இழந்த சக்தியைக் களைத்த உடலுக்கு ஓய்வு கொடுத்து ஈடு செய்ய முடியும். இதில் அளவு மாறுபடலாம். உலக மேதைகள் அதிக நேரம் தூங்கியதில்லை. ஆனால் சிலர் 24 மணி நேரத்தில் 12, 18 மணிநேரம் தூங்கும் சுபாவ முடையவர்களாக இருப்பார்கள். இரவில் அல்லாது பகலிலும் தூங்குவார்கள். இத் தகைய சோம்பேறிகளால் எந்தக் கடமையைச் செய்ய முடியும். பிறர் பழிப்புக்கு ஆளாகவே நேரும். ஆகவே அளவுக்கு அதிகமாகத் தூங்கக் கூடாது. இதையே ஆத்திசூடி ஆசிரியர் அனந்தல் ஆடேல் என்கிறார். 'அனந்தல்' என்பது தூக்கம்.



# நற்பழக்கம் நமதாக

ஒரு காட்டில் ஒரு சிங்கராசா நீதி வழுவாது ஆட்சி செய்து வந்தது அங்குள்ள மிருகங்கள் தங்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளைச் சிங்கத்திடம் சொல்லிச் சுமுகமான தீர்வைப் பெற்றுக் கொள்வர்

அச் சிங்கராசாவுக்குப் புத்தியுள்ள நரி ஒன்று முதலமைச்சராக இருந்தது எந்த விடயத்தையும் சிங்கம் நரியின் ஆலோசனையின் பிரகாரமே செய்து முடிக்கும்.

ஒரு நாள் பெண் கரடி ஒன்று தனது இரு பிள்ளைகளுடன் சிங்கராசாவின் அரண்மனைக்கு வந்தது எனது பிள்ளைகள் இருவரும் 'நீ பெரிதா நான் பெரிதா' என்று சொல்லி ஒருவரோடொருவர் ஒவ்வொரு நாளும் சண்டை செய்கிறார்கள். எத்தனையோ முறை அவர்களுக்கு அறிவுரை கூறியும் எதையும் அவர்கள் கேட்பதாய் இல்லை. நாளுக்குநாள் சண்டை மோசமாகிறது என்னால் தாங்க முடியவில்லை. இவர்களை நல்வழிப்படுத்தி விடுங்கள் என்று இரந்து கேட்டது.

கரடியின் பரிதாபமான நிலையைப் பார்த்து 'நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே மேம்பாட்டுக் குணங்கள் எவருக்கும் சிறுவயதிலிருந்தே ஊட்டப்பட வேண்டும். மாதா பிதா குரு தெய்வம் என்று வழிவழியாகப் போற்றிப் பாட்டுப் பேணப்பட்ட பழக்கங்கள் குணங்கள் எல்லாம் சிறுவயதிலிருந்தே ஊட்டப்பட வேண்டும் இவற்றை உனது பிள்ளைகள்



புரிந்து கொள்ளாமையால் இப்படி ஆகிவிட்டார்கள் போலும். பரவாயில்லை இப்போதும் அவை குட்டிகள்தான். அவைகளின் மனமும் பசுமையாக இருக்கும். இவைகளின் மனத்தை மாற்றி நல்வழிப்படுத்தலாம்' என்று தாய்க்கரடிக்குச் சிங்கம் ஆறுதல் சொன்னது.

பின்னர் தனது முதலமைச்சரான நரியைப் அழைத்து கரடிக் குட்டிகளின் நிலைமை பற்றியும் தாயின் கவலை பற்றியும் கூறி இதற்கு என்ன பரிகாரம் காணலாம் என வினவியது.

அந்த நேரத்திலும் கரடிக்குட்டிகள் குரங்குச் சேட்டைகள் செய்த வண்ணமாகவே அங்கு நின்றிருந்தன இதனை முதலமைச்சரான நரியும் அவதானித்துக் கொண்டிருந்தது.

பின்னர் அது சிங்கராசாவிடம் இக்கரடிக் குட்டிகளை எனது பாதுகாப்பில் வைத்திருக்கப் போகிறேன் எனக்கு அனுமதி தாருங்கள் எனக் கேட்டது

இதற்கு உடன்பட்ட சிங்கம் தாய்க் கரடியிடம் 'உனது பிள்ளைகளை மூன்று தினங்களின் பின்னர் இங்கே வந்து கூட்டிப் போகலாம் இப்பொழுது அவர்களை இங்கேயே விட்டுச் செல்' என்றது. கரடியும் மகிழ்ச்சியுடன் சிங்கத்தின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு குட்டிகளை அங்கேயே விட்டுச் சென்றது.

பின்னர் நரி கரடிக்குட்டிகளை அழைத்துக்கொண்டு தனது இருப்பிடம் சென்றது. முதலில் குட்டிகள் குடிப்பதற்கெனப் பாலையும் தேனையும் வழங்கியது. ஆனால் அவை அதனை ஏற்றுக் கொள்ளாமல் அடாவடித்தனம் புரியத் தொடங்கின. நரி அவைகளைக் கடிந்து கொள்ளாமல் பணிவுடன் நடந்து கொண்டது. ஆனால் குட்டிகளின் அட்டகாசமோ தொடர்ந்து கொண்டிருந்தன.

எதற்கும் பணியாத குட்டிகளின் சேட்டைகளால் பொறுமை இழந்த நரி இந்தக் கரடிக்குட்டிகளுக்கு அவைகளின் வறுமையோ பெற்றோரின் கண்டிப்போ இல்லாமையே இவற்றுக்கெல்லாம் காரணம் என உணர்ந்து கொண்டது.

எனவே வறுமையின் வலிமையை அவைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற முடிவுடன் இருவரையும் இருள் நிறைந்த அறை ஒன்றினுள் விட்டுப் பூட்டி மூன்று நாள்களின் பின்னர் வருவேன் எனச் சொல்லி வந்தது.

இ.இராசமோகன்
ஆனைக்கோட்டை

மூன்று நாள்களின் பின்னர் நரி அவ்விடத்துக்கு வந்து அறையைத் திறந்து பார்த்தது. சோர்வுடனும் களைப்புடனும் இருந்த கரடிக் குட்டிகள் நரியைக் கண்டதும் ஓடிவந்து அதன் காலில் விழுந்து வணங்கின. அவ்வேளை நரி அவைகளைப் பார்த்து இப்பொழுது 'எது உங்களுக்குப் பெரிதாகத் தெரிகிறது சொல்லுங்கள்' எனக் கேட்டது. அதற்குக் கரடிக் குட்டிகள் 'எங்களுக்குத் தண்ணீர்தான் வேண்டும் அதுதான் பெரிது' என்றன. உடனே நரி அவைகளுக்கு நீரைக் கொடுத்தது.

அவை நீரைக் குடித்த பின்னர் நரி கரடிக்குட்டிகளைப் பார்த்து இப்பொழுது எது பெரிது என்றது குட்டிகள் எங்களுக்குப் பசிக்கிறது இப்பொழுது உணவுதான் பெரிது என்றன.

உடனே நரி குட்டிகளே நீங்கள் இந்த நாள் வரை நான் பெரிது நீ பெரிது என் விதண்டாவாதம் செய்தவைகள் ஏதாவது ஒன்று பெரிதாகத் தெரிகிறதா என்று கேட்டது.

இல்லை இல்லை இப்பொழுது எங்களுக்குச் சாப்பாடுதான் பெரிதாகத் தெரிகிறது என்றன பசியுடன்.

நீங்கள் செய்த விதண்டாவாதத்தில் பெரிதாக ஏதாவது தெரிகிறதா என்று மீண்டும் கேட்ட நரியிடம் கரடிக் குட்டிகள் இல்லை இல்லை இனிமேல் நாங்கள் நீ பெரிது நான் பெரிது என விதண்டாவாதம் விட்டுச் சண்டை செய்ய மாட்டோம். நாங்கள் நல்லவர்களாக வாழ்வோம் என்றன.

கரடிக் குட்டிகளின் மனமாற்றத்தைக் கண்ட நரி மகிழ்ச்சியடைந்தது. குட்டிகளைச் சிங்கத்திடம் கூட்டிச் சென்றது

நடந்தவற்றை அறிந்த சிங்கராசா நரியைப் பாராட்டியது. தாய்க்கரடியை அழைத்து அதனிடம் குட்டிகளைப் பத்திரமாக ஒப்படைத்தது.

அமைதியாகவும் பண்பாகவும் தமக்குள் விளையாடிக்கொண்டிருந்த தனது பிள்ளைகளைக் கண்ட தாய்க் கரடி அளவில்லா மகிழ்ச்சி அடைந்தது. தன் பிள்ளைகள் அனைவரையும் சொற்ப நாட்களுக் குள் நல்லவர்களாக மாற்றிய சிங்கராசாவுக்கும் முதலமைச்சரான நரியாருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.



மரபு வழிவரும் மேம்பாடான குணங்களை அறியாதவர்கள் தங்களுக்குள் முரண்பட்டு விரோதத்தை வளர்த்து மற்றவர்களுக்கும் அதனைப் பரப்பி விடுகிறார்கள்

இதனைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாத சிறுவர்கள் இலகுவாகவே தம்மைத் தவறான வழிகளில் ஈடுபடுத்தி விரைவாகவே தமது வாழ்க்கையைச் சீரழித்து விடுகிறார்கள்.

இதனால் எல்லோருக்குமே துன்பம் ஏற்படுகிறது நற்குணம் கொண்டவர்கள் விவேகம் உள்ளவர்களாய் இருப்பார்கள்

அவர்கள் ஏனையோரின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பின் எத்துன்பத்தையும் எதிர் கொண்டு வெற்றி கொள்ளும் ஆற்றலைப் பெறுவார்கள்

பிள்ளைகளே நீங்கள் பெரியோரின் நல்வழிகாட்டலைக் கேட்டு நல்வழிகளைப் பின்பற்றிச் சிறுவயதிலேயே நல்ல பழக்கங்களுக்குள் நீங்கள் உங்களை ஈடுபடுத்தி வளர் வாழப் பழகுங்கள். ★★★

## மூளைக்கு வேலை தரும்


## மாயச் சதுரம் - கணிதப் புதிர் - 01

| | | | |
|---|---|---|---|
| 1 | 7 | 14 | 4 |
| 12 | 6 | 15 | 9 |
| 8 | 10 | 13 | 5 |
| 11 | 3 | 2 | 16 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 34 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

# வள்ளுவர் காட்டிய "தம்"

குழந்தைகள் ஒரு குடும்பத்தின் செல்வங்கள் அவர்களின் குறும்பிலும் மழலைக் குரலிலும் மகிழ்வது ஒவ்வொரு வீட்டிலும் இனித்திடும் நிகழ்வாகும். குழந்தைகளின் ஒவ்வொரு அங்க



அசைவையும் இரசிப்பதிலும் அவை பற்றிப் பெருமைப்படுவதிலும் அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் அவர்களின் சுவை தரும் நிகழ்வுகளைச் சொல்லிக்களிப்பதிலும் இன்புறுதல் இயல்பாகும். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பார்களே அந்த வகையில் தன்குஞ்சுகள் பற்றிப் பெருமை கொள்ளும் உரிமை ஒவ்வொரு தாய்க்கும் உண்டு.

மனித வாழ்க்கையின் தொடக்க காலம்- நடைபயிலும் காலம் ஆரம்ப பருவமே. அத்தகைய இனித்திடும் பருவத்தின் இயல்பினை ஈரடிக்குறளிலே தந்தவர் பொய்யாமொழிப் புலவர் எனப்போற்றப்படும் திருவள்ளுவர். மக்கட்பேற்றின் மகிமையையும் குழந்தைகளின் செய்கையால் சிறப்புறும் பெற்றோரையும்- அவர் தாம் அடையும் இன்பத்தையும் அந்த அதிகாரத்தில் எடுத்துணர்த்தியுள்ளார். குறள் அடிக்குள்ளேயே மக்கட்பேறு விளைக்கும் மிகப்பரந்த வாழ்க்கை முறையை நயக்கும் வண்ணம் சிறிய குறள் தந்த பெருமானார் அதன் வழி தாம் அடித்த "தம்" எமது கவனத்தை ஈர்க்கின்றது.

வள்ளுவனார் தனது குறள்தரும் வாய்மையை வலிமை உடையதாக ஆக்கும் வண்ணம் அவர் அடித்த 'தம்' ஒவ்வொன்றும் எம் உள்ளம் கொள்ளும் வகையில் தேன் கலந்தாற் போல் இன்பத்தைத் தருகின்றது.

*"அமிழ் தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகை அளாவியகூழ்"*

சிறுகை அளாவிய கூழ் இனிமை ஆனது. அதன் சுவை தனித்துவமானது. அதன் சுவை அமிழ்தினும் மேலானது. அத்தகைய சுவை பொருந்திய கூழ் தம் மக்களின் சிறுகை அளாவிய நிலையில் விரும்பி உண்ணத்தகுந்ததாகின்றது. இங்கே வள்ளுவர் அடித்த 'தம்' ஒன்றே அக்கூழ் அளாவிய கைகளுக்கு வலிமையைத் தருகின்றது.

அந்தத் 'தம்' மக்கள் சிறுகை அளாவிய கூழுக்கு இனிமையையும் சுவையையும் தருகின்றது. வள்ளுவர் இக் குறளின் பொருத்தமான இடத்தில் அடித்த 'தம்' மக்கட்பேற்றின் உரிமையையும் உயர்வினையையும் வெளிப்படுத்துகின்றது.

தம் மக்கள் அன்றிப் பிறன் மக்கள் அளாவிய கூழ் அத்தகைய இனிமையைச் சுவைக்கத் தருவதில்லை. தம் மக்கள் சிறுகை அளாவிய கூழின் சுவைக்கு இணையான சுவையை அமுதமும் அளிக்கப்போவதில்லை. இக்குறளில் வள்ளுவர் அடித்த தம் இல்லையெனில் இக் கூழ் சுவைத்திருக்காது. இனித்திருக்காது. அதைப் போன்றே

மைதிலி தேவராஜா

மக்கட்பேறு எனும் அதிகாரத்தில் வள்ளுவர் அடித்துள்ள 'தம்' கள் எம்மை மகிழ்விப்பதோடு மனங்கொள்ளச் செய்து குறட்பாக்களின் பொருட்செறிவுக்கும் நயச்சிறப்புக்கும் காரணமாகின்றன.

*"குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்"*

மழலைச் சொற்களைக் கேட்டு இரசிக்காத மனிதர்களே குழலின் இனிமையையும் யாழின் இனிமையையும் போற்றிப் புகழ்ந்து பேசுவர். மழலைச் சொல் கேட்டு மகிழ்ந்து நயந்தவர்களே அந்த மழலைகளின் சொல் இனிமையை இசைக் கருவிகள் தரும் இனிய ஓசையிலும் மேலானதாக ஏற்று இரசிப்பார்கள்.

மழலைகளின் சொல் மகிழ்வு தருகின்றது. அது மகத்துவமுடையது. எத்தகைய இசைக் கருவிகளின் நாதத்துடன் ஒப்பு நோக்கும் தகுதிக்கும் மேலானது இங்கே வள்ளுவர் இவ்வாறு காட்டிய 'தம்' ஒவ்வொன்றும் பிறர்மழலையிலும் மேலாகத் தம் மக்களைக் காணுகின்ற பெற்றோரின் உணர்வுகளை உரிமையுடன் வெளிப்படுத்துகிறது. தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' எனக் குறள்வழி அடித்த தம்; மழலைகளின் சொல் தரும் இனிமையை விதந்துரைக்கின்றது. வள்ளுவர் காட்டிய 'தம்' அந்த மழலை மொழி பேசுகின்ற மழலைகள் மீதெழும் விருப்பை அதிகரிக்கின்றது. வள்ளுவர் இவ்வாறு 'தம்' எனும் சொல்லில் பொதிந்துள்ள உறவு, பாசம், உரிமை அனைத்தையும் வெளிப்படுத்தி அவர்தம் குறளின் வலிமையையும் வனப்பையும் நயம்படக் காட்டியுள்ளமையை இரசிப்போம்.

மக்கட்பேறு எனும் அதிகாரத்தில் வள்ளுவர் 'தம்' அடித்த குறள்கள் இவை

*'தம் பொருளென்ப தம் மக்கள வர்பொருள் டந்தம் வினையான் வரும்'*

*'தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லா மினிது'*

இவையாவற்றுள்ளும் வள்ளுவர் அடித்த- வடித்த 'தம்' கருத்துச் செறிந்த இனிமை கலந்த நயந்தரும் 'தம்' என்பதனை நுகர்ந்துணர்வோம். ★★★

# யதார்த்தம்...

(சென்றவாரத் தொடர்ச்சி... III)

அங்கிருந்து திரும்பிய போது என்னால் அவளுடன் கதைக்க முடியவில்லையே. என எழுந்த ஆதங்கத்துடன் என் வீடு வந்து சேர்ந்தேன். வந்ததும் அந்த வீட்டுக்கு உதவி செய்ய வேண்டும். ஆனால் என்னிலமையும் பொருமளவில் செய்யக்கூடியதாய் இல்லை. நானே சித்தி வீட்டில் தான் இருக்கிறேன். பிறகு எப்படி? பார்ப்போம் எதுக்கும் அவர்களுடன் கதைக்க முக்கியமாக மதுவுக்கு உடுப்பு வாங்க வேணும் மற்றது அவளுக்கு வேலை ஒன்று எடுத்துக் கொடுக்க வேண்டும். வேலை எடுத்துக் கொடுத்தால் அந்தக் குடும்பம் சராசரி குடும்பத்தின் நிலைக்கு வந்திடும். எப்படியேனும் உதவிசெய்ய வேணும். செய்வேன் என்ற நம்பிக்கையோடு சென்றேன். சில நாட்களின் பின் என் சித்தி வீட்டார் நான் விரும்பிய படியே மதுவுக்கும் சின்னவள் ஐயா வல்லோருக்கும் சேர்த்து உடுப்புக்களும் வேறு இதர பொருட்களும் கொடுத்ததாகச் சொன்னார்கள் மற்றும் மதுவுக்கு ஒரு வேலை தேடும் முயற்சியிலும் வெற்றி. எனக்கு மனதுக்கு கொஞ்சம் சந்தோஷமாக இருந்தது. இவ்விடயத்தை கதைத்தபடி இருந்த சித்தி 'சிறி அந்த வீட்டிலிருக்கிற சின்னவள் உன்னை வரட்டாமாம்' என்றா. நானும் ஓம் சித்தி அவள் எனக்கு சொன்னவள் தான் நான் தான் போகயில்லை." என்றேன் . 'அதுகள் பாவம் தானே ஒருக்கா போட்டுவாவன்' என்றா. சித்தி நானும் பதிலுக்கு இன்றைக்குப் 'போகப் போகிறேன்' என்றேன். அன்று சொன்னபடியே அவர்களின் வீட்டுக்குச் சென்றேன். அவர்களின்




வரவேற்பு அதிகமாக இருந்தது.

காரணம் நான் சில நாட்கள் போகாமலிருந்தது தான். சின்னவள் என்னைக் கண்டதும் திடீரென வீட்டுக்குள் போனவள் வெளியே வரவில்லை. "என்னையா சின்னவள் என்ன செய்கிறாள்" என்றேன். ஐயா உன்னில கோபமாக்கும் என்றார். நானும் சின்னவள் சின்னவள் என்று கூப்பிட்டுப் பார்த்தேன். அவள் வெளியே வரவில்லை. ஒவ்வொரு நாளும் வருவேன் என்று சொன்னாத் தான் வெளியில வருவன் என்றாள். உள்ளே இருந்தபடியே. சின்னவளாக இருந்தாலும் அவள் என்னில் வைத்திருக்கும் பற்று அதிகம் ஆதலால் மனதுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவ்வாறு எண்ணியபடி நான் ஒவ்வொரு நாளும் வருவேன் நீங்க வெளிய வாங்கோ என்றேன். அவள் என்ன நினைத்தாளோ மகிழ்ச்சியோடு வெளியே ஓடிவந்தாள். அவளைத் தொடர்ந்து வந்த மதுவின் அழகு அவள் அணிந்திருந்த ஆடையால் மேலும் அழகுபெற்றதாகத் தோன்றியது. ஆனால் அவளது கலங்கிய கண்களைப் பார்த்ததும் என்ன? என்ன பிரச்சனை என்றேன். நான் வேலைக்குப் போகயில்லை. நாங்கள் மூன்று பேரும் நஞ்சு குடிச்சுச் சாகவேண்டியது தான். அப்பா நங்கள் அப்பவங்களோடேயே செத்திருக்கலாம். உந்தப் பிரச்சினை வராது தானே என்றாள் கவலையோடு" நான் ஒரு பெண் தானே எனக்கும் வெட்கம், மானம், ரோசம் இல்லையா?' நான் ஒரு பொடியனா யிருந்து என்னிட தங்கைச்சிக்கு இது நடந்திருந்தால் உவங்கள் உப்பிடி இருக்க மாட்டாங்கள் என்று தம்பிமார் இருந்திருந்தால் உவங்கள் இப்படிக் கேட்கவிட்டிருப்பினமே. உங்கட நிலைவேறு' என்றாள். எனது மனம் குழம்பிப்போனது.

"எல்லாம் நாளைக்குச் சரிவரும் என்று ஏதோ ஒரு எண்ணத்தோடு நான் அங்கிருந்து புறப்பட்டேன். அந்த ரவுடிகளுடன் மோதும் பலம் இல்லையென்றாலும் நியாயத்தைக் கேட்கும் துணிவு இருந்தது.

நான் கேட்டேவிட்டேன். ஆனால் அவர்கள் எதையும் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அவர்கள் என்மீதில் ஆத்திரம் கொண்டுள்ளார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களின் பாதையில் செல்லாமல் வேறு பாதையால் செல்வதென்றாலும் இயலாமற்போயிற்று. மதுவின் மீது ஏற்படுத் தப்பட்ட கலாட்டாக் கலாச்சாரத்தை அவர்கள் என்மீதும் காட்டத் தொடங்கினார். அன்று நான் சிறிது இருட்டிய வேளையில் எனது வீடு நோக்கி வந்துகொண்டிருந்தேன். மறைவிலிருந்து ஓடி வந்தவர்கள் என்னைத் தாக்கியது தெரியும். ஆனால் நான் கண் விழித்தபோது அருகிலேயே மதுவும் சித்தியும் சின்னவளும் நிற்க ஆஸ்பத்திரியில் காயங்களுடன் படுத்திருந்தேன். மதுவின் தனிமையும் அவளின் இளமையுமே அவளை அந்த ரவுடிகளின் ஏச்சுக்கும் கேலிக்கும் உள்ளாக்கியது. இப்பொழுது என் மீதும் அந்த ரவுடிகள் பாய்ந்து என்னைக் காயப்படுத்திவிட்டார்கள். இதைத் தகர்க்க என்ன செய்யலாம் மது என் மீது வைத்திருக்கும் பாசமும் சின்னவளும் ஐயாவும் கொண்டிருக்கும் நேசமும் அவர்களின் குடும்பத்தில் ஒருவகையில் என்னையும் இணைத்துக் கொண்டது. நான் மதுவை திருமணம் செய்துகொண்டேன். ஆனால் அந்த ரவுடிகள் இப்பொழுதும் இளமையும் தனிமையும் சேர்ந்து வாழும் கனாகாணவைச் சூழ்ந்து கொள்ள அவர்கள் வருந்துகிறார்கள். இந்த ரவுடிகள் எப்போது திருந்துவார்களோ? மனது துடிதுடித்தது. இதயம் படபடத்தது. (முற்றும்)

# ஏலக்காயின் மருத்துவ குணங்கள்



ஏலக்காய் என்பது இஞ்சிச் செடி வகையைச் சேர்ந்தது. பச்சை நிறக் காய்களைக் கொண்டது. ஏலக்காய் பச்சை நிறத்திலும், பழுப்பு நிறத்திலும் இருக்கும்.

ஏலக்காய் நறுமணப் பொருளாக மட்டும் இல்லாமல், பல மருத்துவக் குணங்களைக் கொண்டதாகும்.

மன இறுக்கத்தைக் குறைத்து உடல் புத்துணர்ச்சி பெற ஏலக்காய் பயன்படுகிறது.

பல் மற்றும் வாய் தொடர்பான பல பிரச்சினைகளுக்கு ஏலக்காய் நல்ல தீர்வாக அமையும்.

செரிமானத்திற்கு உதவும். இதனால்தான் நெய் சேர்த்து செய்யப்படும் இனிப்புகளில் அவசியமாக ஏலக்காயை சேர்ப்பார்கள்.

குரல் வளை மற்றும் தோல் தொடர்பான நோய்களைத் தீர்க்கும் ஆற்றல் ஏலக்காய்க்கு உண்டு.

மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கும் ஏலக்காய் பயன்படுத்தப்படுகிறது.



# அம்மை நோயின் தாக்கம் குறைய

அம்மை நோயின் தாக்கம் குறைய தாழம் பூவைத் துண்டு துண்டாக வெட்டி நீரில் இட்டு காய்ச்ச வேண்டும். நீர் நன்கு கொதித்து பூவிதழ்கள் வதங்கிய பின் வடிகட்டி, தேவையான சர்க்கரை கூட்டி பாகுபதமாய் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

இதுவே தாழம்பூ மணப்பாகு. தாழம்பூ மணப்பாகினை வெயில் காலங்களில் தினசரி உபயோகித்து வர அம்மை நோய் வராமல் தடுக்கலாம்.

அம்மை போடும் போது மருதாணி இலையை அரைத்து இரு பாதங்களிலும் வைத்துக் கட்டி வர அம்மையினால் கண்களுக்கு எந்தவொரு தீங்கும் நேராது. இதனால் அம்மையின் போது ஏற் பட்ட உடல் உஷ்ணம் குறையும்.

வேப்பிலை மிகவும் குளிர்ச்சியான தன்மை கொண்டது. வேப்பிலையுடன் சிறிது மஞ்சளை வைத்து அரைத்து பட்டாணி அளவிற்கு 3 உருண்டைகளை வெறும் வயிற்றில் கொடுத்தால் உடல் குளிர்ச்சி அடையும். அம்மை நோயும் தாக்காது.

இளநீரும், மோரும், அம்மை நோயின் தாக்கத்தைப் பெருமளவு குறைக்கும். வெறும் வயிற்றில் இளநீர் அருந்தினால் நல்லது.

# நோயாளியின் மனதை குழப்ப வேண்டாம்

ஆரோக்கியமாக இருக்கும் வரை நமக்கு ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் தெரிவதில்லை. ஏதேனும் நோய் தாக்கிய பிறகுதான் நாம் ஆரோக்கியமாக இருப்பதன் அவசியத்தை உணர்கிறோம். வெறும் காய்ச்சல் வந்தாலே, கை, கால் சோர்வு, வாய் கசப்பது போன்றவை ஏற்படுகிறது. ஒரு வாரம் வரை நம் அன்றாட வேலைகளை செய்ய இயலாமல் போகிறோம். மனதளவில் தளர்ச்சியை உணர்கிறோம். இதே உயிரை மாய்த்துவிடும் நோய்கள் நம்மைத் தாக்கினால், நோய் நம்மைக் கொல்வதற்கு முன்பு, நாமே பயத்தால் அல்லவா தினம் தினம் செத்து மடிகிறோம். நோய் தாக்கியதால் ஏற்படும் மன உளைச்சலால்தான் நோயாளிகள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்று மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

எனவே, நோயாளிகளின் மனதை முதலில் குணப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. பொதுவாக நாம் ஏதேனும் ஒரு சிகிச்சை பெற மருத்துவரை அணுகினால், நோய்க்கான காரணத்தைக் கூறி, இப்படி இப்படி இருங்கள், இதனை சாப்பிடுங்கள், நோய் சரியாகிவிடும் என்று கூறுவார்கள்.

சில மருத்துவர்கள், உங்களுக்கு இப்படி ஒரு நோய் வந்துவிட்டது, இப்படி எல்லாம் செய்யும், குணப்படுத்த இத்தனை நாள்கள் ஆகும் என்று முதலிலேயே நோயாளிகளைப் பயமுறுத்தி விடுவார்கள். இவர்களுக்கு உரிய காலம் ஆன பிறகும் கூட நோய் குறையாது. அதற்குக் காரணம், அவர்களது மனதில் உள்ள பயம்தான்.

அதேப்போல, புற்றுநோய் பாதித்தவர்களுக்கு, புற்று நோயினாலும், அதற்காக எடுத்துக் கொள்ளப்படும் சிகிச்சையினாலும், உடலில் பல்வேறு உபாதைகள் ஏற்படும். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாவார்கள். அவர்களது உருவத்தில் மாற்றம், தனது வேலைகளை செய்து கொள்ள முடியாமல் போவது, அதிகமான வலியை உணர்வது, மருந்துகளினால் ஏற்படும் பக்க விளைவுகள் போன்றவை ஆரோக்கியமான மனதைக் கூட கெடுத்துவிடும்.

நோயாளிகளின் நோயை குணப்படுத்துவதற்கு முன்பு, அவர்களது உடல் இயக்கத்தை சீராக்கி அதன் மூலம் அவர்களது மன நிலையை சரி செய்ய வேண்டும். நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்குள் இருக்கும் தன்னம்பிக்கையைத் தட்டி எழுப்ப வேண்டும். இதுதான் அவர்களது நோயை விரட்டும் முக்கிய சிகிச்சையாகும்.





# குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள்

சில குழந்தைகள் பார்க்கும் இடத்தில் இருக்கும் மண்ணை அள்ளி வாயில் போட்டுக் கொள்வார்கள். இதனைத் தடுக்க குழந்தைகளை அடிப்பதோ, திட்டுவதோ மிகவும் தவறு.

ஓமம், மிளகு, துள்சி, கீழாநெல்லி வேர், கடுக்காய்த் தோல் இவற்றை சம அளவு எடுத்து பொடி செய்து மோரில் கலந்து கொள்ளவும். இதை 3 முதல் 5 நாள்கள் வரை ஒரு சங்களவு வீதம் உள்ளுக்கு கொடுக்க குழந்தைகள் மண் தின்பதை விட்டு விடுவார்கள்.

குழந்தைகளுக்கு வயிறு இரைந்து நீராய்க் கழிச்சல் ஏற்படும். குழந்தைகளுக்கு வயிற்றுப் பிரச்சினை ஏற்படும் போது ஓமத்தை நினைவில் கொள்ளவும். ஓமத்தை சுடுநீரில் போட்டு வெறும் நீரை மட்டும் கொடுத்தால் குழந்தை நலமடையும்.

# சிறுவர் சுடர்

## தங்க மயில்

காட்டிலே ஒரு தங்க மயில் இருந்தது. அது மிகவும் அழகான தங்க மயில். அதன் கொண்டு பொன்னிறமானது. அதன் கால்கள் பொன்னிறமானவை. காலையில் அது தோகையை விரித்து ஆடும். அதன் ஆடலை மான்கள் பார்க்கும். முயல்கள் பார்க்கும். யானைகள் பார்க்கும். குரங்குகள் பார்க்கும். ஆடல் அழகாக இருக்கிறது என்று அவை சொல்லும். எல்லா மிருகங்களுக்கும் தங்க மயில் மேல் ஆசை. அந்த மயிலின் ஆடலைப் பார்த்து மிருகங்கள் மாத்திரமல்ல, கிளி, குயில், மைனா, கொக்கு, கோழி போன்ற எல்லாப் பறவைகளுமே பார்த்து மகிழும்.



ஒரு நாள் அந்தத் தங்க மயில் காட்டை விட்டு நாட்டுக்குள் வந்தது. அதனைக் கண்ட மனிதர்கள் அதனைப் பிடிக்க ஓடினார்கள். அதன் தோகையைப் பிடுங்க எல்லோரும் அதனைக் கலைத்தார்கள். அதனை பிடித்து வீட்டுக்குக் கொண்டு போக ஒருவர் ஓடினார். இதனைப் பிடித்தால் நல்ல விலைக்கு விற்கலாம் என்றார், இன்னொருவர்.

தங்க மயில் பயந்தது. மனிதர்கள் அதன் அழகை இரசிக்கவில்லை. அதன் ஆடலைப் பார்த்து மகிழவில்லை. பிடித்து வீட்டுக்குக் கொண்டு போக விரும்பினார்கள். அதன் தோகையைப் பிடுங்கக் கலைத்தார்கள். மயிலுக்கு அழுகை வந்து விட்டது.

சேயோன் அண்ணா வந்தார். அதனை அன்போடு அழைத்தார். தங்க மயிலைக் கூட்டிக் கொண்டு போனார். காட்டில் விட்டார். அது மகிழ்ச்சியோடு சேயோனைப் பார்த்தது. ஆனந்தமாக ஆடியது. சேயோன் அண்ணா சந்தோசப்பட்டார்.

- கலாநிதி சபா ஜெயராசா.

## மரங்கள்



நம்மைச் சூழ மரங்கள் எல்லாம்
இருப்பதேனோ நீகூறு
நம்மை இங்கு நலமாய் வாழ
நன்மைகள் செய்திடும் நீகேளு

தென்னை பனையும் தேமா பலாவும்
தெரியும் உனக்கு அயலிலே
புன்னை புளியும் ஆலும் வேம்பும்
பூக்கும் காய்க்கும் செழிப்பிலே

கத்தரி வெண்டி மிளகாய்ச் செடிகள்
காய்த்துக் குலுங்கும் கண்டாயோ
சத்துடன் உன்னைக் காத்திட ஊட்டம்
சாற்றிடும் செய்தி உணர்வாயோ

படரும் கொடிகள் பசளி பயற்றை
பார்த்து ரசித்து மகிழ்வாயோ
உடலை நன்கு உறுதியாக்க
உதவும் விதத்தைப் புரிவாயோ

அயலில் உள்ள மரங்கள் தன்னை
ஆர்வத்தோடு வளர்ப்போமே
பயனும் நல்ல பலனும் சேரும்
பகிர்ந்து உண்டு களிப்போமே

கு.சரவணபவன்
- கோட்டக் கல்விப் பணிப்பாளர், தீவகம்






தே.கஜூரர்த்தன்,
யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.



எஸ்.நரேந்திரன்,
தரம் 1 F,



எஸ்.ஜேனுகா,
தரம் I C,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.

# பனிப் பாறையில் இரு காதலர்கள்

### ஒரு உண்மைச் சம்பவம்

பேபி

அமெரிக்காவில் வாஷிங்டனுக்குத் தென்மேற்காக அமைந்த ஒரு சிறுநகரம் அது. 21வயதான ஷெரோன் பிரேசர் அங்குள்ள ஒரு சிறிய வங்கி யில் பணியாற்றும் துடிப்பான யுவதி. அவளுக் கும் வேறொரு நிறுவனத்தில் பணிபுரிந்த பெரிஹில் என்ற 22 வயது இளைஞனுக்கும் திருமணம் நிச்சயமாயிருந்தது.

ஏப்ரல் மாதம் 1978 ஆம் ஆண்டு. இருவருக் கும் கோடை விடுமுறை. வித்தியாசமான முறையில் ஒரிரு விடுமுறை தினங்களைக் கழிக்க அவர்கள் விரும்பினார்கள். அதன்படி பனி கொட்டிக்கொண்டிருக்கும் ஒரு அழகான மலையில் ஏறி ஏதாவது ஒரு பாறைப்பகுதியில் அமர்ந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ முடிவெடுத்தனர். தேவையான கம்பளிகள், உணவு, பானங்கள் என்பனவற்றை முதுகில் சுமக்கும் ஒரு பையில் அடுக்கி அதையும் சுமந்து கொண்டு பெரிஹில்லின் காரில் கரடு முரடான மலைப் பாதையில் நீண்ட தூரம் கார் போகுமளவுக்குச் சென்றனர். காரை அங்கேயே ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் நிறுத்திப் பூட்டி விட்டு ஒற்றையடிப் பாதையூடாக மலையடிவாரத்துக்கு நடந்தார்கள்.

> இருபது நிமிட இமாலய முயற்சிக்குப் பின் அகற்றப்பட்ட ஒரு பெரிய பனிக்கட்டியின் அடியில் இருந்து ஷெரோனின் தலை வெளியே தெரிந்தது. ''கடவுளே அவள் உயிரோடு இருக்கிறாள்''

மலையடிவாரம் மிகவும் அழகாக இருந்தது. இனந்தெரியாத பூக்கள் வண்ணங்களை அள்ளி வீசிக்கொண்டிருந்தன. பார்க்குமிடமெல்லாம் ரம்மியமான காட்சிகள். இன்னும் மேலே போனால் எவ்வளவு அழகான காட்சிகளைப் பார்த்து ரசிக்க முடியும்? பொங்கி வந்த உற்சாகம் அபாயங்களை எண்ணிப்பார்க்க மறுத்தது.

சுமார் 4000 அடிவரை சிரமமில்லாமல் ஏறமுடிந்தது. முடிவில் இதற்கு மேல் போக வேண்டாம் என்று தீர்மானித்து பனிமூடிய மலைச்சிகரங்களை ரசித்தவாறே தாங்கள் கொண்டு வந்த உணவை உல்லாசமாக சுவைத்து உண்டனர். வெளிச்சம் மங்கிக் கொண்டு வந்தது. பனிமூட்டம் இரவை விரைவில் வரவழைப்பது போலிருந்தது.


இனி இறங்கிப் போகலாம் என்று கீழ் நோக்கி நடக்கத் தொடக்கினார்கள். பாதையைச் சற்று மாற்றிய போது பளிங்கு போன்ற ஓர் ஓடையும் அதற்கு மேலாகப் பனிப்பாறை ஒன்று பாலத்தைப் போல் உருவாகி ஒரு ரம்மியமான காட்சியைத் தந்து கொண்டிருந்தது. பெரிஹில்லுக்கு உற்சாகம் கரை புரண்டோடியது. ஓடையிலே இறங்கி மேலேயிருந்த பனிப்பாறையிலிருந்து சொட்டிக்கொண்டிருந்த பளிங்கு நீரைத் தன் வாயில் ஏந்திச் சுவைக்கத்தொடங்கினான் ஜில் என்று நாக்கில் இறங்கி தொண்டையையும் குளிர்வித்து வயிற்றில் இறங்கிய சிலிர்ப்பு அவனைப் பரவசமடையச் செய்தது.

''ஷெரோன் இதைச் சுவைத்துப் பாரேன் எவ்வளவு இனிமை? என்ன சுவை? ஐஸ்கிறீம் என்ன ஐஸ்கிறீம்? இதுவல்லவோ இயற்கை தரும் ஐஸ்கிறீம்!'' என்று ஷெரோனையும் கூவி அழைத்தான். அவளும் மெல்ல ஓடையில் இறங்கி கழுத்தை நிமிர்த்தி அந்த நீரின் சுவையை அனுபவிக்கத் தயாரானாள்.

அப்போது காது செவிபடும் ஒரு பெரும் ஓசை. என்ன நடந்தது என்று புரியவில்லை. எங்கும் இருள். ஆம் அந்தப் பெரிய பனிப்பாறை மிகப்பெரும் துண்டுகளாக உடைந்து இருவர் மீதும் விழுந்து விட்டது.

ஷெரோன் சுயநினைவு திரும்பி தன்னைச்சுற்றிக் கண்களைச் சுழற்றிய போது கண்ட காட்சி அவள் இரத்தத்தை உறையச் செய்தது. பெரும் பெரும் ஐஸ் பாறைகள் அவளை மூடிக்கொண்டிருந்தன. அவளைச் சுற்றி ஒரு சிறிய பள்ளம் இருந்தது. அந்தப் பள்ளத்திலே பிராணவாயு வெகுநேரம் இருக்காது என்பது அவளுக்குத் தெரியும். பிராணவாயு முடிந்தால் நிச்சயமான மரணம் தான். இருந்தாலும் முயற்சிப்போம் என்ற மனவுறுதியுடன் 'பெரி என்னைக் காப்பாற்று' என்று பலம் கொண்ட மட்டும் மூன்று நான்கு முறைகள் குரல்கொடுத்து விட்டு முடிந்தவரை பிராணவாயுவின் நேரத்தை நீடிப்பதற்காக மெதுவாக மூச்சு விடத் தொடங்கினாள். நம்பிக்கை அடியோடு போய்விட்டது. பாறைகளை மீறிக் கொண்டு குரல் வெளியே கேட்டிருக்குமோ தெரியவில்லை. எனினும் முடிந்தளவு உள்ளெடுக்கும் பிராணவாயுவின் அளவினைக் குறைத்து மிகமிக மெதுவாக மூச்சுவிடத் தொடங்கினாள்.

பாறை உடைந்து விழுந்த அந்தத் தருணத்தில் பெரி சற்று விலகியதால் அவனது கால் மட்டும் பனிப்பாறைகளுக்கிடையே சிக்கிக்கொண்டது. ஷெரோனுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. தன் காலையும் எடுக்க முடியவில்லை. அந்த நேரத்தில் ஷெரோனின் அபயக்குரல் மிகமிக மெலிதாக அவனுக்குக் கேட்டது. அவள் உயிரோடு இருக்கிறாள் என்பது தெரிந்து விட்டது. கால்களையும் மீட்கமுடியாமல் எப்படி அவர்களைக் காப்பாற்றுவது?



ஒரு கால் பூரணமாகப் புதைந்து விட்டது. மற்றக்காலைச் சிரமப்பட்டு ஒருவாறு இழுத்து ஐஸ் பாறையில் ஊன்றிக்கொண்டான். ஷெரோனின் குரல் வந்த திசையை யூகித்து வெறிபிடித்தவன் போல் வெறுங்கைகளால் ஐஸ் கட்டிகளைத் தோண்டத் தொடங்கினான். ஒரு சில கணங்களிலேயே கை விறைத்துவிட்டது. என்ன செய்வது என்று சுற்றும் முற்றும் பார்த்தபோது கடவுளின் பிரசன்னம் அங்கே வெளிப்பட்டது. ஒரு கூரான கற்பாறை சிறிது தூரத்தில் ஐஸ் பாறைகளுக்கிடையே தென்பட்டது. ஆனால் ஒரு காலை எடுக்காமல் அதை எட்ட முடியவில்லை. முடிந்தவரை முன்னால் குனிந்து வெளியிலிருந்த காலை நன்றாக ஊன்றிக் கொண்டு அங்குலம் அங்குலமாகக் கைகளை நீட்டி இறுதியில் பாறையைப் பற்றக்கூடிய நிலையை அவன் அடைந்தது மனத்தின் அபார வலிமையால்தான் என்று சொல்லவேண்டும். பாறையை இரு கைகளாலும் இறுக்கிப்பிடித்து ஐஸ் கட்டிகளைத் தோண்டி அப்புறப்படுத்தத் தொடங்கினான். ஆனால் ஷொரோன் உயிரோடு இருப்பாளென்று அவன் நம்பவேயில்லை.

இருபது நிமிட இமாலய முயற்சிக்குப் பின் அகற்றப்பட்ட ஒரு பெரிய பனிக்கட்டியின் அடியில் இருந்து ஷெரோனின் தலை வெளியே தெரிந்தது. ''கடவுளே அவள் உயிரோடு இருக்கிறாள்''

பிராணவாயு கிட்டத்தட்ட முடிவடைந்த நிலையில் ஷெரோன் ஆழமாகவும் வேகமாகவும் வெளிக்காற்றைச் சுவாசித்ததை அவன் கண்டான். ஆண்டவனுக்கு நன்றி. தப்பிவிட்டாள்!

''காயம் எங்கே பட்டிருக்கிறது? ஷெரோன் எப்படியிருக்கிறாய்?

''பெரி! ஒன்றும் தெரியவில்லை. என் கால்கள் எங்கே? என்னால் இடுப்பை அசைக்க முடியவில்லை.

சிராய்ப்புக் காயங்கள் பட்டு சில இடங்களில் தசையும் தெரிந்த கைகளால் மீண்டும் வேகமாகத் தோண்டத் தொடங்கினான். மிகக் குளிர்ந்த சூழ்நிலை இருந்ததால் இரத்தம் வழிந்தோடவில்லை. அதுவும் ஓரளவு ஆறுதல்தான். சற்று நேரம் தோண்டிய பின்னர் அவன் கண்ட காட்சி திகைப்பை ஊட்டியது. ஜீன்ஸ் அணிந்த மூன்று கால்கள் ஐஸ் கட்டிகளுக்கு மத்தியில் தெரிந்தன. மூன்றில் இரண்டு ஷெரோனுடையது. மற்றது தன்னுடையது என்று அவனுக்குத் தெரியும். ஆனால் விறைப்பின் காரணமாக யாருடைய கால் எது என்று தெரியவில்லை.

ஒருவாறு மேலும் சிறிது தோண்டித் தன் காலை அடையாளம் கண்டு ஒருவாறு அதை முதல் விடுவித்துக் கொண்டான். ஐந்து நிமிடம் கழித்து ஷெரோனை முழுமையாக அவன் மீட்டபோதும் அவளால் கால்களை அசைக்கவோ எழுந்து நிற்கவோ முடியவில்லை அவளது இடுப்பு பயங்கரமான வேதனையுடன் இருந்தால் அவளால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. இருவரும் ஒருவரை யொருவர் கண்டவுடன் பேச்சிழந்து கண்ணீருடன் தழுவிக் கொண்டார்கள்.

பெரி நிலைமையை எடைபோடத் தொடங்கினான். அவளது இடது கால் முறிந்திருந்தது. ஆனால் கால் விரல்களை அசைக்க முடிந்ததால் முதுகெலும்பில் பாரிய தாக்கம் இல்லை என்று யூகித்துக் கொண்டான் தன்னுடைய கால்களைப் பார்த்த பெரி சற்று ஆறுதல் அடைந்தான். நொண்டியபடி அடி எடுத்து வைக்க முடிந்தது. ஆனால் அதிர்ஷ்டவசமாக முறிவு ஏற்பட வில்லை.

*(அடுத்தவாரம் தொடரும்)*

# விஷம் கக்கும் தங்கத் தவளை



நீரிலும், நிலத்திலும் வாழும் திறன் பெற்ற தவளைகள் மிகவும் சாதுவானவை, ஆபத்தில்லாதவை என்று தான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், பசிபிக் கடலோரங்களில் வசிக்கும் ஒரு வகை தவளை, கொடிய விஷம் கொண்டது. ஒரே கடியில், மனிதனை பரலோகத்திற்கு அனுப்பும் அளவிற்கு இத்தவளையின் விஷம் ஆபத்தானது. பூமியில் உள்ள உயிரினங்களில் அதிக விஷம் கொண்டது இந்த தவளையினம் என்று ஆராய்ச்சியாளர் கள் கூறுகின்றனர். தாவும் தங்கத் தவளை என்று அழைக்கப்படும் இந்த, கோல்டன் டார்ட் பிராக் கொலம்பியா கடலோரத்தில் உள்ள அடர்ந்த மழைக் காடுகளில் அதிகமாக வாழ் கின்றன. அக்கால கொலம்பிய மக்கள், இத்தவளையின் விஷத்தை பிரித்தெடுத்து, அதை ஈட்டி, அம்பு முனைகளில் தடவி வேட்டைக்கு பயன்படுத்தியுள்ளனர். எவ்வளவு பெரிய விலங்காக இருந்தாலும், தவளை விஷம் தடவப்பட்ட அம்பு தாக்கியவுடன் மயங்கி விழுந்து விடும் என்பது குறிப்பிடத் தக்கது. உலகில் விஷத்தன்மை கொண்ட தவளைகள் 100 வகை உள்ளன. இவற்றில், கோல்டன் டார்ட் பிராக் வகை தவளைகள் தான் பெரியவை. கொலம்பியா காடுகளில் உள்ள குறிப்பிட்ட சில தாவரங்கள், ஈக்கள், வண்டுகள், எறும்புகள், கரையான்கள் ஆகியவையே இவற்றின் முக்கிய உணவு. இத்தவளைகள் வேகமாக அழிந்து வருகின்றன. இதற்கு, மனிதர்களால் தொடர்ந்து மழைக்காடுகள் அழிக்கப்படுவதே காரணம். இன்றைய நிலையில் இந்த தவளை இனம், வேகமாக அழிந்து வரும் விலங்குகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. தாவும் தங்கத் தவளைகள் பெரும்பாலும் மஞ்சள் வண்ணத்தில் தோற்றமளிக் கின்றன. இருப்பினும், ஆரஞ்சு, இளம்பச்சை உள்ளிட்ட வண்ணங்களிலும் இவை காணப்படுகின்றன. இந்த தவளைகள் வாழும் இடத்திற்கேற்ப அவற்றின் நிறங்கள் மாறுபடுவதாகவும், இதன் மூலம் இத்தவளைகள் தங்களை எதிரிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள் கின்றன என்றும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. தாவும் தங்க தவளை களின் விஷத் தன்மை குறித்து ஒரு சோதனை மேற் கொள்ளப் பட்டது. அதில், அத்தவளைகளின் இயற்கை யான வசிப்பிடங்களில் இருந்து மாற்றி, வழக்கமான உணவிற்கு பதில் வேறு உணவுகளை கொடுத்தனர். குறிப்பிட்ட சில நாட்களுக்கு பின் சோதனை செய்ததில், அந்த தவளைகள் விஷத்தன்மை மிகவும் குறைந்திருந்தது கண்டு பிடிக்கப் பட்டது. எனவே, அடர்ந்த காடு களில் காணப்படும் விஷத்தன்மை கொண்ட தாவரங்கள் மற்றும் சிறு பூச்சிகளை உட்கொள்வதால் மட்டுமே இத்தவளைகள் கொடிய விஷத்தை பெறுகின்றன என்று நம்பப்படுகிறது. தற்போது, இத்தவளைகளின் விஷத்தை கொண்டு சக்தி மிக்க வலி நிவாரண மருந்தை கண்டுபிடித்துள்ளனர்.




பேருவளையில்
பரம்பரை
மாந்திரீகம்

அரபு, உருது, மலையாள மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும்,
சகல இனத்தவர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்.

செய்வினை, சூனியம், ஸிஹ்ர், ஜின், சைத்தான், பேய், பிசாசு போன்ற சகல பிரச்சினைகளிலிருந்தும் சுகாத்தியம் பெறவும், பகைவர்களின் தீங்கில் இருந்தும் வியாபார ஸ்தலம், வீடு, தோட்டம் ஆகியவைகளை பாதுகாத்துக் கொள்ளவும் காவல்பாடு செய்து கொடுக்கப்படும்.

- ஆண் பெண் திருமணத் தடை நீங்கி உடன் திருமணம் நிறைவேறுதல்.
- பிரிந்த கணவன் மனைவி இணைந்து வாழ வழி வகுத்தல்.
- விரும்பியவர்களின் அன்பைப் பெறுதல்.
- புத்திர பாக்கியமின்மை.
- குடும்பத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தல்.
- மது பாவனை, போதைப்பொருள் பாவனை போன்ற தீய காரியங்களிலிருந்து அகற்றுதல்.
- தொழில் முன்னேற்றம் அடையச்செய்தல்.
- செய்வினை, சூனியத்தால் ஏற்பட்ட சகல வியாதிகளிலிருந்தும் சுகாத்தியம் பெறுதல்.

உங்கள் பிரச்சினை எதுவானாலும் நேரில் சந்திக்கவும்

இரகசியம் பேணப்படும்

தீய காரியங்களுக்காக செய்து கொடுக்கப்பட மாட்டாது.

வெளி நாட்டில் இருப்பவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்

தொலைபேசி 0094 34 2276932 - 0094 775 963949

பெரும் தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகள் முதல் VIP க்கள் வரை சந்தித்துப் பயனடைகிறார்கள்.
நீங்களும் சந்தித்து பயனடையுங்கள்.

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை சந்திக்கலாம்.

கலாநிதி, தேசமானிய, தேசபந்து
A.H.M.A. நவ்பர் ஹாஜியார் J.P
இல. 69, பழைய றோட்,
(ஹெட்டியாகந்த) பேருவளை.
Tel: 034-2276932/ 0775-963949 Fax: 034-2276932

வீடு இருக்கும் இடத்தை எமது பேருவளை ஷாமிலாஹ் ஜுவலர்ஸில் தெரிந்து கொள்ளலாம்.

ஷாமிலாஹ் ஜுவலர்ஸ் | காலி வீதி, பேருவளை.





சரியான
அன்பளிப்பு
பளிங்கு
&
கிளாஸ் வகைகள்
பயிடஸ் ஸ்டோர்ஸ்
ஸ்பட்டி பிளாசா 2574446
புறக்கோட்டை 2439422



GPRS Settings களுக்கு
அழுத்துங்கள்
#107#
Messaging & Settings - Settings
Dialog





Study in UK
Study in MALAYSIA
Study in SINGAPORE
One Stop Destination for Education Information
iCS
107 B -1/1, Galle Road, Colombo-06.
(Opposite to Colombo plaza NOLIMIT.)
தொடர்புகளுக்கு



# இந்திய யாத்திரை



**நாட்கள்:13**
**யாத்திரிகர்கள் 15**

உச்சிப்பிள்ளையார் - பிள்ளையார்பட்டி - பார்த்தசாரதி - மாங்காடு - வடபழனி - காஞ்சிவரதர் - திருத்தணி - அலமேலு மங்கா- திருப்பதி - பழனி -அழகர்கோயில் - ராக்காயி அம்மன் - கன்னியாகுமாரி - மருவத்தூர் - அஷ்டலெட்சுமி - வேற்காடு - ஏகாம்பரேஸ்வரர்- திருச்செந்தூர் - கபாலீஸ்வரர் - காளகஸ்திரி - காமாட்சி - மீனாட்சி சுந்தரேஸ்வரர் - திருச்செந்தூர் - பழமுதிர்சோலை - உவரிமுருகன் - திருவேற்காடு - திருப்பரங்குன்றம் - இராமேஸ்வரம் - ஸ்ரீரெங்கம் - தஞ்சாவூர் - சிதம்பரம் - திருவானைக்காவல் - உப்பிசயெப்பன் - சமயபுரம் - 9நவக்கிரக ஆலயங்கள் - திருவெண்ணாமலை - பொற்கோவில் - பிரித்திவிலிங்காதேவி - இரத்தினகிரிமுருகன் - சிக்கல் முருகன் உட்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

எமது சேவை -இருவழி விமான ரிக்கட் வீட்டில் இருந்து விமான நிலையம் சென்றுவர வாகன வசதி. 2 பேருக்கு குளியல் அறையுடன் கூடிய றூம்கள் - ஒரு வேளை காப்பி - காலை - இரவு - டிபன், மதியம் - சாதம், நாளொன்றுக்கு ஒருவருக்கு ஒரு லீற்றர் குடிநீர், அ.இ. ஏ.சி., ஸி.ஏ.ஸி. வாகன வசதி. விருப்பமுடையவர்கள் பாஸ்போட் பட்முள்ள பக்கம் 2 போட்டோக்கொப்பி, ஐ.இ. போட்டோக்கொப்பி - 1, கலர் புகைப்படம் - 1 மட்டும் அனுப்பி பதிவு செய்யவும்.

ஆரம்பம் - 25.02.11 நிறைவு: 10.03.11இல்

விவரங்கட்கு:
கலாநிதி கூ. ஸ்ரீரெங்கநாதன்
T.P. 0777680102, 0724222989





SONDERRKAUF
-70%
Auf alle markierten Artikel
Möbel Ferrari
Wässeristrasse 28
HINWIL Tel 044 931 20 40 Fax 044 931 20 49
www.moebel-ferrari.ch
Direkt-Kedit
– 6 Monate ohne Zins